உதயன்

சுடர் 30 கதிர் 213 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 12,சனிக்கிழமை 27.06.2015




# அதிகாலையில் கலைக்கப்பட்டது நாடாளுமன்றம்

## ஒகஸ்ட் 17 ஆம் திகதி தேர்தல் ஜுலை 6 முதல் வேட்புமனு



யாழ்ப்பாணம், ஜூன் 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், நாடாளுமன்றம் இன்று அதிகாலை கலைக்கப்பட்டது. அதனடிப்படையில், எட்டாவது நாடாளுமன்றத்துக்குரிய பொதுத் தேர்தல் ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தேர்தலுக்குரிய வேட்பு மனுத் தாக்கல் ஜுலை 6 ஆம் திகதி முதல் ஜுலை 15 ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும், புதிய பக்.24

## மனித உரிமை அறிக்கை செப்ரெம்பர் கட்டாயம்

*சுமந்திரன் எம்.பி நம்பிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 27

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான அறிக்கை கட்டாயமாக வெளிவரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை செப்ரெம்பர் மாதம் வர இருக்கின்றது. மார்ச் மாதம் வெளிவர இருந்த அறிக்கை, ஒரு தடவை மாத்திரம் ஒத்தி வைக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் செப்ரெம்பர் மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், திட்டவட்டமாகச் செப்ரெம்பர் மாதம் அறிக்கை வெளிவரும் என்று தெரிவித்திருந்தார். அதனடிப்படையில், எதிர்வரும் செப்ரெம் பக்.22

## மஹிந்தவைச் சந்தித்து பேசவில்லை மைத்திரி

*ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு மறுப்பு*

கொழும்பு, ஜூன் 27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, சபாநாயகரின் இல்லத்தில் தான் சந்தித்துப் பேச்சு நடத்தியதாக கொழும்பு ஊடகங்களில் வெளியான செய்திகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்றாக மறுத்துள்ளார்.

"அவ்வாறு ஒரு சந்திப்பு இடம்பெறவேயில்லை" என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் இல்லத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது. இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பக்.22

## புலிகளின் முகாம்களுள் நுழைந்து தாக்கினேன்

மிருசுவில் கொலை வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட படைச் சிப்பாய் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

ஏனைய படைச் சிப்பாய்கள் பயந்து போயிருந்த போது நான் விடுதலைப் புலிகளின் முகாம்களுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினேன் என மிருசுவில் படுகொலை வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியைச் சேர்ந்த சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன் பக்.22

## மிருசுவில் கொலையாளி விடுதலைக்காக பேஸ்புக்



யாழ்ப்பாணம், ஜூன் 27

மிருசுவில் படுகொலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்காவை, போர் வெற்றி வீரனாகப் போற்றி அவனின் விடுதலைக்காக முகநூலில் (பேஸ்புக்), ஒரு பக்கம் திறக்கப்பட்டு 24 மணி நேரத்தினுள்ளேயே அதில் 11 ஆயிரம் பேர் இணைந்துள்ளனர்.

மிருசுவில் பகுதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு, எட்டுத் தமிழர்களை கொலை செய்து புதைத்த சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிக்கு நீதிமன்றம் நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை விதித்தது. 15 வருடங்களின் பின்னர் நீதி கிடைக்கப் பெற்றமை தொடர்பில், படுகொலை செய்யப்பட்டவர்களது பக்.22

## போதைக்கு எதிராக நேற்று திரண்ட வடக்கு மாணவர்

5 மாவட்டங்களிலும் பேரணிகள்



யாழ்ப்பாணம், ஜூன் 27

சர்வதேச போதைப் பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல் என்பவற்றுக்கு எதிரான நேற்றைய தினத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டை வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர்.

போதைப் பாவனை, சட்டவிரோதக் கடத்தல், முகநூல் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், மதுப் பாவனை, புகையிலைப் பாவனை, தெரு விபத்து, மாணவர் சீரத் தண்டனை, வீண் வார்த்தைப் பிரயோகம் ஆகியனவற்றுக்கு எதிராக விழிப்பூட்டும் வகையில் நேற்று ஊர்வலங்கள், கவனவீர்ப்புப் போராட்டங்கள், விழிப்புணர்வுப் பேரணிகள், விழிப்புணர்வு நாடகங்கள் என்பனவற்றையும் மாணவர்கள் முன்னெடுத்தனர். வடக்கிலுள்ள 5 மாவட் பக்.24

## ஆயுதக் குழுக்களுடன் ராணுவம் இன்னமும் தொடர்பில் உள்ளது

சுட்டிக்காட்டுகிறது அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 27

இலங்கை இராணுவத்துக்கும், துணை ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் இன்னமும் தொடர்புகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்கா, 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது சட்ட மீறல்களில் ஈடுபட்ட ஒருவரேனும் பக்.24

## போர்க் குற்றங்களை உடன் விசாரிக்குக

இலங்கையை அழுத்துகிறது ஐ.நா.

நியூயோர்க், ஜூன் 27

அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினருடன் இலங்கை அரசு பரந்தளவில் கலந்தாலோசித்துப் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் பக்.24

## அங்கீகாரமற்ற மது நிலையங்களை தேடிக் கண்டுபிடித்து நடவடிக்கை

யாழ். மதுவரி அதிகாரிகளுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்தில் செயற்படும் அங்கீகாரமற்ற மதுபான விற்பனை நிலையங்களைத் தேடுதல் மூலம் கண்டுபிடித்து, அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மதுவரி ஆணையாளர் நாயகம் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில், யாழ்ப்பாணத்திலுள்ள மதுவரி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற 30 ஆவது அமர்வில், வடக்கில் இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதிப் பத்திரம் தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டும். மேலும், பொது இடங்களிலிருந்து குறிக்கப்பட்ட தூரத்தை விடக் குறைவான தூரத்தில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதியை ரத்துச் செய்ய வேண்டும். பக்.24



*இலங்கைக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி கலாநிதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம், நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா ஆகியோரும் கலந்து கொண்டனர்.* (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நேற்றுமுன்தினம் காலை மானிப்பாய் பொலிஸாரால் 6 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் ஒன்று மடக்கிப் பிடிக்கப்பட்டது. அந்தக் கும்பலிடம் இருந்து 7 இலட்சம் ரூபா பணம் மற்றும் நகைகள், இலத்திரனியல் பொருள்கள், வாள், மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# வலி.வடக்கில் மீள்குடியமர தற்போதும் மக்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 27
வலி.வடக்கில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீள்குடியமர்வுக்காகப் பதிவு செய்துள்ள 819 குடும்பங்களில் 484 குடும்பங்கள் முன்னர் பதிவு செய்யாமல் தற்போதே பதிவுகளை மேற்கொண்டுள்ளன என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தநிலையால் வலி. வடக்கில் மீளக்குடியமர வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை தற்போதுள்ள தரவுகளை விட அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

வலி.வடக்கில் இடப்பெயர்வுக்கு முன்னர் – 1990ஆம் ஆண்டு 23 ஆயிரத்து 351 குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 618 பேர் வசித்தனர். தற்போது 11 ஆயிரத்து 819 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 762 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர். மீள்குடியமர்வுக்காக 9 ஆயிரத்து 968 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 368 பேர் பதிவு செய்துள்ளனர்.

ஆயினும் மீளக்குடியமர்வதற்காக பதிவு செய்த 9 ஆயிரத்து 968 குடும்பங்களில், தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் 335 குடும்பங்கள் மாத்திரமே குடியமர்ந்துள்ளனர். அதேவேளை, முன்னர் பதிவு செய்யாமல், தற்போது காணி விடுவிக்கப்பட்ட பின்னர் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த 484 குடும்பங்கள் மீளக்குடியமர்வதற்கு பதிவு செய்துள்ளன. இவ்வாறு பதிவு செய்யாமல், இன்னமும் அதிகளவிலான குடும்பங்கள் இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 839 ஏக்கர் நிலப் பரப்பு இன்னமும் விடுவிக்கப்பட வேண்டும் என்று, வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. (ற-5)

# உருத்திரபுரம் சிறுமி விடயத்தில் இன்னமும் நீடிக்கின்றது மர்மம்

## விமான நிலையங்களுக்கும் படம் அனுப்பி வைப்பு

கிளிநொச்சி, ஜூன் 27
கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமற்போன 3 வயதுச் சிறுமி பற்றி எதுவித தகவல்களும் இதுவரை கிடைக்காததை அடுத்து சிறுமி வெளிநாட்டிற்கு கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் சிறுமியின் புகைப் படங்கள் நேற்று விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சி எள்ளுக்காட்டு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாயார் குளிக்கச்சென்ற போது தனியாக இருந்த தயா விதுஷா என்னும் மூன்று வயதுச் சிறுமி காணாமற்போயிருந்ததாக சிறுமியின் தாயார் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்திருந்தார். அதையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த கிளிநொச்சி பொலிஸார் சிறுமியின் – 14 வயது சிறுவன் உட்பட உறவினர்களிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதில் சிறுவனாலும் உறவினர்களாலும் சிறுமி தொடர்பாக குழப்பமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இந் நிலையில் கடந்த 5 நாள்களாக கிளிநொச்சி பகுதி எங்கும் சிறுமியை தேடும் நடவடிக்கையில் கிளிநொச்சி பொலிஸார் ஈடுபட்டிருந்ததோடு சிறுமியின் தாயார் உட்பட 7 நபர்களிடம் வாக்கு மூலங்களை பெற்று கொண்டனர்.

வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு காணாமற்போன சிறுமி பணத்திற்காக விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தாயார் குளிக்கசென்ற போது தனியாக இருந்த தயா விதுஷா என்னும் மூன்று வயதுச் சிறுமி காணாமல் போயிருந்ததாக சிறுமியின் தாயார் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்திருந் தார்.

அந்த வகையில் குறித்த சிறுமி வெளிநாட்டுக்கு கடத்தப்படலாம் என்ற சந்தேகத்தின் பேரில், விமான நிலையத்துக்கு சிறுமியினது புகைப் படங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை யாழ்ப்பாணத்துக்குச் சிறுமி அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்ட நிலையில், அங்கும் பொலிஸாரின் விசாரணைக் குழு ஒன்று சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

மனிதத் தன்மையற்ற முறையில் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி வித்தியாவின் 45ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் பாடசாலை மாணவ, மாணவிகள், ஊர் மக்கள், சமயத் தலைவர்கள் எனப் பலரும் மாணவிக்கு அகல் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (ற-4)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதமே பிரபாகரனை புலியாக்கியது

## ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27
இலங்கையில் தொன்று தொட்டு இருந்து வந்த இனவாதம்தான் வேலுப்பிள்ளை பிரபாகரனை விடுதலைப் புலி பிரபாகரனாக மாற்றியது. இதை இந்த நாட்டின் அனைத்து இன அரசியல் தலைவர்களும் மனதில் கொள்ள வேண்டும். நாட்டின் இன விரிசலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம் காரணமல்ல என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.
இந்து – பௌத்த கலாசார பேரவை விழா, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சிங்கள மொழியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சிங்கள – தமிழ் அல்லது இந்து – பௌத்த ஐக்கியம் என்பது நல்ல விடயம்தான். ஆனால், இந்த ஐக்கியம் என்பதற்கு இருக்கின்ற முதன்மை நிபந்தனையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் சமத்துவம் என்பதாகும். மொழிகள், மதங்கள், இனங்கள் மத்தியில் சமத்துவம் இருக்க வேண்டும். எங்கே சமத்துவம் இருக்கின்றதோ அங்கே ஐக்கியம் தழைக்கும். எங்கே சமத்துவம் இல்லையோ அங்கே ஐக்கியம் காணாமற்போய்விடும்.
நடந்து முடிந்த போருக்கும், இன்றைய நமது எல்லா துன்பங்களுக்கும், இனங்களுகிடையேயான விரிசல்களுக்கும் பிரபாகரனே காரணம் என்ற கூற்றை இந்த நாட்டு அரசியல் தலைவர்கள் கைவிட வேண்டும். அது அப்படியல்ல.
உண்மையில் இந்த நாட்டில் தொன்று தொட்டு இருந்து வந்த இனவாதம்தான் வேலுப்பிள்ளை பிரபாகரனை விடுதலை புலிப் பிரபாகரனாக மாற்றியது. இன வாத ஆரம்பத்திற்கு அன்றைய அரசுகளும், சிங்கள தலைவர்களும், தமிழ் தலைவர்களும் காரணமாக அமைந்தார்கள்.
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பின்பாதி காலகட்ட நடவடிக்கைகள் சில இனவிரிசலுக்கு காரணமாக அமைந்தன என்பதும் உண்மைதான். ஒட்டுமொத்தமாக எல்லா பழிகளையும் புலிகளின் மீது போட்டுவிட்டு தப்பும் முயற்சிகளை நாம் ஏற்க முடியாது. போர் நடந்தமைக்கான காரணங்களை கண்டறிந்து தீர்வு காண்பதற்கு இந்த புரிந்துணர்வு அவசியம் – என்றார். (ற–5)

# வடக்கு முதலமைச்சருக்கு 20 நாள்களுக்கு விடுமுறை

## வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொள்வதால்

யாழ்ப்பாணம், ஜூன் 27
வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனுக்கு நேற்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரையான 20 தினங்களுக்கு ஜனாதிபதி செயலகம் விடுமுறை அனுமதித்துள்ளது.
வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை நேற்று ஆரம்பித்திருந்தார். அந்த 20 தினங்களிற்கும் விடுமுறை வேண்டி ஜனாதிபதி செயலகத்துக்கு விண்ணப்பித்திருந்தார்.
அதன் பிரகாரம் வட மாகாண முதலமைச்சரின் விடுமுறை குறித்த 20 தினங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அனுமதிக்கப்பட்ட கடிதப் பிரதி வடமாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
(ற)

# பிணையில் வெளியே வந்தவர் நீதிமன்றத் தாக்குதலில் கைது

## பிணை இரத்தாகும் நிலைமை இப்போது

யாழ்ப்பாணம், ஜூன் 27
கொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்து பிணையில் வந்தவர் யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது அண்மையில் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். அதையடுத்து அவருக்கு வழங்கப்பட்டுள்ள மேல்நீதிமன்ற பிணையை இரத்துச் செய்து மீண்டும் அவரை விளக்கமறியலில் வைப்பதற்காக வழக்கு அழைக்கப்பட்டுள்ளது.
யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. 2009 ஆம் ஆண்டு கோப்பாய் பகுதியில் இரத்தினம் மணிவண்ணன் என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில்கிருஸ்ண பிள்ளை பிறேமன் என்பவருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கிலிருந்து குறித்த எதிரி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.
அவர் தொடர்பான வழக்கு நேற்று மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளளார் என்று மேல்நீதிமன்றுக்குக் கூறப்பட்டது.
பொதுவாகக் குற்றம் சுமத்தப்படும் எதிரி பிணையில் வந்து எதுவித சட்டவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபடமாட்டார் என்ற அடிப்படையிலே பிணையில் விடுவிக்கப்படுவார். அவ்வாறு பிணையில் உள்ள காலத்தில் – வழக்கு நிறைவடையும் வரை அவர் நன்னடத்தையில் ஈடுபடுவார் என்ற நிபந்தனையுடனேயே அவர் பிணையில் விடுவிக்கப்படுவது வழமை. அவ்வாறே குறித்த எதிரியும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.
ஆனால் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியமை சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதனால் மேல்நீதிமன்ற பிணை நிபந்தனையை மீறியுள்ளார். நன்னடத்தை இல்லாது இன்னொரு குற்றத்தைப் புரிந்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.
அது மேல்நீதிமன்றை மீறிய செயல். எனவே அவரது பிணையை இரத்துச் செய்வது தொடர்பான விசாரணைக்காக வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் குறித்த எதிரியை யாழ்.மேல்நீதிமன்றில் முற்படுத்துமாறும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மேல்நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
(ற–4)

## பொலிஸ் காவலில் இருந்த ஒருவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 27
களவு சம்பவமொன்றில் சந்தேக நபராக கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கூரிய சவர அலகால் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கடந்த 20ஆம் திகதி இளவாலையில் உள்ள சென். ஜேம்ஸ் ஆலயத்தின் உண்டியல் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் களவாடப்பட்டிருந்தது. இது பற்றி இளவாலைப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. பொலிஸார் விசாரணையின் பின்னர் இச்சம்பவம் தொடர்பாக இளவாலையைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.
இதன் போது குறித்த நபர் தான் வைத்திருந்த சவர அலகினால் தனது கழுத்துப் பகுதியை அறுத்துள்ளார். இதனையடுத்து கழுத்தில் காயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.
(ற–103)

# மறைத்துக் கொண்டுவரப்பட்ட மதுபான போத்தல்கள் சிக்கின



யாழ்ப்பாணம், ஜூன் 27
போதைப்பொருள் பாவனைக்கு எதிரான போராட்டங்கள் நேற்று மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், வழித் தட அனுமதியின்றி – சட்ட விரோதமாக யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்ட 394 போத்தல் மதுபானங்களைத் தாம் நேற்றுக் கைப்பற்றியதாக யாழ்.பிராந்திய விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்.குடாநாட்டில் இயங்கும் மதுபானச் சாலைகளுக்கு விநியோகிக்கும் நோக்கில் வழித்தட அனுமதி பெறாது கணக்கிடப்படாத மதுபானங்களை சட்ட விரோதமான முறையில் ஓர் பார ஊர்தியில் எடுத்து வரப்பட்டபோதே அவை பொலிஸாரிடம் சிக்கியுள்ளன. குறித்த மது பானங்களை எடுத்து வந்த பார ஊர்தி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றை எடுத்து வந்த சுன்னாகத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் கைப்பற்றப்பட்ட மதுபானங்களும் இன்று யாழ்.நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற–4,101)

# மாநகர சபை உறுப்பினர் கோமகன் வவுனியா நீதிமன்றத்தால் விடுதலை

## புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் இருந்து

யாழ்ப்பாணம், ஜூன் 27
புலிகளுக்கு உதவி செய்த குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பிலிருந்த யாழ்.மாநகர சபை உறுப்பினர் கோமகன் வவுனியா மேல்நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.
முருகையா கோமகன் யாழ்.மாநகர சபை உறுப்பினராக இருந்த போதே 2012 ஆம் ஆண்டு பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். புலிகளுக்கு உதவியதாகக் குற்றஞ் சாட்டியே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.
அவர் தொடர்பான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. அவருக்கு எதிரான ஒரேயொரு ஆதாரம் அவர் வழங்கியதாகக் கூறப்பட்ட வாக்குமூலம் மாத்திரமே.
நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
அதன்போது, அவர் வழங்கியதாகக் கூறிச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவர் வழங்கியது அல்ல என்பது விசாரணையின் மூலமாகக் கண்ட மேல் நீதிமன்று அவருக்கு எதிரான வேறு எந்த ஆதாரமும் இல்லாததால் அவரை நிரபராதியாகக் கண்டு விடுதலை செய்வதாக நேற்றுத் தீர்ப்பில் அறிவித்தது.
வழக்குத்தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி நிசாந்தன் நாகரத்தினம் நெறிப்படுத்தியிருந்தார். எதிரி சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் முன்னிலையாகி வாதாடியிருந்தார். எனினும் கோமகனுக்கு கொழும்பு மேல்நீதி மன்றில் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.
(ற–4)

# யுவதியை அச்சுறுத்தி தொடர் துஷ்பிரயோகம் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது

நெல்லியடி, ஜூன் 27
20 வயது யுவதி ஒருவரை அச்சுறுத்தி ஒரு மாத காலமாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 22 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் நடந்துள்ளது.
குறித்த யுவதி சந்தேக நபரின் வீட்டுக்கு அண்மையில் வசிப்பவர் என்றும் கடந்த 2 ஆம் திகதி யுவதி தேவை கருதி அதிகாலை ஒரு மணியளவில் வீட்டின் வெளியே வந்தபோது அவரின் வாயைப் பொத்தி அருகே உள்ள வளவொன்றுக்குள் இழுத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதன்பின்னர் யுவதியின் தொலைபேசி இலக்கத்தை ஒருவாறு பெற்று அதன்மூலம் யுவதியை அச்சுறுத்தி கடந்த ஒரு மாத காலமாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்றும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டு[illegible].
குறித்த யுவதி கடந்த [illegible] பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்ய வந்தபோதும் யுவதியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சந்தேகநபர் அச்சுறுத்தியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த புதன்கிழமை பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் சந்தேகநபரை பருத்தித்துறை நகரப்பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவ[illegible] தின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
(ற–109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வேள்ட் விஷன் நிறுவனத்தால் 18 முன்பள்ளிகளுக்கும், 220 பயனாளிகளுக்கும் போசாக்குத் திட்டத்தின் கீழ் நிலக்கடலை வழங்கப்பட்டது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வேள்ட் விசன் நிறுவனத்தால் போசாக்குணவு வழங்கும் திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறார்களின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-219)

# ராணுவ வாகனம் மோதி முதியவர் ஒருவர் காயம்

## பரந்தன் – முல்லைதீவு வீதியில் சம்பவம்



கிளிநொச்சி, ஜூன் 27

வேகமாக வந்த இராணுவ ஜீப் வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடி தண்ணீர் எடுக்கச் சென்ற முதியவரை மோதி வயலுக்குள் பாய்ந்து கவிழ்ந்தது. அதில் பலத்த காயமடைந்த முதியவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை பரந்தன் முல்லைதீவு வீதியில் விசுவமடுவில் நடந்துள்ளது. விசுவமடுவை சேர்ந்த செல்லையா பரராசசிங்கம் (வயது – 70) என்பவரே காய மடைந்தவராவார்.

விசுவமடுவில் உள்ள தனது வீட்டில் இருந்து குடிதண்ணீர் எடுப்பதற்காக சைக்கிளில் ஏ–35 வீதியை கடந்து சென்ற போது வேகமாக வந்த இராணுவ ஜீப் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முதியவரை மோதி வயல் காணிக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்வாறு ஜீப் வாகனம் விபத்துக்குள்ளான போதும் அதில் பயணித்த இராணுவ சிப்பாய்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் வீதியின் கரையில் மஞ்சள் கோட்டு பக்கமாக வீதியை கடந்த முதியவரே பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

வாகனம் விபத்துக்குள்ளான போது அந்த சம்பவத்தை செய்தியாக்குவதற்கு சென்ற பிராந்திய செய்தியாளர்களை இராணுவத்தினர் செய்தி சேகரிப்புக்கு தடைவிதித்ததாக பிராந்திய செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற–21)

# உதவுவது போன்று கொள்ளையிட முயற்சி!

திருகோணமலை, ஜூன் 27

விபத்து நடந்த இடத்தில் உதவி செய்வதாக கூறி பொருள்களைக் கொள்ளையடிக்க முற்பட்டுள்ள சம்பவம் திருகோணமலையில் நடந்துள்ளது.

திருகோணமலை பொதுவைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் தனது கடமை முடித்து வீட்டுக்குத் திரும்பியுள்ளார். திருகோணமலை மட்டிக்களி சந்திக்கு அருகில் துவிச்சக்கர வண்டியில் வந்த நபர் ஒருவரும், மோட்டார் சைக்கிளில் சென்ற வைத்தியரும் நேருக்கு நேர் மோதி இருவரும் காயமடைந்தனர்.

இதனைக் கண்ட வீதியால் வந்த இரண்டு இளைஞர்கள் வைத்தியரை அணுகி அவருக்கு உதவுவது போல் நடித்து வைத்தியரின் மடிக்கணினியையும், மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் செல்ல முற்பட்டுள்ளனர். ஆயினும் தன்னை சுதாகரித்துக்கொண்ட வைத்தியர் கூச்சலிட்டு சத்தம் போட்டார். பொதுமக்கள் ஒன்று கூடமுன்னர் தாம் தப்பிக்க வேண்டும் என்ற நோக்கில் மோட்டார் சைக்கிளையும், மடிக்கணினியையும் கைவிட்டு இரண்டு இளைஞர்களும் தப்பிச் சென்றுள்ளனர்.

அதன்பின் சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியரின் நண்பர்கள் வைத்தியரையும், காயமடைந்த மற்றவரையும் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (ற–10,40)

# கசிப்புக் காய்ச்சிய இருவர் சிக்கினர்

## பருத்தித்துறை பொலிஸாரிடம்



மாங்குளம், ஜூன் 27

வடமராட்சி அல்வாய் பகுதியில் சட்ட விரோதமான மதுவான கசிப்பு மற்றும் கோடா போன்றவற்றை விற்பனை செய்த இருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வு பிரிவினர் கொடுத்த தகவலையடுத்து அல்வாய் வடக்கு பகுதியிலுள்ள பனங்காணிப் பகுதியில் சட்ட விரோதமான மதுவை விற்பனை செய்த இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்களிடம் இருந்து கசிப்பு 15 போத்தல்களும், கோடா 25லீற்றரும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது. (ற–422)

# மட்டக்களப்பு சிறைக் கைதிகள் போதைக்கு எதிராக பேரணி

மட்டக்களப்பு, ஜூன் 27

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை சிறைக்கைதிகள் போதைப் பொருள் பாவனைக்கெதிரான விழிப்புணர்வு பேரணியில் ஈடுபட்டனர்.

உலக போதை ஒழிப்பு தினத்தையொட்டி மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைக் கைதிகள் ஆகியோரால் இந்த விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். வி.எச்.பிரியங்கர மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம ஜெயிலர் ஆர்.மோகனராஜ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள், சிறைச்சாலை நலன்புரி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

'வேண்டாம் வேண்டாம் புகைத்தல் வேண்டாம்', 'புகைத்தலில் இருந்து விடுபடுவோம்', 'புகைத்தல் இல்லாத இலங்கையை அமைத்துக் கொள்ள ஒன்றிணைந்து செயற்படுவோம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை பேரணியில் ஈடுபட்ட சிறைக் கைதிகள் ஏந்தியிருந்தனர்.

போதைப் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபடல் போன்ற விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ற–10)

# புலோப்பளை ஆயுள்வேத மருந்தகத்தில் ஒழுங்கான சேவைகள் கிடைப்பதில்லை

## அங்கு சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

பளை பிரதேச சபையின் புலோப்பளை ஆயுள்வேத மருந்தகத்தில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் தாம் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெறுவதற்கு முற்பதிவு செய்து திகதி எடுக்க வேண்டுமா? என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அங்கு சிகிச்சைக்குச் சென்றால் அங்கு பணியாற்றுபவர்கள் அடுத்த வாரம் வருமாறு கூறுகின்றனர் என்றும் நோயளர்கள் விசனிக்கின்றனர்.

பளை பிரதேச சபையால் புலோப்பளை மற்றும் முள்ளிப்பற்று ஆகிய உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆயுள்வேத மருந்தகங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அங்கு மருத்துவருடன் ஊழியர்களும் பணிபுரிகின்றனர்.

தற்போது ஆயள்வேத மருந்தகங்களுக்குச் செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் புலோப்பளையில் இயங்கும் ஆயுள்வேத மருந்தகத்துக்கு வடமராட்சி கிழக்கு, கிளாலி, எழுதுமட்டுவாழ், பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற வருகின்றனர்.

ஆயினும் அங்குள்ள மருத்துவர் நினைத்த நேரம் வருவதால் தாம் காலையில் இருந்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது என்று நோயாளர்கள் கூறுகின்றனர். மு.ப. 11 மணிக்குப் பின்னர் மருத்துவர் வரமாட்டார் போய் அடுத்த வாரம் வாருங்கள் என அங்கு பணியாற்றுவோர் தெரிவிக்கின்றனர். சுமார் நான்கு மணி நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் – வெறுப்புடன் தாம் வீடு திரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தூர இடங்களிலிருந்து ஓட்டோ வாகனங்களில் வரும் முதியவர்கள் மருந்தும் பெற முடியாத நிலையில் ஓட்டோவுக்கும் அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலையில் வீடு திரும்புவதாகத் தெரிவித்தனர்.

ஆயுள்வேத மருந்தகத்தில் கடமையாற்றம் மருத்துவர் மாற்று ஒழுங்கு இல்லாமல் திடீரென விடுமுறை எடுப்பதால் நோயாளர்கள் பாதிப்படைவதாகவும் இது தொடர்பாக பிரதேச சபையில் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு வின வினோம். புலோப்பளை ஆயுள்வேத மருத்துவர் கடந்த ஒரு மாதமாக பயிற்சிக்காகச் செல்கின்றார். முள்ளிப்பற்று ஆயுள்வேத மருந்தக மருத்துவர் பதில் கடமைக்காக அழைக்கப்படுகின்றார். ஆயினும் அங்கும் அதிகரித்த நோயாளர்கள் வருகை தருவதால் பதில் கடமைக்கு வரமுடியாத நிலை ஏற்படுகின்றது. மாற்று ஒழுங்கு தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளோம். – என்று பதிலளிக்கப்பட்டது.

இது தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, மருத்துவர் பற்றாக்குறை தொடர்பாக மருத்துவர்களை நியமனம் செய்யும் மத்திய சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை என்றார். (ற–4,9)

# குணமடைந்தவரை அழைத்துச் செல்லக் கோரிக்கை

வல்லிபுர ஆழ்வார் கோயிலிலிருந்து கடந்த மே மாதம் 16 ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட சுப்பிரமணியம் பொன்னையா (வயது – 66) குணமடைந்துள்ளார். இவரை உறவினர்கள் யாராவது பொறுப்பேற்று அழைத்துச் செல்லுமாறு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வி.ஜெயராஜ் கோரியுள்ளார். (ற–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சியில் இடமில்லாதபோது மஹிந்தவுடன் பேச்சில்லை

### அமைச்சர் ராஜித கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கட்சியில் இடமில்லாத போது அவருடன் அரசியல் பேச்சு நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. மஹிந்தவுடன் அரசியல் பேச்சு நடத்த எந்தத் திட்டமும் எம்மிடம் இல்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர் ராஜித சேனாரத்ன பேச்சு நடத்தியுள்ளதாக செய்திகள் கசிந்துள்ள நிலையில், அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கட்சியில் பிரதமர் பதவி வழங்கப்பட மாட்டாது என்று நான் குறிப்பிட்டது இன்று பொய்யாக மாறிவிட்டதா? நான் கூறியது பொய் என்றால் இப்போதைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மஹிந்த ராஜபக்ஷ பலமான நிலையில் இருந்திருக்க வேண்டும்.

அவரே அடுத்த பிரதமர் வேட்பாளர் என ஜனாதிபதி தெரிவித்திருப்பார். ஆனால் நான் அன்று தெரிவித்த விடயத்தையே மறுநாள் ஜனாதிபதி ஒரு கூட்டத்தில் தெரிவித்துள்ளார். அதேபோல் கட்சி மட்டக் கூட்டங்களிலும் அதே கருத்தையே அவர் தெரிவித்துள்ளார். ஆகவே நான் கூறிய விடயங்கள் உண்மையானவை என்பதை இப்போது அனைவராலும் விளங்கிக் கொள்ள முடியும்.

அதேபோல் கட்சி இன்று ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் வேலைத் திட்டங்களை செய்து வருகின்றது. கட்சிக்குள்பலர் ஜனநாயகப் பாதையை தெரிவு செய்து அந்தப் பாதையில் எம்முடன் கை கோர்த்து நடக்கின்றனர். ஆனால் இன்னும் சிலர் கட்சிக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்திசர்வாதிகாரத்தை வலுப்படுத்த நினைக்கின்றனர். இப்போது இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அப்போது இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்ல. அந்தக் கட்சியில் சர்வாதிகாரப் பாதை மட்டுமே திறந்திருந்தது. அந்தப் பாதையில் இன்று பயணிக்க முடியாது. கட்சியின் தலைவர் பயணிக்கும் பாதையில் தொண்டர்கள் பயணிக்க வேண் டும். கட்சிக்குள் இரண்டு பயணத்தை மேற்கொள்ள முயன்றால் அது கடினமானது. ஆகவே இப்போது இருக்கும் நிலைமையில் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியை நீங்கள் சந்தித்துப் பேசியதாக தகவல்கள் வெளிவந்துள்ளதே என்று அவரிடம் கேட்கப்பட்டபோது,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இன்று (நேற்று) காலை நான் பேச்சு நடத்தினேன். அந்தப் பேச்சில் எந்தவித அரசியல் நோக்கங்களும் இல்லை. இன்றும் மஹிந்த எனது நல்ல நண்பராகவே உள்ளார். மஹிந்த மட்டும் அல்ல அவரது குடும்ப உறுப்பினர்களுடனும் நான் இன்றும் நெருங்கிய பழக்கத்தை வைத் துள்ளேன். ஆகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் சாதரண மாக பல விடயங்களைக் கதைத் தேன். அவரது உடல்நிலை மற்றும் உறவினர்கள் பற்றி விசாரித்தேன். அதைத்தவிர வேறு எந்த அரசியல் கலந்துரையாடலும் நடைபெற வில்லை. அரசியலில் சேர்த்துக் கொள்ள விரும்பாத ஒருவருடன் அரசியல் பேசுவதில் அர்த்தம் இல்லை. – என்றார். (ற)

# வாலைச் சுருட்டிக் கொண்டிருந்தோர் இன்று வீரர்களாக வாய் திறக்கின்றனர்

### நாடாளுமன்றில் மங்கள சாட்டை



கொழும்பு, ஜூன் 27

கே.பி. தலைமையில் 22 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கோத்தபாயவுடன் பேச்சு நடத்திய போது எலிகளை விழுங்கிய பூனைகளைப் போல் வாலை சுருட்டிக் கொண்டிருந்தவர்கள் இன்று வீரர்களாகி வாய் திறக்கின்றனர் என்று நேற்றுமுன்தினம் சபையில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எம்.பி. தேசிய பாதுகாப்பு தொடர்பாக முன் வைத்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களோடு நான் பேச்சு நடத்தியதைப் பெரிதுபடுத்தி அதற்கெதிரான கருத்துக்களை அபேராம குழு வெளியிட்டு வருகிறது. விமல் வீரவன்ச இதில் முன்னணியில் உள்ளார். ஒரு சிலர் நீதிமன்றம் செல்லப் போவதாக கூறுகிறார்கள்.

ஆனால் இன்று புலம்பெயர் தமிழ் அமைப்புக்களோடு பேசுவதற்கு எதிராக கூச்சலிடுகின்றனர் அன்றைய ஆட்சியிலும் அமைச்சர்களாக இருந்தவர்கள் அப்போது கே.பி. தலைமையில் 22 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை சேர்ந்தோர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். அன்றைய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த அமைப்புக்களோடு பேச்சு நடத்தியுள்ளார்.

அது மட்டுமல்ல புலிகளுக்கு சர்வதேச ரீதியில் நிதி சேகரித்த தர்மலிங்கம் யோகேஸ்வரன் என்பவரை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தினார். இன்று கூச்சலிடுவோர் அன்று எலிகளை விழுங்கிய பூனைகளைப் போல் வாலைச் சுருட்டிக் கொண்டு மௌனமாக இருந்தனர்.

வாலைச் சுருட்டிக் கொண்டிருந்தவர்கள் இன்று வீரர்களாகி விட்டனர். புலம்பெயர் அமைப்புக்களுடன் அரசியல் தீர்வு தொடர்பாகவோ போர் குற்ற விசாரணைகள் தொடர்பாகவோ பேச வில்லை.

மாறாக இலங்கையின் அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்தவர்களின் நிபுணத்துவத்தையும் பங்குபற்றுதலையும் பெற்றுக் கொள்வது தொடர்பாகவே பேசினோம்.

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்ளக விசாரணைகளே நடத்தப்படும். இந்தத் தீர்மானத்தில் எந்த விதமான மாற்றமும் இல்லை.

அதேவேளை உள்ளக விசாரணைக்கு சர்வதேசத்தின் உதவிகள் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். – என்றார். (ற)

## ‘20’ நடைமுறைப்படுத்தப்பட்டால் 5 முஸ்லிம் எம்.பிக்கள் கூட இல்லை

### எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 27.

புதிய தேர்தல் முறையான 20ஆவது திருத்தம் நடைமுறைக்கு வருமாக இருந்தால், இந்த நாட்டில் ஐந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட முஸ்லிம்கள் தெரிவு செய்ய முடியாதென்று முன்னாள் பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லாஹ் தெரிவித்தார்.

400 வருடங்கள் பழமையானது என்று தொல்பொருள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏறாவூர் ஆற்றங்கரை முஹிய்யித்தீன் ஜும்மா பள்ளிவாசலை புனரமைத்து திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தின்ம வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

20ஆவது அரசியல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுமாக இருந்தால், இப்பொழுது நாடாளுமன்றத்திலுள்ள 20 உறுப்பினர்கள் என்ற முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தில் முழு இலங்கையிலிருந்தும் ஐந்தைக் கூட முஸ்லிம்கள் பெற்றுக்கொள்ள முடியாது

கண்டி மாவட்டத்தில் இப்பொழுது 4 பேர், வன்னியில் 3 பேர், மட்டக்களப்பில் 2 பேர் எனத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இருபதாவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்படுமாக இருந்தால், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்து ஒருவரைக் கூடத் தெரிவுசெய்ய முடியாத நிலை தோன்றும்.

அதேபோன்று ஏனைய பகுதிகளிலும் இடம்பெறும். வன்னி மாவட்ட முஸ்லிம்கள் 100 சத வீதம் வாக்களித்தாலும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கூட புதிய திருத்தத்தில் பெறமுடியாது. மட்டக்களப்பிலும் அவ்வாறே. சிறுபான்மையினருக்கு பயங்கர மான, ஆபத்தான தேர்தல் முறையை அமைச்சரவை இப்பொழுது அங்கீகரித்துள்ளது. சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயம் தொடர்பில் பேசியிருக்கின்றார்கள்.

முஸ்லிம்கள் கடும் எதிர்ப்பை காட்டியதால், உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு பொதுத் தேர்தலுக்கு போவதற்கும் இரவோடிரவாக பேச்சு நடந்தது. ஆனால் ஜாதிக ஹெல உறுமய, பௌத்த தேரர்கள், மகா சங்கத்தினர் ஆகியோர் ஜனாதிபதிக்கு கொடுத்த கடுமையான அழுத்தம் காரணமாக எதிர்பார்த்தபடி நாடாளுமன்றம் கலைக்கப்படவில்லை.

என்ன விலை கொடுத்தாவது 20 ஆவது சட்டத்திருத்தத்தை அங்கீகரித்ததன் பின்னரே நர்டாளுமன்றத்தை கலைப்பது என்று இப்பொழுது தீர்மானம் எடுத்துள்ளார்கள். இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் வாழ்ந்துகொண் டிருக்கின்றார்கள். – என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் உட்பட கல்விமான்கள், மார்க்க அறிஞர்கள், பொது மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற)

## நல்லாட்சித் திட்டங்களில் பொதுமக்கள் திருப்தி

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவிப்பு

காத்தான்குடி, ஜூன் 27

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 100 நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணைந்ததாக கிராமங்களை அபிவிருத்தி செய்யும் இந்த செயற்திட்டம் 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்திட்டத்தின்படி ஒரு கிராமத்துக்கு 10 லட்சம் ரூபாய் என்ற ரீதியில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

– இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், பொறியியலாளருமான ஷிப்லி பாறூக் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வேலைத் திட்டங்கள் முன்னைய அரசில் அரசியல்வாதிகள் தீர்மானித்து நடைமுறைப் படுத்துகின்ற சுயலாப அபிவிருத்திக்கு அப்பால் தற்பொழுது ஏற்பட்டுள்ள நல்லாட்சியின் கீழ் மக்களின் விருப்பு வெறுப்புக்கமைய முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இத்திட்டங்களுக்கெனச் செல விடப்படும் பொதுப் பணம், விரயமில்லாமல் மக்களுடைய தேவையை நூறு வீதம் திருப்தியடையச் செய்யும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது நல்லாட்சிக்காக பாடுபட்ட மக்களுக்கு கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகும். அந்தவகையில் காத்தான்குடி பிரதேச செயலக எல்லைக்குள் 9 வீதிகளைச் செப்பனிடும் வேலைகள், 3 பல்நோக்கு கட்டடங்கள், 4 வடிகான் அமைப்பு மற்றும் வடிகான்களுக்கு மூடியிடும் வேலைகள், 2 பொது மயானங்களை துப்பரவு செய்து அழகு படுத்துகின்ற வேலைத்திட்டங்கள் என 18 வேலைத்திட்டங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் ஊடாக பொது மக்கள் சிறந்த பயனுள்ள பெறுபேறுகளை எதிர்காலத்தில் அடைய முடியும்.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் தெளிவு பிறக்கும். சாதுரியமாகப் பேசிச் சாதிப்பீர்கள். தொழில் வளம் சிறந்து, வருமானம் கூடும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்க யோகமுண்டு. பிள்ளைகளின் செயல்பாடு, பெருமையளிக்கும்.

**இடபம்:** யாரையும் விமர்சித்துப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம்; கவனம். குடும்பத்தினர் ஆதரவு, மனதுக்கு ஆறுதல் தரும். வாகனத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** செயல்களில் நிதானம் காப்பது நல்லது. தொழிலில் தடைகள் குறுக்கிட்டாலும், இலாபம் குறையாது. எதிர்பார்த்த செய்தி, தாமதமாகக் கிடைக்கும். தெய்வ வழிபாடு, நன்மைக்கு வழிவகுக்கும்.

**கடகம்:** பேச்சில் இனிமை அதிகரிக்கும். நற்செயலால், சமூக அந்தஸ்தை உயர்த்துவீர்கள். தொழிலில், திட்டமிட்ட இலக்கை, எளிதில் அடைவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிலைக்கும்.

**சிங்கம்:** மனதில் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. பெரியவர்களின் ஆலோசனையை ஏற்பது நல்லது. அரசு வகையிலான எதிர்பார்ப்பு, எளிதில் நிறைவேறும். அவசிய தேவைக்காகக், கடன் வாங்க நேரிடும்.

**கன்னி:** வெகு நாள்களாக எதிர்பார்த்த சுபச் செய்தி, தேடி வரும். மனதில் தைரியம் மேலோங்கும். தொழிலில், அபரிமிதமான வளர்ச்சியால் வருமானம் கூடும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** முக்கியமான பணியை, பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம்; கவனம். உடல் நலனில் அக்கறை காட்ட ஆரம்பிப்பீர்கள் மனைவியின் செயல்பாடு கண்டு மனம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** சவாலைத் துணிவுடன் எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு, சிறப்பாக நடந்தேறும். அரச வகையில் நன்மையை எதிர்பார்க்கலாம்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழிலில், புதிய உத்தியால் இலாபம் காண்பீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்:** அடுத்தவர் விவகாரத்தில், தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை காட்ட ஆரம்பிப்பீர்கள். தக்க சமயத்தில், நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** புதியவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழிலில், எதிர்பார்த்ததை விட இலாபம் கூடும். வாகனப் பயணத்தில், மிதவேகம் நல்லது. ஆடம்பர விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உறவினர் வரவால், வீட்டில் மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு, தாய்வீட்டு சீதனம் கிடைக்கும்.



## 18 வயதா ? 144 வயதா?

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்நத இந்தப் பெண் பார்ப்பதற்கு 144 வயதுடையவர் போல் தோற்றமளித்தாலும் மிக அண்மையில் தான் அவரது 18 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.

இவர் தனது சிறு வயதிலேயே ஒரு வகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

மரபணு குறைபாடு காரணமாக இவரது வளர்ச்சி சாதாரண மானவர்களை விட 10 மடங்கு அதிகமாக இருக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 14 வயதினிலேயே உயிரிழந்து விடுவர். ஆனால் இந்தப் பெண் தனது 18 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்திருக்கிறார்.

இதுவே அவரது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடக் காரணமாக அமைந்துள்ளது.

## அஜித் வழியில் விஜய்



வழக்கமாக அஜித்தோ, விஜய்யோ கதாநாயகனாக நடிக்கும் படங்களில் காதலிப்பது, கல்யாணம் செய்வது என்பதோடு கிளைமாக்சை நிறுத்திக் கொள்வார்கள். இப்போது குழந்தைக்குத் தந்தையாக நடிக்கும் அளவுக்கு இருவருமே தங்களது இமேஜில் மாற்றம் செய்துள்ளனர்.

ஏற்கனவே சிறுமியொருத்தின் தந்தை வேடத்தில் அஜித் நடித்துள்ளார். தற்போது விஜய் அதற்குத் தயார் ஆகியிருக்கிறார். புலி படத்தில் சிறுமியொருத்தியின் தந்தையாக நடிக்க உள்ளார். இதற்காக பல்வேறு குழந்தைகளைத் தேர்வு செய்தனர். நடிகை மீனாவின் மகள் பொருத்த மாக இருப்பார் என்று சிலர் கூற, உடனே அவரை ஒப்பந்தம் செய்ய இயக்குனர் சிம்பு தேவன் முயற்சி மேற்கொண்டிருக்கிறார். ஆனால் மீனா தரப்பிலிருந்து இதுவரை பதில் எதுவும் வரவில்லையாம்.



## சனியின் துணைக் கிரகத்தில் ஏரி

பூமிக்கு ஒரு சந்திரன் இருப்பது போன்று சனிக் கிரகத்துக்கு 61 இற்கும் அதிகமான சந்திரன்கள் உள்ளன. அவற்றில் மிகப் பெரிய சந்திரனாக டைட்டான் திகழ்கிறது. புதன் கோளை விடவும் டைட்டான் மிகப் பெரியது. பூமியைத் தவிர வேறு கிரகங்களில் உயிரினங்கள் உள்ளனவா? அங்கு உயிரினங்கள் வாழத் தகுதியான சூழ்நிலை இருக்கிறதா? என பல நாடுகள் ஆய்வு மேற்கொண்டுள்ளன.

அந்த வகையில் சனிக் கிரகத்தை ஆய்வு செய்ய அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் 'கேசினி' என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. அது சனிக் கிரகத்தை சுற்றி வந்து தகவல்களை அனுப்பி வருகிறது. சனிக் கிரகத்தின் டைட்டான் சந்திரனில் நாசாவும், ஐரோப்பிய விண்வெளிக் கழகமும் இணைந்து கேசினி–ஹீஜென் என்ற ரோபோவை அங்கு தரையிறக்கி ஆய்வு மேற்கொண்டுள்ளன.

அதைத் தொடர்ந்து அந்த 'ரோபோ' அனுப்பியுள்ள பல தகவல்களின் அடிப்படையில் டைட்டானில் ஏரிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டைட்டான் சந்திரனில் நில அரிப்பு ஏற்படுவதையும் விஞ்ஞானிகள் ஒப்பிட்டுப் பார்த்தனர். அதில் அங்கு தண்ணீரில் கரையக்கூடிய சுண்ணாம்புக் கல் மற்றும் ஜிப்சம் பாறைகள் மழை மற்றும் தண்ணீரால் அரிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர். அதன் மூலம் அங்கு ஏரிகள் இருப்பது தெரிய வந்துள்ளது.

## இந்தச் சுட்டிகளின் அட்டகாசத்தைப் பாருங்களேன்....





## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

திருடன் 1: ஒரு வீட்டில திருடும்போது தூங்கிட்டு இருந்தவரோடை காலை தெரியாமல் மிதிச்சிட்டன்.

திருடன் 2: திருடன் என்று அலறியிருப்பாரே?

திருடன் 1: கால் வலிக்கு இதமா இருக்கு. ஒரு அரை மணி நேரம் மிதிச்சிட்டு அப்புறம் திருடு என்று சொல்லிட்டார்.

பள்ளிக்கூட திறப்பு விழாவுக்கு நம்ம தலைவரைக் கூப்பிட்டது ரொம்பத் தப்பா போச்சு

எதனால?

வகுப்பு அறைகளைப் பார்த்துட்டு, இதென்ன ரூம், ரூமா கட்டியிருக்கு, லொட்ஜா? என்று கேட்கிறார்.

காதலி: ஸ்ரீ நாங்கள் மோதிரம் மாற்றிக் கொள்வோமா?

காதலன்: நான் போட்டிருப்பது தங்க மோதிரம்.

நீ போட்டிருப்பது கவரிங். நீயும் தங்க மோதிரம் போட்டுட்டு வா. மாத்திக்குவோம்.

காதலி: ? ? ? ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய அத்தியட்சகர் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு பணிப்புறக்கணிப்பு

## சம்மாந்துறை மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் வைத்தியசாலையில்

அம்பாறை, ஜூன் 27

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவைச் சேர்ந்த சம்மாந்துறை மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை 24 மணித்தியால அடையாள வேலை நிறுத்தம் ஒன்று நடத்தப்பட்டுள் ளது. விசேட வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் உட்பட வைத்திய சாலையின் சகல தர ஊழியர்களும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதால் வைத்தியசாலையின் சேவைகள் முற்றாகச் செயலிழந்தன. அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியவர்களுக்கான சேவைகள் தடையின்றி இடம்பெற்றன.

இந்த வைத்தியசாலையின் வைத்திய சேவைகளும், நிர்வாகமும் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பீ.ஏ.அஸீஸ் தலைமையில் சிறப்பாக இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையில் சுகாதார அமைச்சு அரசியல் அழுத்தம் காரணமாக, கடந்த 24 ஆம் திகதி வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின்படி பெரும் பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை மேலதிகமாக வைத்திய அத்தியட்சகராக நியமித்துள்ளது. இதற்கு ஆட்சேபனை தெரிவித்தும், மேலதிக வைத்திய அத்தியட்சகர் நியமனத்தை இரத்துச் செய்யக்கோரியுமே அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் 32வைத்திய அதிகாரிகள், 57 தாதிய உத்தியோகத்தர்கள், 62 சாதாரண தொழிலாளர்கள், 12 உத்தியோகத்தர்கள், ஏனைய 27 ஊழியர்கள் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர்.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனைப் பிராந்திய கிளைச்செயலாளர் டாக்டர் எம்.ஐ.சிராஜ் கருத்துத் தெரிவிக்கையில்,

சுமுகமாகவும், சிறப்பாகவும் இயங்கும் இந்த வைத்தியசாலையின் செயற்பாட்டைக் குழப்பி இலாபம் காண அரசியல்வாதிகள் முனையக் கூடாது. மேலதிக வைத்திய அத்தியட்சகரின் நியமனம் இரத்து செய்யப்படாவிட்டால், கல்முனைப் பிராந்தியம் தழுவிய தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும். – என்றார். (ந–30)

# செயற்றிறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் பகிர்வுக்களம்

யாழ்ப்பாணம்,ஜூன் 27

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் தேடல் நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வுக்களம் இரண்டாவது நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேதேவானந்தின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 'தன்னார்வத் தொண்டுப் பணிகளும் செயற்பாடுகளும்' எனும் தலைப்பில் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் கருத்துரை வழங்குவார். (ஐ)


### தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் ஆர். வி.ஜி மருந்த கத்திற்குமருந்தாளர் (PHARMACIST) தேவை.
தகுதியானவர் விண்ணபிக்கவும்.
தொடர்பு :- ஆர். வி. ஜி மருந்தகம் இல. 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### மணமகன்கள் தேவை

* 1981 இல் பிறந்த 3இல் சூரியனும் செவ்வாயும் 44 பாவ முடைய மணமகளுக்கு வெளிநாடு அல்லது உள் நாட்டு மணமகன் தேவை.
* 1982 இல் பிறந்த 8இல் செவ்வாய் 18¾ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு சுவிஸில் உள்ள மணமகன் தேவை.
* 1981 இல் பிறந்த 3 பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜா உரிமை சொப்வெயார் (Software) இஞ்சினியர் மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
* 1987 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26¼ பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு Bsc க்கு மேல்தகுதியான மணமகன் தேவை.
* 1982 இல் பிறந்த 3இல் செவ்வாய் 24 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகளுக்கு டாக்டர்,இஞ்சினியர் மணமகன் தேவை.
* 1985 இல் பிறந்த 8இல் செவ்வாய் 63 பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகளுக்கு டாக்டர் , இஞ்சினியர் மணமகன் தேவை.

தொடர்பு :கமலக்கண்ணன் திருமணசேவை
இல62 இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி
T.P: 077 607 0862


# நெடுந்தீவுப் பயணிகளுக்கு குறிகாட்டுவானில் சிரமம்

## நீண்ட நேரம் காக்க வைக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

நெடுந்தீவில் இருந்து பயணிகளுடன் வரும் படகுகளை குறிகாட்டுவான் துறைமுகப் பாலத்தில் அணைத்து பயணிகளை இறக்குவதற்கான நடவடிக்கையில் இழுபறி நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நயினாதீவுக்குச் செல்லும் பயணிகளை ஏற்றி இறக்குவதில் மட்டுமே அங்குள்ள அதிகாரிகள் அக்கறை காட்டுவதால் நெடுந்தீவுப்பயணிகள் நீண்டநேரம் படகில் காத்திருக்க வேண்டியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுப் பயணிகள் நீண்ட நேரம் படகில் காத்திருக்கவிட்ட பின்னரே துறைமுகப் பால்த்தில் இறங்க அனுமதிக்கப்பட்டனர். துறைமுகப் பாலத்தில் நயினாதீவுக்குச் செல்லும் பயணிகளை ஏற்றுவதற்காக படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட படகுகளில் பயணிகள் ஏற்றப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதும் நெடுந்தீவுப் பயணிகள் படகை நிறுத்தும் பொருட்டு குறிப்பிட்ட படகுகளைத் துறைமுகப்பாலத்தில் இருந்து அப்புறப்படுத்த உரியவர்கள் முன்வராமையால் நயினாதீவுக்கான படகுகள் பாலத்தில் தரித்து நிற்க, பயணிகளுடன் வந்த நெடுந்தீவுப் படகு வேறு வழியின்றி கடலில் தரித்து நிற்க வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொது மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

நயினாதீவுப் படகுகளின் உரிமையாளர்களும்தமது படகுகளை அப்புறப்படுத்தி நெடுந்தீவுப் பயணிகள் இறங்க வசதிகளைச் செய்யாது பயணிகள் படகு கடலில் வட்டமடித்துக்கொண்டிருந்ததை ரசித்தபடி தமது படகுகளில் உட்கார்ந்திருந்தனர். பல்வேறு அத்தியாவசிய வேலைகளுக்காக வந்து பிற்பகல் நெடுந்தீவுக்குத் திரும்பிவிடலாம் என எதிர்பார்த்திருந்தவர்கள் இந்தத் தாமதப் படுத்தல்கள் காரணமாக ஒரு நாள் யாழ். நகரில் தேவையின்றித் தங்க ஏற்பட்டதாகவும் கூறினார்கள். (ந–7)

# வளலாயிலுள்ள கிணறுகளை துப்புரவாக்கும் ஹலோ ட்ரஸ்ட்

அச்சுவேலி, ஜூன் 27

வளலாய் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் அடையாளம்காணப்பட்ட கிணறுகளை ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் துப்புரவு செய்து வருகின்றது. கடந்த செவ்வாய்க் கிழமை துப்புரவு செய்யப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட மிதிவெடிகள் கண்டெடுக்கப்பட்டன.

மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட போதிலும், கிணறுகளில் அபாயக்குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கிணறுகள் கழிவுகளால் நிரப்பப்பட்டும் முழுமையாக மூடப்பட்ட நிலையிலுமே உள்ளன. கிணறுகளுக்கு உள்ளே என்ன இருக்கின்றது என்பது தெரியாத நிலையில் பொதுமக்கள் அஞ்சுகின்றனர். அதேபோன்று கிணறுகளைத் துப்புரவு செய்துவரும் நிறுவனத்தின் ஆளணியினரும் அஞ்சுகின்றனர்.

பெரும்பாலான கிணறுகளை துப்புரவு செய்வதற்கு பைக்கோ இயந்திரத்தை பயன்படுத்த வேண்டி இருப்பதால் கிணற்றின் சுவர்களில் ஒருபகுதி பிரிக்கப்பட்டே பைக்கோ இயந்திரத்தை பயன்படுத்த வேண்டி இருப்பதாகக் கூறப்படுகின்றது. கிணற்றின் சுவர் பிரிக்கப்பட்டாலும் சரி, நீர் பெறுவதற்கு உரிய வகையில் கிணறுகள் இருந்தால் போதும் என காணி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

கிணறுகள் இருந்தும் நீர் எடுக்க முடியாமல் இருப்பதால் காணிகளில் எந்தவிதமானபயிர்ச் செய்கையையும் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக காணி உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ந–11)


### மேசன்மார்

* யாழ்நகரில் உள்ள சங்கென் வேலைத் தளத்திற்கு மேசன்மார் தேவை . தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதியுண்டு.

விவரங்களுக்கு:
071 864 3635, 071 864 3636
071 869 7269

* முல்லைத் தீவிலுள்ள சங்கென் வேலைத்தளத்திற்கு வேலை செய்யக்கூடிய மேசன்மார் தேவை.

விவரங்களுக்கு:
071 238 7076,
077 877 0140


# போலி நியமனக் கடிதங்கள்: தொடர்புபட்ட இருவர் கைது

கொழும்பு, ஜூன். 27

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் தொழில் வாய்ப்புக்கான போலி நியமனக் கடிதத்தை வழங்கி பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் மருதானையில் இடம்பெற்றுள்ளது.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எம். நயீமுல்லாஹ் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் உதித்த பெரேராவிடம் விடுத்த எழுத்து மூல வேண்டுகோளையடுத்தே மேற்படி கைது இடம்பெற்றுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் 500 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த மாதம் 23, 24ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதற்கான நியமனம் வழங்கும் விடயத்தில் பண மோசடி இடம்பெற்றுவருவதாக அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இது குறித்து மிகவும் விழிப்பாக இருக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது செயலாளர்களுக்கு பணிப் புரை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் கொக்கட்டிச் சோலை, அரசடித்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த ஐ. கிருபேஸ்வரன் என்பவரை பெலவத்தை, பத்தரமுல்ல பிரதேசத்திலுள்ள மேற்படி அமைச்சுக்கு அழைத்து அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் நயீமுல்லாஹ் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட போலி நபர் ஒருவர் நேர்முகப் பரீட்சை மேற்கொண்டுள்ளார். அத்துடன் அவரிடமிருந்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக் கொண்டு நியமனக் கடிதத்தையும் வழங்கியிருந்தார்.

தனக்கு வழங்கப்பட்ட கடிதம் போலியானது என்பதைப் பின்னர் அறிந்து கொண்ட கிருபேஸ்வரன், இதுபற்றி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து குறித்த மோசடிக்காரர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் நயீமுல்லாஹ் வேண்டுகோள் விடுத்திருந்தார். குறித்த மோசடிக் காரர்களைக் கைது செய்வதில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களுடன்கிருபேஸ்வரனை தொலைபேசியில் தொடர்புகொள்ள வைத்த பொலிஸாரின் வலையில் விழுந்த மருதானையில் இருவேறு இடங்களைச் சேர்ந்த மோசடிக்காரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சரின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

"கைது செய்யப்பட்டவர்கள் இது போன்று மேலும் சில மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கட்சிப் பணிகளில் ஈடுபட்டவர் என்பதைத் தவிர, அமைச்சர் ரவூப் ஹக்கீமின் எந்தவொரு அமைச்சிலும் எந்தக் காலத்திலும் இணைப்பாளர் பதவியொன்றை வகித்தவர் அல்ல. அமைச்சரின் கீழுள்ள எந்தவொரு நிறுவனத்திலும் இவ்வாறான மோசடிகள் இடம் பெறுவதாக அறியவந்தால் உடனடியாக எனது கவனத்திற்கு கொண்டுவாருங்கள்."– என்றார். (ந–10)


### வீணை விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள வீணை விற்பனைக்குண்டு.
தொடர்பு : மாயவன் மகேஸ்வரி
இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி
யாழ்ப்பாணம் T.P: 077 941 7768

### வாடகைக்கு வீடு தேவை

அரச உத்தியோகத்தர்களான சிறு குடும்பத்திற்கு இணுவிலிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் வீடு வாடகைக்குத் தேவை.
Contait No.: 077 402 9288, 077 614 6361

### பிரதான சமையலாளர் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு பிரதான சமையலாளர் தேவை.
தகைமை:- 5 வருட அனுபவம்
தொடர்பு :- 077 799 6618,(மொகமட்)
077 557 6828 (மத்தியூ)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
CeylonTheatres www.ceylontheatres.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீடமைப்பு வாரத்தை முன்னிட்டு காசோலைகள்

வலி.வடக்கு, ஜூன் 27

தேசிய வீடமைப்பு வாரத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தில் வீடமைப்பு திட்ட பயனாளிகளுக்கு காசோலைகள் மற்றும் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புதிய அரசால் உருவாக்கப்பட்ட ஐம்பதாயிரம் வீட்டுத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக நூற்றி இருபத்தைந்து பயனாளிகளுக்கு முதற்கட்ட கொடுப்பனவாக இருபதாயிரம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடை பெறவுள்ளது.

நிகழ்வில் சிறுவர் மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

தொகுதிக்கு முன்னூறு வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக தெரிந்தெடுக்கப்பட்ட நூற்றி இருபத்தைந்து பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்படுவதுடன் ஐம்பது பேருக்கான வீடமைப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீடுகளுக்கான காணி உறு திகளும் வழங்கப்படவுள் ளன. (ற-86)


**தொடர்பு கொள்ளவும்**

**காஞ்சி பரமாச்சார்யார் இல்லம் ஒன்றை அமைப்பதற்காக காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் மீது ஈடுபாடுடையவர்கள் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்**

**தொடர்பு :077 847 6482**

(61311) (7.11)






**பண்பாட்டு விழுமியங்களுடன் வாழ்வதற்கான பிரார்த்தனை நிகழ்வு**

அண்மைக்காலமாக வித்தியா போன்ற பிள்ளைகள் பாதிப்புக்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள் எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமைகளில் இருந்து விடுபட்டு பண்பாட்டு விழும்மியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனையாக "மனிதம் பேணுவோம் பண்பாடு காப்போம்" எனும் தொனி பொருளில் பிரார்த்தனை நிகழ்வொன்றை சமூக ஆர்வலர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்வில் அதிகாரிகள், சிறுவர்கள் பெண்கள் நலம் சார்ந்து பணியாற்றும் அமைப்புக்களின் பிரார்த் தனை நிகழ்வுகளும் மேடை ஆற்றுகை நிகழ்வும் ஏனைய விழிப்புணர்வு நிகழ்களும் இடம் பெறவுள்ளது.

இதில் நாம் அனைவரும் உணர்வுபூர்வமாக பங்குபற்றி வித்தியாவுக்கும் அவரை போன்று நாம் இழந்து நிற்கும் ஏனையவர்களுக்காகவும் அஞ்சலி செலுத்துவதுடன் எமது மனங்களை ஆற்றுப்படுத்தி எமது சமூகம் பண்பாடு, விழுமியங்களுடன் வாழப் பிரார்த்திப்போம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:** யாழ் வீரசிங்கம் மண்டபம்
**காலம்:** 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 10.00 மணிமுதல்
மாலை 4.00 மணி வரை

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்.



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**WALK -IN – INTERVIEW**
**FACULTY OF AGRICULTURE**

Walk in interview for appointments to the following posts will be held on **02.07.2015** at the **Board Room of this University at 9.30 a.m**

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self prepared applications for the following posts

**Temporary Lecturer in**

Agronomy/ Animal Science/ Agricultural Engineering

**Temporary Demonstrator in**

Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Animal Science/ Agricultural Economics/ Agricultural Engineering

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26,020/- p.m. (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 21,370/- p.m. (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and **self prepared application**.

**Note:** Candidates who are awaiting the results of the final degree examinations may also appear.

**Registrar**
University of Jaffna.
26.06.2015

(c.16216) (45.7)


# 'முல்லைக் கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி, ஜூன் 27

'முல்லைக் கவிதைகள்' எனும், வரலாற்றுச்சிறப்புமிக்க கவிதை நூல் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 72 கவிஞர்களுடைய கவிதைகள் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வடக்கில் முதன் முதலாக ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த பலகவிஞர்களுடைய கவிதைகளை உள்ளடக்கி வெளிவரும் கவிதை நூல் இதுவாகும்.

ஒட்டுசுட்டான் முத்தமிழ் மன்றத்தால் வெளியிடப்படும் இந்த கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக ஈழத்துக் கவிஞர், பேராதெனிய பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், செல்லத்துரை சுதர்சன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன்,முல்லைமாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலர் சி. குணபாலன், கலாசார உத்தி யோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்புரையை வரலாற்று ஆய் வாளரும், மூத்த இலக்கியவாதியுமான அருணா செல்லத்துரை நிகழ்த்தவுள்ளார். இலக்கிய விமர்சகர் 'கம்பீரக் குரலோன்' சி.நாகேந்திரராசா, முல்லை வலய தமிழ்ப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் பீதாம்பரம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் நூல் வெளியீட்டு விழாவில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை மாணவர்களின் சிறப்பு நடனமும் யோ.புரட்சியால் வழங்கப்படும் இலண்டன் ந.வினோதரன் எழுதிய 'தவிச்ச முயல்' நூலின் பகிர்வு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. போருக்குப் பின்னர் முல்லைத்தீவில், அதிக கவிஞர்கள் இணைந்து வழங்கும் கவிதை நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ற-21)





**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு**
**ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம்**
**156, ஜி.பி.எஸ்.வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**
**அன்னையின் அருளாசியுடன்**

**வழிபாட்டு மன்றத் திறப்பு விழாவும் கலச விளக்கு வேள்வி பூஜையும்**

**காலம் :** 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை
**நேரம் :** காலை 9.00 மணி
**இடம் :** 156, ஜி. பி.எஸ்.வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

**பேரன்புடைய சக்திகளே!**

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தியின் அருள்வாக்கிற்கிணங்க மனித குலமேம்பாட்டிற்கும், உலக நலன், நாட்டு நலன், குடும்ப நலன் கருதியும், இயற்கையின் சீற்றம் தணிக்கவும், எல்லாம் வல்ல அன்னை ஆதிபராசக்தியின் அருட்பெரும் கருணையை யாசித்து அன்னையின் அவதாரமாம் எமது ஆன்மீகக் குரு அருள்திரு பங்காரு அடிகளாரின் அருளாசியுடன் அடிகளாரின் பவள ஆண்டிலே முதற்தடவையாக யாழ்குடாநாட்டில் மன்மத வருடம் ஆனிமாதம் (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு 156, ஜி.பி.எஸ்.வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தில் ஆன்மீக சக்தி ஒளி பரவ அமைந்திருக்கும் புதிய வழிபாட்டு மன்ற திறப்பு விழாவும், சமூகநல யாகமும் நிகழ அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான ஆதிபராசக்தியும் அருள்திரு பங்காரு அடிகளாரும் அருளாசி வழங்கியுள்ளார்கள்.

அன்றைய தினம் செவ்வாடை சக்திகள் இந்த காணற்கரிய சமூக நல யாகத்தைத் தரிசித்து அன்னையின் அருளைப் பெறுவதுடன் அன்னதானத்திலும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

அனைவரும் வருக! அன்னையின் அருள் பெறுக!

"[illegible] வேண்டும், ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்"

தொடர்பு: சக்தி ஆனந்த ராஜா - 077 922 5692


# தேசிய கலை இலக்கியப் பேரவை 42 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.மாவட்டத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 42 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இருநாள் மாநாடும், கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு முதல்நாள் கலை நிகழ்வும் மாநாடும் இல 62, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள பேரவையில் ஆரம்பமாகவுள்ளது. பேரவைக் கட்டடத்தில் அங்கத்தவர்களுக்கு மட்டும் இந்த மாநாடு நடைபெறும். பி.ப 1.15 மணியிலிருந்து மாலை 4 மணிவரை திரைப்படக் காட்சிகள் இடம்பெறும். மாலை பி.ப. 4.30 மணி முதல் 5 மணி வரை புதுவசந்தம் மலர் வெளியீடு இடம்பெறும். மாலை 5.15 மணிமுதல் இரவு 8 மணிவரை கலை நிகழ்வுகள் இடம்பெறும். இந்த நிகழ்வுகள் பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெறும். மாத்தளை செங்கதிர் கலைக்குழுவினரின் ஒயிலாட்டம், கும்மியாட்டம், என்பன இடம்பெறும். நுவரேலியா பிரதேசப் பேரவையின் நாடகமும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலையும் மாலையும் ஆய்வரங்கு இடம்பெறும். காலை ஆய்வரங்குக்குப் பேராசிரியர் தில்லைநாதன் தலைமை தாங்குவார்.

தமிழ் இலக்கியத்தில் சூழலியல் பற்றி ச. சத்தியன் ஆய்வுரை நிகழ்த்த க. தணிகாசலம் கருத்துரை வழங்குவார். கடல் வளக் கொள்ளை பிராந்திய நலனும் மீனவர் வாழ்வும் எனும் ஆய்வுரையை தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ நிகழ்த்த, கலாநிதி ச.சிறிகாந்தன் கருத் துரை நிகழ்த்து வார். குடிதண்ணீருக்கான எமது உரிமை சவால்களும் போராட்டங்களும் எனும் ஆய்வுரையை வைத்தியக் கலாநிதி சிவசங்கர் நிகழ்த்த பேராசிரியர் சிவச்சந்திரன் கருத்துரை வழங்குவார். மாலை அமர்வு மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சிவ. இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறும். சூழலியலும் உலக மயமாக்கலும் எனும் ஆய்வுரையை தி. அனோஜன் வழங்கவுள்ளார். கருத்துரையை சட்டத்தரணி சோ. தேவராஜா நிகழ்த்தவுள்ளார். "மலையகமும், மண்சரிவும் மக்கள் வாழ்வும்" எனும் ஆய்வுரையை பன்னீர்ச்செல்வம் நிகழ்த்த, கருத்துரையை ஜெசற்குருநாதன் வழங்கவுள்ளார்.

மாலைக் கலை நிகழ்வுகளாக சுன்னாகம் வாழ்வக மாணவர்களின் நாட்டார் பாடல், கொழும்பு பிரதேசப் பேரவையின் கவியரங்கம் யாழ். பிரதேசப் பேரவையின் எப்பொருள் யார்க்கு நாடகமும் இடம்பெறவுள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுப் பகிர்வு களத்தின் 2ஆவது நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 27

தேடல் நாடகமும் அரங்கியலுக்கு மான அறிவுப் பகிர்வுக் களத்தின் இரண்டாவது நிகழ்ச்சி இன்று சனிக் கிழமை நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'தன்னார்வ தொண் டுப்பணிகளும் அரங்கச் செயற் பாடுகளும்' என்ற தலைப்பில் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந. சுசீந்தராஜ் உரை யாற்றவுள்ளார்.

இவர் நீண்டகாலமாக அரங்கை சமூக செயற்பாட்டுக்காக பயன் படுத்தி வருபவராகவும் பிரயோக மற்றும் அபிவிருத்தி அரங்கத்துறை யில்சிறப்பு பயிற்சி பெற்றவராகவும் விளங்குகின்றார்.

சமூகத் தொடர்பாடலை வலுவுள்ள தாக்குவதற்கு அரங்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆய்வு நிலை நின்றும் அனுபவப்பகிர்வாக வும் விளக்கவுள்ளார். இந்த நிகழ்வு நாடகத்துறை மாணவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவிக்கப் பட்டது. (ற)

## பொன்விழா நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூன் 27

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 50 வது ஆண்டு பொன் விழா நிகழ்வுகள் இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தான முன்றிலில் எஸ்.ரஜீவகாந் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணத்தின் இந்திய துணைத் தூதுவர் எ.நடராஜன் கலந்து கொள் வதுடன் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாழ்நாள் பேரா சிரியர் அ.சண்முகதாஸ், தெல்லிப் பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத் தலைவரும், வட மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங் கம் சித்தார்த்தனும், கௌரவ விருந் தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீ மோகனன், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி கஸ்தூரி ஆராய்ச்சி ஆகி யோரும் கலந்துகொள்ள வுள்ளனர். (ற-86)

## ஆலய திருவிழா

தென்மராட்சி, ஜூன் 27

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீவீர மாகாளி அம்பாள் ஆலய பெருந் திருவிழா நேற்று முன்தினம் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி யது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் மூன்றாம் திகதி தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழா வும், இடம்பெறும். கிரியா ஜோதி சிவஸ்ரீ ந.மகேஸ்வ ரக் குருக்கள் தலைமையில் பெருந் திருவிழா கிரியை கள் இடம்பெற்று வரு கின்றன. (ற-9)

## கைதடி இல்ல முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஜூன் 27

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்கள் ஆன்மிக சுற்றுலாவொன்றை மேற்கொண்டு வல்லிபுர ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இல்லத்தைச் சேர்ந்த 50 பேர் வரையிலான முதியோர்களே கடந்த வெள்ளிக் கிழமை இந்த ஆன்மிகப் பயணத்தை மேற்கொண்டனர். அத்துடன் அவர்கள் மணற்காடு றோமன் கத்தோலிக்க தேவாலயத்துக்கும் சென்று வழிபட்டனர். பின்னர் கரவெட்டி, பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்துக்கும் சென்று அங்குள்ள முதியோர்களுடன் கலந்துரையாடினார்கள்.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஆன்மிக சுற்றுலாக்களாக ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்த வயோதிபர்களின் ஆன்மிக வழிபாட்டுக்கான இந்த சுற்றுலாவின் போது வடக்கில் உள்ள பிரதான ஆலயங்களில் தரிசனங்களை மேற் கொண்டு வருகின்றனர். (ற-17)

## சர்வதேச யோகா தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன், 27

யாழ். யோகா அரங்கம் நடத்தும் சர்வதேச யோகா தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ் யோகா அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமை வகிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக மாவட்ட உள நல மருத்துவர் திருமதி ஜே. திருமகள் சிவன்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.ஜெசிதரன், யாழ் மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ், யாழ் யோகா அரங்க சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் பி.சாந்தரூபன் ஆகியோரும் – கௌரவ விருந்தினர்களாக யாழ். மருத்துவபீட முதுநிலை பதவிநிலை தொழில்நுட்ப வியலாளர் திருமதி ர.சாவித்திரி, கரிகணன் நிறுவன பொது முகாமையாளர் திருமதி ரா. யாழினி, நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி கு.ரஜனி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது யோகா நடன நிகழ்வு, யோகா காட்சி, அனுபவப் பகிர்வு, சிறப் புக் கருத்தரங்குகள் ஆகியன நடைபெறவுள்ளதாகவும் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர். (ற-10)

## பிரார்த்தனை நிகழ்வு

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற் பாட்டில் 'மனி தம் பேணுவோம் பண்பாடு காப்போம்' எனும் தொனிப்பொருளிலான பிரார்த்தனை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர், மதப் பெரி யார்கள், வைத்திய அதிகாரிகள், சிறுவர் நலம் சார்ந்து பணியாற்றும் அதிகாரிகள் ஆகியோரின் கருத் துரை களும், சமய அமைப்புக்களின் பிரார்த்தனை நிகழ் வும், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களது மேடை ஆற்றுகை நிகழ்வும் இடம்பெறும். (ஐ)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.அரியாலை வெட்டுக் குளம் அருள்மிகு ஸ்ரீ புவ னேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற் சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி– தொடர்ச்சியாக பத்துத் தினங்கள் நடை பெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை தேர்த்திருவிழாவும் இடம் பெற்று – திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் விழா நிறைவ டையவுள்ளது. உற்சவங்களில் பக்தர்களை கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-10)

## மரண அறிவித்தல்

### பொன்னையா பிறைசூடி

(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை)



தோற்றம் 05.08.1930 மறைவு 22.06.2015

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நுணா விலைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பிறைசூடி (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) 22.06.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கண வரும் சத்தியபவானி (கலாச்சார உத்தி யோகத்தர் பிரதேச செயலகம் பட்டினமும் சூழலும் திருகோணமலை), சத்தியானந்தா (ஆஸ்திரேலியா), சத்தியதேவி (கனடா), சத்தியசீலன் (லண்டன்) ஆகியோரின் பாச மிகு தந்தையும் சுகுணன்(ஆசிரியர்), கவிதா (ஆஸ்திரேலியா), றமணேஸ் (கனடா), சிவ சக்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற திருமதி அருணாச்சலம், அன்னபூரணம் (கனடா), அரியமலர் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கீர்த்தனன், சுகாஸ், அபிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.06.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, 4ஆவது ஒழுங்கை,
கண்ணகிபுரம், உவர்மலை,
திருகோணமலை. (16384)(7.9)

தகவல்:
குடும்பத்தினர்.

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெள்ளோட்ட நிகழ்வில் ஆலயப்பிரதமகுரு கு.தியகராஜக்குருக்கள், நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர். (ஐ)

## சேவை நயப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 27

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சிக்குப் பணியாற்றிய முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மு.உமாசங்கரின் சேவைநயப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் நடைபெறவுள்ளது.

வைத்திய அத்தியட்சகர் யோ.திவாகர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம் கலந்து கொள்வார். (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் ஐயம்பிள்ளை



7 ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப் பிடமாகவும், புதுவீதி ஆறுகால் மடத்தை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் ஐயம் பிள்ளை 25.06.2015 வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருபா தேவி, ரவிச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும்,குலேந்திரன் (பிரான்ஸ்), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், சசிதேவி, அனுஷா, அபர்ணசுதன், தாரணி, ஆரணியா, அபினயா, அஷ்வின், ஆகாஸ், அபினாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை அவரது தற்காலிக முகவரியில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (61317) (45.6.3)

தகவல்:
மகன்- ரவிச்சந்திரன்
(பிரான்ஸ்)

## மரண அறிவித்தல்

மலர்வு 09 . 08 . 1978



உதிர்வு 22 . 06 . 2015

### கந்தசாமி பிரசாந்தன்

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பிரசாந்தன் (22.06.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் விஜயதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் - வாலாம்பிகை தம்பதியரின் அன்புப் பேரனும், றொபின், சந்திரா (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் சறோஜா, ராஜேஸ், வனஜா (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும், மீரா, றொசாந்தி,டிலானி, கிறிஸ்ரி (பிரான்ஸ்),வேதிகா (U.K) , நவநீதன், சங்கீதா, கீர்த்தனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், டினேஷ் (பிரான்ஸ்),ஜெயானந்தன் (U.K) ஆகியோரின் மைத் துனரும், ஜெரேமேயா (பிரான்ஸ்), விஷ்ணு, விஷ்வா, லஷ்மி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை மறுதினம் (29.06.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் எஸ். இன்பம் அந்திய காலசேவை, நிலையத்தில் (மானிப்பாய் வீதி,கோம்பயன்மயானம் அருகில் நடைபெற்று, பின்னர் அவரின் இல்லத்தில் (சாந்திநிலையம் சித்தன்கேணி) மு.ப. 11 - 12.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப் பட்டு பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி பொதுமயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சாந்திநிலையம்"
சித்தன்கேணி.

தகவல்:
டினேஷ் -077 521 9889,
கிறிஸ்ரி - 077 551 7811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஷாப்திகம் முதலாம் ஆண்டு

தியாகராஜாக் குருக்கள்
சிவசுப்பிரமணியசர்மா
திதி: வளர்பிறை ஏகாதசி
தோற்றம்
20.07.1947



மறைவு
08.07.2014

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய் ஆகிய எம்தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது ஐயா!
ஆனாலும் உங்கள் நினைவுகள் மறைவதில்லை
நீண்டகாலம் இறைவனுக்கு பூசை செய்தீர்
நிலையான சிவப்பேறு பெறுவீராக.

மாஷு சந்தி. குடும்பத்தினர்.


# கறுப்புக் கண்ணாடி ‘ஹெல்மட்’ அணிந்தால் இனி அபராதம்

## சாவகச்சேரி நீதிமன்றில் 12 பேருக்கு எதிராக வழக்கு

கறுப்புக்கண்ணாடி பொருத்தியதலைக் கவசத்துடன் மோட்டார் சைக்கிள் செலுத்திய 12 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸார் நடத்திய திடீர் பரிசோதனைகளின்போது கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக் கவசம் அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் நேற்றுத் தனித் தனியாக விசாரணைக்கு எடுக்கப் பட்டது. அதன்போது குறித்த 12 பேருக் கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

தமக்கு கிடைத்த சுற்றறிக்கையின் பிரகாரம் கறுப்புக் கண்ணாடி பொருத் தப்பட்ட தலைக்கவசத்துடன் மோட் டார் சைக்கிள் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கறுப் புக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக்கவசத்துடன் மோட்டார் சைக் கிள் செலுத்துபவருக்கு முதல் தடவைக்கு ஆயிரம் ரூபாவும், இரண் டாம் தடவைக்கு 2 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் தடவைக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட வேண்டுமென வும்– அதற்கு மேல் தவறிழைத்தால் சாரதிய அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படுமென வும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (ற-9)

# மாணவிகள் துஷ்பிரயோகம்; ஆசிரியர் ஒருவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூன் 27

தரம் 3 தரம் 4 ஆகிய வகுப்பு மாண விகளது உடல் உறுப்புகளைத் தொட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவ கச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கடந்த மார்ச் மாதம் தென்மராட்சி பிரதேச சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர் பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு களை நடத்தியிருந்தனர். அதில் மாண விகளிடம் மனித உருவப் படத்தைக் கொடுத்து உங்கள் அங்கங்களில் யாரும் தொட்டோ அல்லது துஷ் பிரயோகம் செய்திருந்தால் அந்த இடங்களை வட்டமிட்டு வழங்கு மாறு கொடுத்துள்ளனர். அதன் போது ஒரு பாடசாலையில் 5 மாணவிகள் சில இடங்களில் குறித்த ஆசிரியர் தம்மை தொட்டுப் பார்த்ததாக வட்டமிட்டுக் கொடுத்துள்ளனர்.

இவ்விடயம் சிறுவர் நன்னடத்தை அலுவலர்களால் பிரதேச செயல ரின் கவனத்துக்கு கொண்டு வரப் பட்டது. இந்த விடயத்தை மேலும் விசாரித்த பிரதேச செயலர் பொலி ஸாருக்கு முறைப்பாடு செய்துள் ளார். இந்தச் சம்பவங்கள் தொடர் பாக குறித்த ஆசிரியரைக் கைது செய்த பொலிஸார் நேற்றுமுன் தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தி ஆசிரியருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த ஆசிரியரை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார்.

இந்த ஆசிரியர் தாம் கடமையாற் றிய பாடசாலையிலிருந்து இட மாற்றம் பெற்று வேறு பாடசாலை யில் கடமையாற்றுவதாகத் தெரி விக்கப்பட்டது. (ற-9)

# நெடுந்தீவு கோட்ட கல்வி அதிகாரியாக திருமதி கி.சாரதா

யாழ்ப்பாணம், ஜூன் 27

நெடுந்தீவு கோட்டக் கல்வி அதி காரியாக திருமதி சாரதா கிருஷ்ண தாஸ் இந்த மாதம் முதல் பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-7)


ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
பொன்ரதம் (சுமங்கலி)
விவேகானந்தன்
தோற்றம்
14.08.1948
மறைவு
27.06.2010



ஐந்து ஆண்டுகள் எம்மை விட்டுப் பிரிந்து
சென்றாலும் உங்களை மறக்க முடியவில்லை.
ஒவ்வொரு நாளும் உங்களை நினைத்து
வாடுகின்றோம். என்றும் உங்கள் நினைவு
எம்மை விட்டு நீங்காது.

சொர்ணவடலி,
கொக்குவில்.

தி.விவேகானந்தன்(கணவர்)
சகோதர,சகோதரிகள்,
மைத்துனர்கள்,பெறாமக்கள்,
மருமக்கள், சித்தி.


# நலன்புரி சங்கத்தின் அபிவிருத்திக் கூட்டம்

மானிப்பாய், ஜூன் 27

வலி.தென்மேற்கு பிரதேச செய லாளர் பிரிவுக்கு உட்பட்ட மானிப் பாய் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் அபிவிருத்திக்கூட்டம் இன்று சனிக் கிழமை மு.ப. 11.30மணிக்கு இடம் பெறும்.

மானிப்பாய் பிரதேச வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்க தலைவர் டாக்டர் ஆ.காந்தநேசன் தலைமையில் கூட்டம் இடம் பெறும். பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். செயற்பாட்டறிக்கையும், செய லாளர் அறிக்கையும் வாசிக்கப் படும் என தலைவர் வைத்திய கலா நிதி டாக்டர் ஆ.காந்தநேசன் தெரி வித்துள்ளார். (ற-50)


வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.05.2015 வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது அன்புத்
தெய்வம்

அமரர்
சின்னர் கந்தையா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை கள் நாளை (28.06.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் பகுதி அனிஞ்சியன் குளம்,
மல்லாவி.

குடும்பத்தினர்
077 082 8905


# 125 ஆவது ஆண்டு விழா

வவுனியா, ஜூன் 27

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

1890ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை 2015 ஆம் ஆண்டுடன் 125 ஆவது ஆண்டில் தடம் பதித்துள்ளது. இந்தப் பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

பாடசாலை அதிபர் திரேசம்மா சில்வா தலைமையில் வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலய வளாகத்தில் நடைபெறும் இந்த விழாவில் வடமாகாண ஆளுநர் மற்றும் கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ற-421)

# ரவிராஜ் எம்.பியின் உருவச்சிலைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 27

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜ் அவர்களின் உருவச்சிலை சாவகச்சேரி நகரப்பகுதியில் அமைக் கப்படவுள்ளது.

உருவச் சிலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 8.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக அவரது வீட்டுக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

வட மாகாண சபை உறுப்பினர் கேச வன் சயந்தன் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்கள் மாகாண சபை உறுப்பினர் கள், உள்ளூராட்சி சபைகளின் தலை வர்கள், உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ற-9)


அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அமரர்
செல்லையா சற்குணசிங்கம்
(ஓய்வுநிலை உதவித்தபாலதிபர்)
தோற்றம்
07.02.1942



மறைவு
31.12.2014

கடந்த 31.12.2014 புதன் கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் திரு நாவலூர் தெணி அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பசெட்டி வீதி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை

குடும்பத்தினர்.



10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னுத்துரை
பாலச்சந்திரன்
தோற்றம்
06.08.1950
மறைவு
30.06.2005

ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் நாம் மீண்டு வருவதற்கு நீங்கள்
மீண்டும் வரவேண்டும் இங்கே ஊமையாய் அழுகுதைய மனைவி
பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்
உறக்கமின்றி தவிக்குதையா பெற்ற உள்ளம்
அண்ணனாய் நீ இருந்து இத்தரணியில்
சகோதரர்கள் எம்மை வளர்த்தாய் தனியாய் தவிக்கின்றோம்
உங்கள் முகம் காண அண்ணா
பிள்ளைகள், சகோதரர்கள்,
திருநெல்வேலி
பிள்ளைகள், மைத்துனர்கள், பெறாமக்கள்
தகவல்:
சுஜன் (பிரான்ஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு எதிராக நேற்று கிளர்ந்தது வடக்கு


யாழ்ப்பாணம்


தென்மராட்சி


நெல்லியடி




அச்சுவேலி


கொக்குவில் இந்துக் கல்லூரி


யாழ்.இந்துக் கல்லூரி


கிளிநொச்சி





முல்லைத்தீவு






வவுனியா








மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவில் தர்மபுரி மாவட்டம் கீழ்தம்பலஹள்ளியில் வசிக்கும் தங்கவேல் என்பவர் வளர்த்த நாயொன்று விபத்தில் சிக்கி அதனால் நடக்கமுடியாமல் போய்விட்டது. நாய் குணமடைந்து பழையபடி நடக்குமானால் அந்த நாயைக்கொண்டே மாவிளக்கு எடுத்துக் கொண்டுவந்து போடுவதாக தங்கவேல் அங்குள்ள மாரியம்மன் கோயிலில் வேண்டிக்கொண்டார். நாயும் குணமாகியது, வேண்டுதலின்படி ஒரு சின்ன வண்டியில் மாவிளக்கை வைத்து அதை நாய் இழுத்துக்கொண்டு போய் கோவிலில் சேர்க்கும்படி செய்தார் அவர்.

# பிரிட்டனில் மக்கள் தொகை அதிகரிப்பு

லண்டன்,ஜூன் 27

வெளிநாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறி வரும் அகதிகளால் அந்த நாட்டின் மக்கள் தொகை வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட தகவலில், கடந்த 2014 ஆம் ஆண்டில் பிரிட்டனில் சுமார் 6 கோடி 41 லட்சத்து 5 ஆயிரத்து 700 பேராக மக்கள் தொகை இருந்துள்ளது.

அதே ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து வந்த அகதிகள் சுமார் 2 லட்சத்து 59 ஆயிரத்து 700 பேர் பிரிட்டனில் குடியேறியுள்ளனர்.

மேலும், பிரிட்டனில் இயற்கையாக நிகழும் பிறப்பு, இறப்பு விகிதத்தால் சுமார் 2 லட்சத்து 26 ஆயிரத்து 200 பேர் அதிகரித்துள்ளனர்.

இந்த ஒட்டு மொத்த அதிகரிப்பின் விளைவாகப் பிரிட்டனில் கடந்த வருடம் மட்டும் சுமார் 6 கோடி 45 லட்சத்து 96 ஆயிரத்து 800 பேராக மக்கள் தொகை இருந்துள்ளதாக புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த மக்கள் தொகை அதிகரிப்பானது கடந்த 10 வருடங்களில் இருந்த சராசரி அதிகரிப்பை விடப் பெருமளவில் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கிலாந்தில் வீடு இல்லாதவர்களின் எண்ணிக்கையும் கடந்த வருடங்களை விடக் கூடுதலாக அதிகரித்துள்ளது.

அரசு அண்மையில் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில், இங்கிலாந்தில் மட்டும் சுமார் 64 ஆயிரம் குடும்பத்தினர் வீடு இல்லாமல் தற்காலிகக் கூடாரங்கள் அல்லது முகாம்கள் அமைத்து தங்கி வருவதாக தெரியவந்துள்ளது.

அதேபோன்று ஒட்டுமொத்த இங்கிலாந்து நாடு முழுவதும் சுமார் 93 ஆயிரம் சிறுவர்கள் வீடில்லாமல் வசித்து வருவதாக அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# ஈரானில் நவீன அணு உலைகள்; மேற்கத்திய நாடுகள் பரிசீலனை

வியட்னாம்,ஜூன் 27

ஈரானில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய அணு உலைகளை அமைப்பது குறித்து மேற்கத்திய வல்லரசு நாடுகள் பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் – வல்லரசு நாடுகளுக்கு இடையே அணுசக்தி ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக வியட்னாமில் நடைபெற்று வரும் பேச்சின் போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள அணுசக்தி வரைவு ஒப்பந்தத்தில், தொழில்நுட்பம் சார்ந்த ஏராளமான கூடுதல் அம்சங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

அந்த வரைவு ஒப்பந்தத்தின் சில பிரிவுகளில் இரு தரப்பினருக்கும் இடையே கருத்து வேறுபாடு தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த நிலையில், அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ் ஈரானின் அணு ஆராய்ச்சித் திட்டங்களை நீண்ட காலத்துக்கு முடக்கி வைக்க முடியாது என்று ஈரானின் மதத் தலைவர் அயதுல்லா அலி கமேனி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்படும் என வரைவு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிலையில், பொருளாதாரத் தடைகள் உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும், ஈரானின் இராணுவம் சார்ந்த பகுதிகளில் சர்வதேசப் பார்வையாளர்களை அனுமதிப்பதற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, அணுசக்திப் பேச்சு வார்த்தையில் பங்கேற்பதற்காக ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜரீப் வியட்னாம் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அமெரிக்க தூதரகத்தில் 100 மாணவர்கள் தஞ்சம்

## புருண்டியில் தொடரும் பதற்றம்

புஜும்புரா, ஜூன் 27

புருண்டியில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 100 மாணவர்கள் அமெரிக்கத் தூதரகத்தில் பாதுகாப்புக் கேட்டு தஞ்சம் அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், தஞ்சம் கோரி வாகன நிறுத்துமிடத்தில் தங்கியிருந்த மாணவர்களில் சிலர் வெளியேறத் தொடங்கிவிட்டனர்.




தூதரகத்தில் இருக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கு அவர்கள் எந்தவிதத் தொந்தரவும் கொடுக்கவில்லை. அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் எனத் தெரிவித்தார்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதியாகப் பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 3ஆவது தடவையாக பியார்ரே நகுருன்ஜிசா போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெறுகிறது.இந்த நிலையில் அங்கு திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது. ஜனாதிபதி பியார்ரேவுக்கு எதிராக செயல்படும் தளபதி கோட் பிராய்டு நியோம்பர் இந்தப் புரட்சியை நடத்தினார். ஆனால் அரச விசுவாச இராணுவப் படைகள் புரட்சியை முறியடித்து விட்டன.

ஆனால் பொது மக்களும் மாணவர்களும் அரசு எதிராகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இதுவரை வன்முறைச் சம்பவங்களில் 77 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குஜராத்தில் வெள்ளம் 70 பேர் உயிரிழப்பு



புதுடில்லி,ஜூன் 27

குஜராத் மாநிலத்தில் பெய்த கன மழை காரணமாக 70 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சவுராஷ்டிரா பகுதியில் பல்வேறு கிராமங்களில் வெள்ள நீர் புகுந்துள்ளது. மாநிலத்தின் பிற பகுதிகளுடனான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

அரபிக் கடலில் உருவாகிய குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக குஜராத் மாநிலத்தில் கன மழை பெய்து வருகிறது.

குறிப்பாக அம்ரெலி மாவட்டத்தில் 619 கிராமங்களில், 400 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 'மாநிலத்தில் கனமழை காரணமாக சுமார் 70 பேர் உயிரிழந்துள்ளனர்,என்று மாநில சுகாதாரத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கிடையே வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில்ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மெகி நூடுல்ஸ் புதிய வடிவில்

மெகி நூடுல்ஸ்க்கு பதில் புதிய வகை உணவுப் பொருள் தயாரித்து விற்க நெஸ்லே நிறுவனம் முடிவு செய்துள்ளது. நெஸ்லே நிறுவனத்தின் மெகி நூடுல்ஸ் நாடு முழுவதும் பரபரப்பாக விற்பனையாகி வந்தது. இந்தியாவில் நாள் ஒன்றுக்கு 30 கோடிக்கும் அதிகமான மெகி நூடுல்ஸ் பக்கெற்றுக்கள் விற்பனையாகி வந்தன.

இந்த நிலையில் மெகி நூடுல்ஸில் காரீயம் மற்றும் வேதிப் பொருள் அதிக அளவில் கலந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதால் மத்திய அரசின் உணவுத் தரக் கட்டுப்பாட்டு ஆணையம் இந்தியா முழுவதும் மெகி நூடுல்ஸ் விற்பனைக்குத் தடை விதித்தது.

இதற்கிடையே மெகி நூடுல்ஸ்க்கு பதில் புதிய வகை உணவு பொருள் தயாரிப்பில் நெஸ்லே நிறுவனத்தின் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# பிரசவக் கட்டணத்துக்கு குழந்தை விற்பனை

புதுடில்லி,ஜூன் 27

ஐதராபாத்தில் பிரசவத்துக்கான கட்டணம் செலுத்தாத பெற்றோரின் குழந்தையை மருத்துவமனை நிர்வாகம் விற்பனை செய்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் சூரியப்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் ஜனம்மா என்ற பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்தது. மூன்றாவது குழந்தையாகப் பெண் குழந்தை பிறந்ததால் அவரது கணவர் மருத்துவச் செலவுக்கு பணம் கொடுக்க மறுத்துள்ளார். இதனையடுத்து குழந்தையை மருத்துவமனையிலே விட்டுவிட்டு பணம் திரட்டுவதற்காக வெளியில் சென்ற ஜனம்மா, சில நாள்கள் கழித்து பணத்துடன் திரும்பி வந்து குழந்தையைக் கேட்டபோது அவரது குழந்தை 12 ஆயிரதத்துக்கு விற்கப்பட்டமை தெரியவந்தது. பிரசவக் கட்டணத்துக்காக மருத்துவமனை நிர்வாகமே குழந்தையை விற்பனை செய்ததும், அதற்கு அங்கு பணிபுரியும் ஊழியர்கள் இடைத்தரகர்களாக செயல்பட்டதும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் யேமன்

## கடும் பஞ்சம் ஏற்படலாம் என ஐ.நா. தூதர் எச்சரிக்கை

நியூயோர்க்,ஜூன் 27


போர் நடைபெற்று வரும் யேமனில் கடும் பஞ்சம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக அந்த நாட்டுக்கான ஐ.நா. தூதர் எச்சரித்துள்ளார்.

உள்நாட்டுச் சக்திகள் இடையேயான போரினாலும், சவூதி கூட்டுப் படையினரின் தாக்குதலாலும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் யேமனில் 3.1 கோடி மக்களுக்கு மிக அவசரமாக உணவு, மருந்துகள் உள்ளிட்ட உதவிப் பொருள்கள் தேவைப்படுவதாக அந்த நாட்டுக்கான ஐ.நாவின் சிறப்புத் தூதர் இஸ்மாயில் சேக் அகமது தெரி வித்துள்ளார்.

யேமன் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு அந்த நாட்டின் நிலவரம் குறித்த விரிவான அறிக்கையை இஸ்மாயில் சேக் அகமது வழங்கினார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கும்போது:

உண்மையான போர் நிறுத்தம் ஏற்படும்வரை யேமன் நாட்டு மக்களின் அவதி தொடரும். அவர்களது தற்போதைய நிலைக்கு போரில் ஈடுபட்டு வரும் அனைத்துத் தரப்பினரும் காரணம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், அந்த நாட்டில் 70 லட்சம் பேருக்கு அவசர உதவி தேவைப்பட்டது. அங்கு அரசியல் குழப்பம் தொடங்குவதற்கு முன்னர், இருந்த நிலை அது. உள்நாட்டுப் போர் தொடங்கி, தற்போது வெளிநாட்டுப் படைகளும் வான் வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் மருந்து, உணவு உள்ளிட்ட உதவிப் பொருள்களின் தேவை அதிகரித்துள்ளது. இரண்டு கோடி பேருக்கு குடிதண்ணீர் கூட கிடைப்பதில்லை. 10 லட்சம் பேர் வீடுகளைவிட்டு வெளியேறி வாழ இடமின்றித் தவிக்கின்றனர். 3.1 கோடி மக்களுக்கு அவசர உதவிப் பொருள்கள் தேவைப்படுகின்றன.இந்தநிலைநீடித்தால்கொடும் பஞ்சம்அந்தநாட்டைத்தாக்கும்அபாயம் உள்ளது எனத் தெரிவித்தார்.



யேமனின் துறைமுகங்களை நெருங்க முடியாத வகையில் அவை முற்றுகையிடப்பட்டுள்ளன. பல நாள்கள் காத்திருப்புக்குப் பின்னர், சர்வதேச உதவி அமைப்புகள் சார்பில் அனுப்பப்பட்ட உணவு உள்ளிட்ட ஆயிரம் தொன் உதவிப் பொருள்களை எடுத்துச் சென்ற கப்பல் துறைமுகத்தை கடந்த புதன் கிழமை சென்றடைந்தது.

யேமனில் ஷியா பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படையினருக்கும் இடையே கடந்தஓராண்டுக்கும் மேலாகப் போர் இடம் பெற்று வருகிறது. முன்னாள் ஜனாதிபதி; அலி அப்துல்லா சலேவுக்கு ஆதரவாக உள்ள வீரர்கள்,கிளர்ச்சியாளர்கள் ஆகியோர், அரச படைகளுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றனர். தலைநகர் சனாவைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, நாட்டின் ஜனாதிபதி மன்சூர் ஹாதி, சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இந்த நிலையில், சவூதி தலைமையில் 10 அரபு நாடுகளின் கூட்டுப் படையினர் யேமனில் கடந்த மார்ச் மாத இறுதியிலிருந்து வான்வழித் தாக்குதல் நிகழ்த்தி வருகின்றனர்.

அந்த நாட்டில் உள்நாட்டுப் போர் தொடங்கிய பின்னர், பெண்கள், சிறுவர்கள் உட்பட 2 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், சுமார் 8 ஆயிரம் பேர் காயமடைந்ததாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. முன்னிலையில் ஜெனீவாவில் கடந்தவாரம் நடைபெற்ற அமைதிப் பேச்சு முறிந்ததாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, யேமன் நிலை குறித்த அறிக்கையை ஐ.நா.வின் சிறப்புத் தூதர், பாதுகாப்புச் சபையில் ஒப்படைத்துள்ளார். (ஐ)

## அல்கெய்தா தீவிரவாதிகள் 12 பேர் படுகொலை

டமாஸ்கஸ்,ஜூன் 27

தங்களது அமைப்பில் சேர மறுத்த மற்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளை ஐ.எஸ் தீவிரவாதிகள் கொன்ற காட்சி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர் பல்வேறு வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த அமைப்பினர் இராணுவத்துக்கு எதிராக மட்டுமல்லாமல் ஏனைய தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராகவும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்த நிலையில் அல்கெய்தா அமைப்பைச் சேர்ந்த 12 தீவிரவாதிகளைக் கொலை செய்யும் வீடியோக் காட்சியை அவர்கள் வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தியுள்ளனர். தங்களுக்கு எதிராக போரில் ஈடுபட்ட மற்ற அமைப்பைச் சேர்ந்த 12 பேரிடம் தங்கள் அமைப்பில் இணையுமாறு ஐ.எஸ். அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் அதனை மறுத்ததையடுத்து அவர்களைப் படுகொலை செய்ய முடிவு செய்தனர். சிரியாவின் டமாஸ்கஸ் பகுதியில் எடுக்கப்பட்டது எனக் கூறப்படும் அந்த வீடியோக் காட்சியில் மற்ற அமைப்புகளைச் சேர்ந்த 12 கைதிகளும் அவர்களைப் படுகொலை செய்த 12 ஐ.எஸ். அமைப்பினரும் உள்ளனர். முதலில் கைதிகள் தங்களின் தவறுக்காக மன்னிப்பு கேட்கின்றனர். பின்னர் அவர்களின் படுகொலை செய்யப்படுவது பதிவாகியுள்ளது. அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முன் ஐ.எஸ். அமைப்பினருக் கும் அல்கெய்தா உள்ளிட்ட ஏனைய தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையே ஏற்பட்ட போர்க் காட்சி களும் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் அதில் பேசும் ஐ.எஸ். வீரர் ஒருவர் ஏனைய தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஐ.எஸ் அமைப்பில் சேரவேண்டும் என்றும் அபு பக்கர் அல் பாக்தாதியை தங்களின் தலைவராக ஏற்க வேண்டும் என்றும் தெரிவிக்கிறார். இல்லையென்றால் அவர்களுக்கு இதே நிலைமைதான் ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கின்றார். இந்த நிலையில் தற்போது வெளியாகியுள்ள அந்த வீடியோக் காட்சி உலக நாடுகள் மத்தியில் மட்டுமல்லாமல் மற்ற தீவிரவாத அமைப்புகளிடத்திலும் அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது. (ஐ)



இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தின் கடற்கரையில் 40 அடி நீளமான நீலப் பெண் திமிங்கிலம் ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

## கினியா நாட்டில் மலேரியா தொற்று

கொனாக்ரி, ஜூன் 27

ஆபிரிக்க நாடுகளான கினியா, சியாரா லியோன் ஆகியவற்றில் எபோலா நோய் தாக்கி ஏராளமானோர் உயிரிழந்தனர். அதில் கினியா நாட்டில் மட்டும் 2 ஆயிரத்து 444 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

தற்போது எபோலா நோய் அங்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 10 பேருக்கு மட்டுமே அந்த நோய்த் தாக்கம் உள்ளது.



ஆனால் எபோலாவைக் கட்டுப்படுத்தி இருக்கும் அதே நேரத்தில் மலேரியா நோய் திடீரென அதிகமாகப் பரவி வருகிறது. அந்த நாட்டில் ஏற்கனவே மலேரியா நோய்த் தாக்கம் அதிகமாக இருக்கும். எனவே அதனைத் [illegible] விரிவான சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மலேரியா சிகிச்சைக்காக ஆங்காங்கே வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு இருந்தன. எபோலா நோய் தாக்கியதை அடுத்து மலேரியா சிகிச்சைக்காக அமைக்கப்பட்டிருந்த வைத்தியசாலைகள் எபோலா நோய் சிகிச்சைக்காக மாற்றப்பட்டன. மேலும் அதிகளவிலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

இதனால் மலேரியா நோய் வேகமாக பரவி வருகிறது.

இதுவரை 74 ஆயிரம் பேரை மலேரியா நோய் தாக்கியுள்ளது. அதில் பலர் உயிரிழந்துள்ளனர். ஆனால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை வெளியிடப்படவில்லை. உலகம் முழுவதும் வருடத்துக்கு 5 லட்சம் பேர் மலேரியாவால் உயிரிழக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ செ.குமாரசிங்கம் (JP)
*செயலாளர், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.*

# போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படும் கலாசார சீரழிவுகளும்

இன்று போதைப் பொருள் எதிர்ப்புத் தினமாகும். உலகெங்கும் உள்ள மக்கள் இன்றைய தினத்தை நினைவு கூர்ந்து வருகின்றார்கள். அந்த வகையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் இன்றைய தினத்தை நினைவு கூர்ந்து இந்த ஆக்கத்தை வழங்குகிறது.

இன்று உலகெங்கிலும் நிகழும் கொடூரச் செயல்களுக்கும், வன்முறைச் சம்பவங்களுக்கும், பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும், கலாசார சீரழிவுகளுக்கும் காரணம் மதுப் பாவனையே. இன்றைய நூற்றாண்டில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் பானம் தான் மது.

குடி குடியைக் கெடுக்கும் என்றொரு பழமொழி உண்டு. இந்த மொழி எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். மதுவுக்கு அடிமையானால் தமது உறவுகளை மறந்து சொத்து, சுகங்களை இழந்து நடு வீதிக்குக் கொண்டு வந்துவிடும். பொதுவாக மதுபானம் அருந்தும் தவறான பழக்கத்தை உடைய ஆண்களாலேயே எமது சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் தலைவிரித்து ஆடுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. மது அருந்துவதால் தாம் நேசிக்கும் மனைவி, பிள்ளைகளை மற்றும் தாய், தந்தையரை துச்சமாகக் கருதும் அளவுக்கு மது அவர்களை ஆட்சி புரிகின்றது. சில வேளைகளில் மனம் விரும்பி திருமணம் புரிந்த மனைவியைக் கூட இவர்கள் மிகமோசமான முறையில் அடித்துத் துன்புறுத்து வதுடன் கொலையும் செய்யும் அளவுக்கு தூண்டுவதும் இந்த மதுவே.

நோயற்ற வாழ்வே உலகில் உயர்வான சுகம். எனவே இந்தச் சுகத்தை நாம் எல்லோரும் அனுபவிக்க வேண்டுமாயின் போதைப் பொருள்களை நாம் நாடவே கூடாது. கெட்ட நண்பர்களுடன் பழகுவதன் மூலம் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதைத் தவிர்த்து சிறந்த முறையில் கல்வி கற்று நற்பிரஜைகளாக வாழ மாணவர்கள் முயற்சிக்க வேண்டும். பிள்ளைகளை பெற்றோர்கள் பாடசாலைக்கு அனுப்புவது நற்பிரஜைகளாக உருவாகுவதற்கே.

மாணவர்கள் சிறு வயதில் நான் மருத்துவராக, சட்டத் தரணியாக, பொறியியலாளராக, ஆசிரியராக வருவேன் எனக் கூறுவார்கள். நாம் போதைப் பொருள்களை நாடினால் இவற்றுக்கான பட்டம், பதவிகளைப் பெற முடியுமா? மேலும் பல்கலைக் கழகங்களுக்கு முன் னால் செல்லும்போது நாம் இங்கே கல்வி கற்க வரவேண்டு மென்று ஆசைப் படுகின்றார்கள். ஆனால் கெட்ட பழக்க வழக்கங்களினாலும், போதைப் பொரு ளுக்கு அடிமைப் படுவதானாலும் அந்த இலக்கை அடைய முடி யாமல் போகின்றது. இதற் கெல்லாம் காரணம் மது பானம் தான்.

பிள்ளைச் செல்வங்களே இந்த நாட்டின் வளங்கள். எனவே நற்பிரஜையாக வாழவும் நாட்டுக்கு நற்பெயர் வாங்கவும் போதைப் பொருள் பாவனையில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்த மட்டில் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் தினமும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்படுகின்றன என்று புள்ளி விவரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இதனைத் தடுப்ப தற்கும், போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் விசேட பிரிவுகள் ஏற்படுத்திப் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதிய திட்டங்களை வகுக்கவும் போதைப் பொருள் விற்பனையைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபட வேண்டும். மேலும் போதைப் பொருள் பாவனையால் உலகெங்கும் வருடந்தோறும் ஒரு கோடி மக்கள் நோய்வாய்ப்பட்டு மரணிக்கின்றார்கள்.




எமது நாட்டைப் பொறுத்த மட்டில் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் தினமும் வெளிநாடு களிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்படுகின்றன என்று புள்ளி விவரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இதனைத் தடுப்ப தற்கும், போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் விசேட பிரிவுகள் ஏற்படுத்திப் போதைப்பொருள் தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதிய திட்டங்களை வகுக்கவும் போதைப்பொருள் விற் பனையைத் தடுக்கும் நட வடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும்.

மேலும் இந்த எண்ணிக்கை வருங் காலங்களில் கூடிச் செல்ல வாய்ப்புண்டு. மேலும் அனேகமாக 25–45 வயதுக்கு உட்பட்டவர்கள்தான் போதைப்பொருள்களுக்கு அடிமையாகின்றார்கள். இந்த வயதைத் தாண்டினால் பெரும் பாலும் பாவனையில் நாட்டம் கொள்ள மாட்டார்கள்.

இலங்கையில் கடந்த 2003 ஆம் ஆண்டில் 3,225,714 லீற்றர் சாராயம் உற்பத்தி செய்யப்பட்ட அதேவேளை, 2004 இல் இது 34,568,427 லீற்றராக அதிகரித்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. மேலும் இலங்கையில் ஹெரோயினுக்கு அடிமையாகிறவர்களின் தொகை ஒரு லட்சத்தையும் தாண்டியுள்ளதாக புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகின்றது. மேலும் குடி நோயால் ஆண்களில் 25 சதவீதத்தினர் வரையும், பெண்களில் 5 சதவீதம் தொடக்கம் 8 சதவீதம் வரையும் எமது வைத்தியசாலைகளில் சேர்க்கப் படுகின்றார்கள். மேலும் விலை மாதர்களில் 80 சதவீதத்தினர் குடிப்பவர்கள் என்று புள்ளி விவரம் எடுத்துக் கூறுகின்றது.

மது புலனைப் பறிக்கும், நலனைப் பறிக்கும், நோயை வளர்க்கும், ஈற்றில் உயிரைக் குடிக்கும். ஒருவன் அருந்தும் மதுவில் 10 சத வீதம்தான் சுவாசிப்பதன் மூலமும் வியர்வை மூலமும் சிறுநீர் கழிப்பதன் மூலமும் வெளியேறுகின்றன. மிகுதி 90 சதவீதமும் இரத்தத்துடன் இரண்டு மணித்தியாலத்துக்குள் கலக்கின்றது. மேலும் கருவுற்ற 3 மாதகால இடைவெளியில் பெண்கள் மது அருந்தினால் உடல், உள, ஊன முற்ற பிள்ளைகள் பிறக்கும்.

மதுவுக்கு அடிமையாவதற்கான காரணங்களை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்

1. தந்தை எந்த வழியோ தனயனும் அந்த வழி என்பதற்கு அமைய தந்தை வழி காட்டுகின்றான்.
2. உளவியல் ரீதியாக தாழ்வு மனப்பான்மை ஏற்படும் பொழுது.
3. சமூகப் பிரச்சினைகள் காரணமாக
4. திருமணம் நிறைவேறாமல் இருப்பதனால்
5. பாலியல் ரீதியான பிரச்சினைகளால்
6. குடும்பங்களில் பிரச்சினை ஏற்படும் வேளைகளில்
7. பணக் கஷ்டங்கள் ஏற்படும் பொழுது
8. சட்ட விரோத செயல்களான கொலை,களவுஎன்பவைகாரணமாக
9. வேலை வாய்ப்பு கிடையாமை

போன்ற காரணங்களுக்கு மதுவை நாடுகின்றார்கள்

மது அருந்துவதனால் பல இழையங்களும், அங்கங்களும் உடல் தொழிற்பாடுகளும் பாதிப்படைகின்றன. அவையாவன:

1. உணவு கால்வாய்த் தொகுதி பாதிக்கப்படல்
2. இதயச் சுற்றோட்டத் தொகுதி
3. சதை அழற்சி
4. அனுசேபத் தாக்கங்கள்
5. நரம்புத் தொகுதி
6. செங்குழிய உற்பத்தி
7. என்புத் தொகுதி
8. சுவாசத் தொகுதி

போன்றவைகள் பாதிக்கப்படுகின்றன.

மதுபானத்தைச் சடுதியாகக் குறைக்கும்போது அல்லது முற்றாக நிறுத்தும்போது உடலில் சில உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

1. நடுக்கம் ஏற்படுதல்
2. நெஞ்சு படபடத்தல்
3. மிகையாக வியர்வை சிந்துதல்
4. கை, கால்கள் நடுக்கம் ஏற்படுதல்
5. உயர் குருதி அழுத்தம்
6. ஓங்காளம், வாந்தி ஏற்படுதல்
7. வலிப்பு ஏற்படுதல்
8. தலைவலி ஏற்படுதல்
9. மறதி ஏற்படுதல்
10. சோர்வு ஏற்படுதல்
11. பார்வை மங்குதல், காது கேட்பது குறைதல் போன்றவை ஏற்படும்.

எனவே மதுவுக்கு அடிமையாவதிலிருந்து விடுபடுவதுக்கு ஏற்ற சிறந்த சிகிச்சை முறைமையானது உளவியல் ரீதியிலான சிகிச்சை முறையாகும். இதற்குத் தகுந்த ஓர் மனோதத்துவ நிபுணரை அணுகி அவருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி முழுமனதுடன் சிகிச்சை பெறுவார்களேயானால் நிச்சயமாக அவர்களால் மதுப்பழக்கத்திலிருந்து விடுபடுவதுடன் வைத்திய ஆலோசனையின்படி மருந்து களையும் பயன்படுத்தி வந்தால் மதுப் பழக்கத்திலிருந்து பூரணமாக விடுபட்டு நற்பிரஜையாக மக்கள் மத்தியில் வாழமுடியும் என்று வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தெரிவித்துக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவருக்கும் சொட்டு நீரும் சொர்க்கம்; நேரம் பொன்னானது

**22.06.2015** ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 15 ஆம் பக்கத்தில் "வாசகர் திருமுகத்தில்" வெளியான குடிதண்ணீர் வீண் விரயம் தொடர்பான விளக்கம்.

அங்கே குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் சில வாரங்களுக்கு முன்னர் நடந்துள்ளன. ஆனால் தற் பொழுது பயன் பெறும் ஜே/199, ஜே/200 ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு மேற்பட்ட பயனாளிகள் சேர்ந்து மூன்று வாரங்களுக்கு முன்னதாகவே புதிய பயனாளிகள் குழு ஒன்றை உருவாக்கி அதன்மூலம் நீர் வீண்விரயமாதல், சுற்றாடல் அசுத்தப்படுத்தல் போன்றவற்றை தடைசெய்ய அறிவுறுத்தியும் உள்ளோம்.

இந்த வேளையில் எந்தவித அறிவித்தலுமின்றி திடீரென குழாயில் இருந்து நீர் வருவதும் குறைந்துள்ளது. இதனால் பயனாளிகள் தங்கள் அன்றாட கடமைகளை உரியநேரத்தில் செய்ய முடியாது மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதுபற்றி யாழ். தே.ந்.வ.அ.சபைக்கு பல தடவை முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

விவரம்:- தற்போதைய நீர் விநியோக நேரம் காலை 5.45 - மாலை 5.30 மணி. மொத்த மணித்தியாலங்கள் - 12.00 எனச் சொல்கின்றனர்.

மிக குறைவாகத் தண்ணீர் வருவதால் 20 லீற்றர் தண்ணீர் எடுப்பதற்கு 14 நிமிடங்கள் தேவைப்படுகின்றன.

வழமையாக நாள் முழுவதும் தண்ணீர் தொடர்ந்து வருவதில்லை.

பயனாளிகள் விருப்பு: நீர்வரும் வேகத்தை சற்று அதிகரித்து காலை 5.00 - முற்பகல் 10.00 மணி வரையும் மாலை 5.00 மணி - 7.00 மணி வரையும் மொத்தமாக நாளொன்றுக்கு 7 மணித்தியாலங்கள் சீராக வழங்கினால் போதும் என்பதே பயனாளிகளின் விருப்பமாகும்.

நாள் முழுவதும் நீர் வரும்போது வழிப்போக்கரும் வீண்விரயம் செய்கின்றனர். எனவே தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளே நேரில் வாருங்கள். சம்பவத்தைப் பாருங்கள். சேறும் சகதியும் துர்நாற்றமுமா? அல்லது புழுதியும் தூசியும் பறக்கின்றனவா? என் பதை அவதானியுங்கள். காலையில் நீண்ட வரிசையில் காத்து நின்று மக்கள் புலம்புகின்றனர்.

*குடிநீர் பாவனையாளர்குழு*
*நிர்வாகிகள்*

## வாசகர் திருமுகம்



## இப்படி ஒப்பிடலாமா!

**015.6.24**ஆம் திகதிய உதய னில் வெளிவந்த "கேட்டாரே ஒரு கேள்வி" எனும் செய்தி தொடர்பாக எனது சிறு கருத்து.

அரச சேவையில் உள்ள ஒரு சிற்றூழியரின் சம்பளம் குறித்த தெளிவு இல்லாததனால் அல்லது அது தொடர்பான கேள்விக்குச் சரியாகப் பதிலளிக்கப்படாததால் இந்த விடயம் சபை வரை வந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

அரச சேவையில் சேர்வோர் தகுதி அடிப்படையில், தேர்வுகள் மூலமே உள்வாங்கப்படுகின்றனர். அவர்களின் ஆரம்பச் சம்பளம் மிகக் குறைவே. மிகவும் சிரமப்பட்டு பரீட்சை எழுதி வெற்றி பெற்று, நேர்முகப் பரீட்சைக்கு முகம் கொடுத்துத் தெரிவாகி, பின்னர் ஒரு வருடப் பயிற்சி பெற்று நியமிக்கப்படும் இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களின் ஆரம்பச் சம்பளம் 23 ஆயிரத்துக்கும் குறைவாகும். சிற்றூழியர் ஒரு வரின் ஆரம்பச் சம்பளம் 13 ஆயி ரத்துக்கும் றைவாகும்.

நண்ட கால உழைப்பு மற்றும் பதவி உயர்வுகளா லேயே அவர் களின் சம்பளம் படிப்படியாக உயர் கின்றது. என்னதான் தலைகீழாக நின்றாலும் 35 அல்லது 40 வருட சேவை செய்து ஓய்வு பெறும் ஒருவரின் ஓய்வூதியம் சாதாரண பதவிகளில் 30 ஆயிரத்தையும் உயர் பதவிகளில் 40 ஆயிரத் தையும் தாண்டாது.

மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதனின் மகன் குறிப்பிட்ட சிற்றூழியர் குறைந்தது 10 வருடங்களுக்கு மேல் சேவை செய்தவராக இருப்பதுடன் முறைப் படி பரீட்சைகளில் சித்திபெற்று பதவி உயர்வு பெற்றவராகவும் இருந்திருக்கவேண்டும். அதனால் தான் அவருக்கு 35 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கிறது. ஒரே வருடத்தில் நிச்சயம் அவ் வளவு கிடைத்திருக்காது.

மக்கள் சேவையே மகேசன் சேவை என அரசியல் பதவிக்கு மக்களது வாக்குகளினால் வருபவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அரச ஊழியரின் சம்ப ளத்துடன் ஒப்பிடுவது சரியானதும் அல்ல; அழகானதும் அல்ல.

உண்மையில், பல துன்பங்கள் இடமாற்றங்கள் மத்தியில், மனைவி மக்களைப் பிரிந்து கடமையாற்றி ஊதியம் பெறும் எம் போன்ற அரச ஊழியரைத் தவறாக ஒப்பீடு செய்வது மனம் நோக வைக்கும் செயலாகும்.

*ந.சதாசிவ ஐயர்*
*ஓய்வு பெற்ற மேதிக பதிவாளர் நாயகம்*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## ஒப்பீடு சரியானதா?

மிருசுவிலில் 8 பேரைக் கொலை செய்த இராணுவ அதிகாரிக்கு 15 வருட விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. 15 வருடங்களின் பின்னர் தமது உடன் பிறப்புக்களை கொலை செய்த இராணுவ அதிகாரிக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியமையை அவர்களது உறவினர்கள் வரவேற்றுள்ளனர். 15 வருடங்களின் பின்னராவது நீதி நிலைநாட்டப்பட்டுள்ளமை குறித்து அவர்கள் மகிழ்சியடைந்துள்ளனர்.

இவை ஒரு புறம் இருக்க, இந்த வழக்கில் அரச தரப்பு சட்டத்தரணி பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமன்ன தெரிவித்த கருத்துக்கள் நிச்சயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். 'நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பின் மூலம், இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு உள்நாட்டுக்குள் பலம் வாய்ந்த கட்டமைப்பு இருக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும், இராணுவத்தினரும் நியாயமான முறையில் விசாரணைகளை மேற்கொண்டதன் காரணமாகவே இந்தத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது' என்று தெரிவித்துள்ளார். இதனூடாக இலங்கையின் உள்ளகப் பொறிமுறையினூடான விசாரணையும் நம்பகத் தன்மையானதாக இருக்கும் என்பதுடன் குற்றம் புரிந்தவர்கள் எல்லோரும் தண்டிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்ல முற்படுகின்றார்.

இறுதிக் கட்டப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்கள் பல தரப்பினாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கையின் புதிய அரசும், உள்ளக விசாரணையினூடாகவே இதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. உள்ளகப் பொறிமுறையினூடாக நீதி கிடைக்காது என்பதும், போரின்போது குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ஒரு தரப்பினரே இந்த விசாரணைகளை முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும் தமிழ் மக்களின் வாதமாக இருக்கின்றது. இதனாலேயே உள்ளக விசார ணையை தமிழர் தரப்பு ஆணித்தரமாக நிராகரித்து வருகின்றது.

உள்ளக விசாரணைக்கான ஆயத்தங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில், இலங்கை அரசின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை நியாயப்படுத்தும் வகையில், மிருசுவில் கொலை வழக்கின் தீர்ப்பை ஒப்பீடு செய்துள்ளார் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமன்ன. இதேபோன்றே இராணுவப் பேச்சாளரும், இறுதிப் போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசிய மில்லை என்பதையும், உள்ளக விசாரணைப் பொறி முறையினூடாக நீதி நிலைநாட்டப்படும் என்பதற்கு மிருசுவில் சம்பவம் மிகச் சிறந்த உதாரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை வைத்துக் கொண்டு உள்ளக விசாரணைப் பொறிமுறை இலங்கையில் பலமாக இருக்கின்றது என்பதை கூற விளைகின்றவர்கள், தமிழ் மக்களைக் கொலை செய்த ஆயிரம் வழக்குகளில் இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்கு என்ன கூறப் போகின்றார்கள்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினருக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவன் சஞ்சீவன் கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தான். அது தொடர்பில் இராணுவத்தினருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் யாருக்கு தண்டனை வழங்கப்பட்டது ? இவ்வாறு இராணுவத்திற்கு தண்டனை வழங்கப்படாத பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவற்றுக்கு அப்பால் இறுதிப் போரின் போது இராணுவத்தினர் குற்றம் இழைத்தனர் என்ற குற்றச்சாட்டை இதுவரையில் அரசு ஏற்கவில்லை. இறுதிப் போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளைச் சுட்டுக் கொன்றது முதல், பல சம்பவங்கள் நடக்கவேயில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதியும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகாவும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாயவும் சொல்கின்றனர். அடுத்து இராணுவத்தினரிடம் எந்தவொரு தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளும் சரணடைந்து காணாமற் போகவில்லை என்கின்றனர். இவ்வாறு நடந்த சம்பவங்களை அடியோடு, உயர்மட்டத்தினர் மறுதலித்தே வருகின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, போரின் இறுதி இரண்டு வாரங்களில் நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்பாக இருந்த பாதுகாப்பு அமைச்சர்தான் தற்போதைய ஜனாதிபதி மைத்திரி. இவ்வாறான நிலையில், உள்ளகப் பொறிமுறையில் எவ்வாறு நீதியான விசாரணை நடக்கும் என்று எதிர்பார்க்க முடியும். ஒரு சம்பவத்தில் நீதி வழங்கப்பட்டு விட்டது என்பதற்காக, எல்லாச் சந்தர்ப்பத்திலுமே இவ் வாறு நீதி கிடைக்கும் என்று சொல்லும் பிரதி சொலி சிட்டர் ஜெனரல், இரு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் பிரதம நீதியரசருக்கே நீதிகிடைக்காமல் போனதை மறந்து விட்டார் போலும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புலி ஆதரவாளர்களது மனங்களை வென்றெடுப்பதே இன்றைய தேவை

தமிழ் மக்கள் தொடர்பில் எங்காவது ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டால் அல்லது எவராவது அவர்களுக்குச் சாதகமான கருத்தை வெளியிட்டுவிட்டால், அதற்கு உடன டியாகவே புலிச்சாயம் பூசிப் பூதாகாரமாகப் பெருப் பித்து தென்னிலங்கையில் பேரினமக்களை உசுப் பேற்றி அதன்மூலம் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள முயற்சிப்பது சில அரசியல் கட்சிகளதும், அவைகளின் தலைவர்களதும் கொள்கை யாக இருந்து வருகின்றது.

அண்மையில் புங்குடுதீவு மாணவியின் படு கொலையை அடுத்து அதற்கு எதிராக மக்கள் கிளர்ந் தெழுந்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கியபோதும், அதில் புலிகளின் பின்னணி இருப்பது போன்று கற்பித்துக் கொண்டு, இவ்வாறுதான் முன்னர் விடுதலைப்புலிகள் தலை தூக்கினார்கள் என்பதாக மொட்டந்தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போட்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டங்களில் பேசத் தொடங்கியிருந்தார்.

அதேபோல் அண்மையில் லண்டனில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறையுள்ள பிரதிநிதிகளோடு இலங்கை வெளியுறவு அமைச்சரும் வேறு சிலரும் கலந்துரை யாடல் ஒன்றை நடத்தியிருந்தமை தொடர்பிலும், வெளி நாட்டில் இயங்கும் புலிகளுடன் அரசு உறவு வைத்துக் கொள்வதாகவும், அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் பரப்பு ரைகளை ஆரம் பித்து நடத்தி வருகிறார்கள்.

2009 ஆம் ஆண்டோடு தமிழீழ விடுதலைப் புலி களை ஒழித்துக் கட்டிவிட்டதாக அறிவித்து அதனைப் பெரியதோர் வெற்றி விழாவாக வருடம் தோறும் நடத்திக் கொண்டும், பேரின மக்களின் மனங்களில் மாபெரும் வீரர்களாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்கள், அந்த இடத்திலிருந்து தாங்கள் கொஞ்சமேனும் கீழ் நழுவிவிடாமல் இருக்கவே இவ் வாறு அடிக்கடி புலிகள் பற்றிய அபாயத்தை மக்கள் மத்தியில் கிளப்பி வருகிறார்கள். அது மட்டுமன்றி, இந்த நாட்டையும் நாட்டின் இராணுவத்தையும் ஒரு காலத் தில் பெரும் கலக்கத்துக்குள்ளாக்கியவர்களான புலிகள் அமைப்புக் குறித்த பயப்பிராந்தி அவர்களை விட்டு இன்னும் அகலவில்லை. அந்த அதிர்வு நிலையிலேயே தென்னிலங்கை மக்களையும் அவர்கள் வைத்திருக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கிருக் கிறது. அதனால் தமிழர் தொடர்பான எந்த விடயத் திலும், புலிகள் மறைந்திருப்பதாக அவர்களுக்கு ஒரு மாயத் தோற்றம் புலப்பட்டுக்கொண்டே இருக் கின்றது. அது அவர்களை விட்டு இப்போதைக்கு விலகாதாயினும், அவர்கள் இவ்விதம் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப்பதால் அதனைப் பேரின மக்களால் வெகுகாலத்துக்குச் சீரணித்துக் கொண்டிருக்க முடியாது. ஒரு கட்டத்தில் அரைத்த மாவு நிச்சயம் புளித்துப் போகவே செய்யும் -- உருகிக் கெட்டுப்போக நேரும்.

இப்பொழுது இன்னொரு விடயம் அவர்களின் கைக்குக் கிடைத்திருக்கிறது. அரசியலுக்கு வரப்போவ தில்லை என்று அறிவித்துள்ள முன்னாள் பாதுகாப்பு செயலரும் இதில் மூக்கை நுழைக்க முயல்கிறார். புலிகளை அழித்த வீரர்களில் ஒருவராக இவரும் கிரீடம் சூட்டப்பட்டவர் அல்லவா? அதனால்தான் அதனைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சின் வருடாந்த அறிக்கை பற்றி அவர் வாய் திறந்திருப்பதாகத் தெரி கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் தொடர்ந்து செயற்பட்டு வருவதாக அந்த அறிக்கை கூறுகிறது. அந்த அறிக்கை 2014 ஆம் ஆண்டுக்குரியது. ஒவ்வொரு வருடத்திலும் இவ்வாறான ஆய்வ றிக்கையொன்றைத் தங்கள் புலனாய்வுத் துறையின் தகவலுக்கமைவாக வெளியிடுவது அமெரிக்க இரா ஜாங்க அமைச்சின் வழக்கம். இதனைப்பெரிதுபடுத்திக் கொள்ள வேண்டியதில்லை என்று வெளியுறவு அமைச் சர் மங்கள சமர வீர விளக்கம் கொடுத்த பின்னரும், முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் போன்றவர்கள் நாடாளுமன்றத்திலும் இந்த விடயத்தைக் கிளப் பியிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன் நன்றாகவே பீரிஸுக்கு பதில் கூறியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சில பிரிவுகள் ஆங்காங்கே செயல்படுவதாய் இருக்கலாம். வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும்கூட அந்த மனப்பான்மை கொண்டவர்கள் இருப்பது தவிர்க்க முடியாதது. போர்முறையில் புலிகளை வென்றவர்கள், புரிந் துணர்வு நல்லிணக்க முறையிலும் அவர்களை வெல்ல வேண்டும். ஏனெனில் அவர்களும் இந்த நாட் டின் குடிமக்கள். அவர்கள் மனம் மாறி மீண்டும் நாட்டுக்குத் திரும்பும் வகையில் அரசு செயற்பாடுகளை முன் னெடுக்க வேண்டும். அந்த வகையில் ஆறு வருடகால மாக நல்லிணக்கம் ஏற்படுத்து முயலாது, வெறுப்புணர் வுகளை மட்டுமே வளர்த்ததன் மூலம் தோல்வி கண்ட [illegible] இந்த நாட்டில் நல்லிணக் கத்தை [illegible] களுக்கு இடம் கொடுத்து விட்டு ஒதுங்க வேண்டும். அதுவே நாட்டின் எதிர்காலத் துக்காக இவர்கள் செய்யக்கூடிய நன்மையாக இருக்கும்.

# தெளிவு பெறவேண்டிய நிலையில் தமிழ் மக்கள்

■ வந்தியத்தேவர்



விரும்பியபடி ஆட்டம் போடக் கூடியதாக இருந்த வசதிகளையும் வாய்ப்புக்களையும் இழக்க எவர்தான் விரும்புவார்கள். துரதிர்ஷ்ட வசமாக சோதிடர்களை நம்பி, இருந்த சுகங்களைப் பறிகொடுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க விரும்புவாரா? பதவி பறிபோன நிலையிலும்கூட முடியைத் துறக்க விரும்பாத பௌத்தர் அவர். அதனால்தான் ஜனாதிபதி மைத்திரி வழங்கவுள்ள கௌரவப் பதவிகள் எதனையும் ஏற்கத் தான் தயாரில்லை என அவர் தெரிவித்துள்ளார். அதிகாரம் மிக்க பிரதமர் பதவி மட்டுமே இப்போதைய அவரது தேவை. அதிகாரம் மிக்க ஒருவராக அரசகட்டிலில் இருந்து சர்வ அதிகாரம் மிக்கவராக இந்த நாட்டைத் தனது கட்டுப்பாட்டில் ஆயுள் பூராகவும் வைத்திருப்பதே அவரது ஆசை. அந்த ஒன்றை எப்படியும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற அவாவின் வெளிப்பாடே பிரதமர் பதவி மீதுள்ள உடும்புப் பிடி. பத்து வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னர் கௌரவமாக ஒதுங்கிக் கொள்வதுதான் சிறப்பு. அதைவிடுத்து அடுத்தவர் சல்லாரி தட்டுகிறார் என்பதற்காக நாட்டியம் ஆட முற்படுவது ஒருபோதும் உகந்ததாகக் கொள்ளமுடியாது.

பிரதமர் பதவிக்கு யாரை முன்னிலைப்படுத்தப் போகிறார்களோ என்ற ஏக்கம் நிமல் சிறிபால டி சில்வாவிடமும் காணப்படுகிறது. மஹிந்தவா, நானா என்பதுதான் நிமல் சிறிபால டி சில்வாவை இப்போது வாட்டி எடுக்கும் கேள்வி. வேட்பாளராகவோ அன்றி தேசியப்பட்டியல் மூலமாகவோ மஹிந்தவைத் தெரிவு செய்ய அனுமதிக்கப் போவதில்லை என்ற நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்தாலும்கூட, பிரதமர் பதவி விடயத்தில் அவரிடம் நிதானம் இருப்பதாகத் தெரியவில்லை. மஹிந்தவுக்கு இடமில்லை. மஹிந்த கட்சியின் பிரதமர் வேட்பாளர் என்று முரண்பட்ட கருத்துக்களும் மைத்திரியிடமிருந்து வராமலில்லை. மைத்திரியின் தடுமாற்றத்தால் சுதந்திரக்கட்சியினர் மட்டுமன்றி குழம்பிப்போயுள்ளவர்கள் நாட்டு மக்களும்தான். தட்டுத்தவறி மஹிந்தர் பிரதமராகிவிட்டால் நாட்டு நிலைமை என்னவாகும் என்பதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் புரி யாததல்ல. நாட்டுக்குத் தேவைப்படுவது அரசியல் சமூக ஜனநாயக மாற்றங்களே. அரசியல் சமூக மாற்றங்களுக்காக பண்டார நாயக்க வழங்கிய அர்ப்பணிப்புப்போன்று மீண்டும் அர்ப்பணிப்புக்கள் தேவை யான காலகட்டம் இது எனவும் அவர் கூறியுள்ளார். (நாட்டில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து குழப்பங்கள் உருவாகக் காரணமானவர் பண்டாரநாயக்கா என்பதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்) பண்டாவைத் தொடர்ந்து வந்த சிங்களத் தலைவர்களும் இலங்கையில் காணப்படும் பின்ன டைவுகளுக்கு காரணமானவர்களே. பல்வேறு [illegible] இந்த [illegible] யான மாற்றத்தை ஏற்படுத்த

ஜனாதிபதி மைத்திரி விரும்பினாலும்கூட, அதைத் தடுத்து இடையூறுகளை உண்டுபண்ணு வதன் மூலமே தனது அபிலாசைகள் நிறைவேறும் என்பதில் உறுதியான தடம்பதித்துள்ளார் மஹிந்த. அந்த உறுதிதான் பிரதமர் பதவி.

தான் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதில்லை என சுதர்சனராம விகாரையில் இடம்பெற்ற கூட்டத்தில் மஹிந்த கூறியுள்ளார். விரைவில் நடக்கவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக அவர் நிறுத்தப் பட வேண்டும் என்பதை அவரது விசுவாசிகளான வாசுதேவ நாணயக்கார,தினேஷ்குணவர்த்தன போன்றவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அரசியலில் இருந்து ஓய்வுபெறப்போவதில்லை என்பதால் அவரிடம் மிகவும் பெரிய அளவிலான உள்நோக்கம் ஏதா வது இருக்கவும் கூடும். தமிழர்களையும் ஏனைய சிறுபான்மை மக்களையும் வேண்டாதவர்களா கவே நோக்கும் மஹிந்த, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தம்மைத் தோற்கடித்தமைக்காக அவர்களைப் பழிவாங்கவும் எண்ணக் கூடும். கிடைக்கக் கூடிய வளங்களைச் சூறையாடிய ஒரு மன்னராக, சர்வாதிகாரியாக மீண்டும் குடும்ப ஆதிக்கத்தை இங்கு ஏற்படுத்திக் கொள்ள வேண் டும் என்ற ஆதிக்க வெறியும் அவரைப் பீடித்துள்ளதால் அரசியலில் இருந்து அவரால் ஓய்வுபெற முடியாதுள்ளது. அதனால் தான் ஆட்சிக் கட்டிலில் அமரத் துடிக்கின்றார் என்பதுதான் உண்மை. இந்த உண் மைதான் தங்களையும் பாதுகாக்க உறுதுணையாகும் என்பது அவரது ஆதரவாளர்களின் கருத்து. தேர் தலின் பின்னர் மஹிந்தவின் ஆட்சி உருவாகும். இதை எவராலும் தடுக்க முடியாது. சுதந்திரக்கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியில் இடமில்லாது விடின் அவர் சார்பிலான எத்தனையோ கட்சிகள் உள்ளன. அந்தக் கட்சிகளின் சின்னங்களில் போட் டியிட முடியும் என வாசுதேவவும் பிரதமர் வேட்பாளராக மஹிந்த களமிறங்குகிறார் என தயான் ஜெயதிலகவும், மஹிந்த பிரதமராவதை மைத்திரியால் தடுக்க முடியாது என ஆதரவு அணியினரும் தெரிவித்துள்ளனர். கடந்த தேர்தலில் மஹிந்த வைத் தோற்கடித்தது ஒரு வரலாற்றுத் தவறு எனவும், ஒபாமாவும் நரேந்திரமோடியும், ஜோன் கெரி போன்றவர்களும்தான் இதற்குக் காரணம் எனவும் அவரது ஆதரவாளர்கள் குமுறுகிறார்கள்.

எது எப்படி இருந்தாலும் அடுத்து வரும் பொதுத் தேர்தல் இந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் ஒன்று என்பதை மறுக்க முடியாது. மஹிந்த மீண்டும் ஆட்சியமைக்க இடமளியோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூ[illegible]றார். தேர்தல் வரலாற்றில் மிகப் பெரிய தோல்விகளைச் சந்தித்தவர் ரணில். தென்பகுதி மக்களி டையே மஹிந்தவுக்குள்ள ஆதரவு இவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த முறையும் அரசை அமைப்பதற்கான சக்தி சிறுபான்மை இனங்களைப் பொறுத்ததாகவே இருக்கும். தமிழ் , முஸ்லிம் மக்களின் முடிவுதான் நாட்டின் எதிர்கால ஆட்சியைத் தீர்மானிக்கும் என்பதுதான் நிஜம். கடந்த தேர் தலின் பின் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த நம்பிக்கைகள் நிறைவேறியதாக இல்லை. மீள்குடியேற்றம், படை முகாம்களை அகற்றல் போன்ற மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் அவர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளன. முன்னர் கிட்[illegible] ஏமாற்றங்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் கிட்டியுள்ளது. வேறுவழி யின்றி அடுத்த தேர்தலின் பின்னர் தமிழர்கள் பிரச்சினை தீர்ந்து விடும் என சம் பந்தர் மக்களைச் சமாளித்துள்ளார். தீர்வுக்கான பொறிமுறை குறித்தும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு குறித்தும் ஜனாதிபதியுடன் ஆராயப்பட்டுள்ளது. நீதியையும் சமாதானத்தையும் நிலை நாட்ட உறுதியுடன் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரி பல தடவைகளில் தெரிவித்துள்ளார். இதனால் மஹிந்த ஆதரவா மைத்திரி ஆதரவா என்பதில் தமிழ் மக்களுக்கு ஒரு தெளிவு தேவை. நடைபெறப் போகும் தேர்தல் உண்மையில் ஜனநாயகத்துக்கும் சர்வாதி காரத்துக்கும் இடையிலான போட்டியே. தமிழர்களைப் பொறுத்தவரை மஹிந் தவும் ரணிலும் ஒரே தட்டில்தான் உள்ளனர். மஹிந்த நேரடியாகவே தமிழர்களை ஒழித்துவிட முனை கிறார். இதனை மறைமுகமாகச் செய்வதில் ரணில் ஈடுபட்டுள்ளார். தமிழர்களும்ஏனைய சிறு பான்மை இனங்களும் மென்போக்குக் கொண்ட, நாட்டின் சமாதானத் தையும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் விரும்பும் மைத் திரிக்கு தமது ஆதரவை நல்கும் வகையில் முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த முடிவு ஜனநாயகத்தின் வலுவுக்குக் கை கொடுப்பதாக அமைய வேண்டும். பிரதமர் பதவிப் பே[illegible] களால் அது சா[illegible]யப்படுமா [illegible] தைப் பொறுத் [illegible]ந்துதான் பா[illegible] முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது என்ன செய்யும்?

■ நப்பின்னை

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத் தெட்டாம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர். ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பின்படி விகிதாசார தேர்தல் முறைமை கொண்டு வரப்பட்டது. 1947 முதல் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பைக் கணித்துப் பார்த்ததில் விகிதாசார முறையில் தேர்தல் நடத்தினால் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி நிலைக்கும் என்ற முடிவினால் அதனை ஜே.ஆர். 1978 அரசியல் யாப்பில் கொண்டுவந்தார். அவரது கணிப்புப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குச் சார்பாக அமைந்துவிட்டது. தற்பொழுது ஏற்பட்டுள்ள புதிய ஆட்சி தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அரசியல் யாப்பில் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்தத் திருத்தம் பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்பொழுதுள்ள ஆட்சி நல்லாட்சி என்று கூறப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து ஆட்சி செய்கின்றன. அதேநேரம் எதிர்க்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியேயாகும். இது உலகில் எந்த நாட்டி ...ம் நடைபெறாத புதுமையான நிகழ்வாகும்.

தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள இருபதாவது திருத்தத்தின் மூலம் சிறு கட்சிகளுக்கு இடம் கொடாது இருகட்சி ஆட்சி முறையை ஏற்படுத்தவே முயல்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பதில் முதன்மையாக உள்ளது ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியே ஆகும். நல்லாட்சி எனப்படும் இன்றைய ஆட்சியை ஏற்படுத்த உழைத்த கட்சி மக்கள் விடுதலை முன்னணி. இந்தக் கட்சி இன்று இருபதாவது திருத்தம் பற்றிக் கூறுபவற்றைப் புறந்தள்ளிவிட முடியாது. ஐக்கிய தேசியக்கட்சியின் ரணில் இவ்...றான குள்ளப்புத்தி நகர்வுகளை மேற்கொள்வதில் வல்லவர். எனவே தான் ம.வி.முன்னணியும், இதர சிறு கட்சிகளும் இந்த இருபதாவது அரசியல் திருத்தத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றன.

இது இவ்வாறிருக்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களின் நிலை எவ்வாறு உள்ளது என்றால் அதிலும் எண்ணிக்கைக் குறைவே ஏற்படப்போகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 இருக்க வேண்டும் என்று ஒரு பகுதியினர் கூற– 255 ஆக இருக்கவேண்டும் என்று வேறொரு பகுதியினர் கூற– 237 ஆக இடைநடுவாகப் போவோம் என ஜனாதிபதி கூற இன்னமும் இழுபறி நிலையிலேயே அது நீடிக்கின்றது. 1947 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி முதலில் செய்தது, தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தமையே ஆகும். தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்தது. வாக்குரிமையைப் பறித்தது. அதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணில் தான் இன்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதே ஐக்கிய தேசியக் கட்சி அரசுதான் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பூர்வீக மண்ணில் சிங்கள மக்களைக் குடியேற்றி நாடாளுமன்றத் தொகுதிகளை உருவாக்கிச் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகரிக்கச் செய்தது.

இவ்வாறான பெரிய இனவாதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்திய ஐக்கிய தேசியக்கட்சியை நல்ல கட்சியாகக் காட்டிக்கொண்டு, 1956 இல் தனிச் சிங்களத்தைக் கொண்டு வந்ததனால் தான் இங்கு இனவாதம் ஏற்பட்டதாகவும் பண்டாரநாயக்கவே இனவாதி என்றும் தமிழர் தரப்பில் சிலர் தொடர்ந்து எழுதியும், பேசியும் வருகின்றனர். மக்கள், வரலாற்றை மறந்து விடுவார்கள் என்ற நினைப்பில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அடுத்த ஆட்சி நடத்த வேட்கை கொண்டவர்களே இவற்றுக்குப் பின்னால் உள்ளனர் என்பது ஐயத்துக்கு இடமில்லாமல் தெரிகின்றது.

மண் அபகரிப்பு, வாக்குரிமை, குடியுரிமை பறிப்பு மட்டுமல்ல 1944 இலேயே சிங்கள மொழியே நாட்டின் ஆட்சி மொழி என அரச சபையில் தீர்மானம் கொண்டு வந்தவர் ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த் தனவே ஆகும். அதை எதிர்த்து அதைத் தோல்வியுறச் செய்தவர் பண்டாரநாயக்கவே. அப்பொழுது பண்டார நாயக்க இனவாதியல்ல, ஆனால் பின்னர் அவரும் இனவாதியானார். இடதுசாரிகள் என்று பெருமை பேசியவர் கள்கூடப் பின்னாளில் இனவாதிகளாக மாறிவிட்டனர். இந்த நிலை தான் இலங்கைத்தீவில் இன்று வரை உள்ளது. அனைத்துச் சிங்களக் கட்சிகளும் இனவாதக் கட்சிகளேயாகும். சில 99 விழுக்காடு இனவாதம் பேசினால், வேறு சில 98 விழுக்காடு இனவாதம் பேசும் கட்சிகளேயன்றி வேறுபாடு அதிகமில்லை.

இந்த இனவாதக் கட்சிகள் இருபதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சில திருத்தங்கள் மூலம் சிறு உயர்வைக் காட்டினால் தமிழ்க் கட்சிகள் மகிழ்ச்சியடையக்கூடும். தங்களது எதிர்ப்பு மூலம் சாதித்து விட்டதாகக் கூறக்கூடும். அல்லது பிரதமரும் ஜனாதிபதியும் நல்லாட்சி மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகவும் புகழ்வார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கையில் சிறிது கூடுவதால் நாடாளுமன்றத்தில் எதனையும் சாதிக்க முடியாது. ஆக சில உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுமானால் யார்? யார்? போட்டி போடுவது. எனது கட்சிக்கு இத்தனை, எனது கட்சிக்கு இத்தனை என்றபோட்டி சற்றுக் குறைந்து உட்கட்சிப் பிரச்சினைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற அமைப்புக்களுக்கு ஏற்படலாம். இதைவிடப் பெரிய நன்மை எதுவும் தமிழ் மக்களுக்கு ஏற்படப் போவதில்லை.

> **தமிழ் மக்கள் தொடர்பான சட்டவரைவுகள் என்றால் சிங்கள உறுப்பினர்கள் ஒற்றுமையாக நின்று எதிர்த்துத் தோற்கடிப்பார்கள். இதை விடுத்து தமிழ் மக்களது உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடிவிட்டது. எமது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு விட்டார். பிரதமர் ஏற்றுக் கொண்டு விட்டார் என்று கூறுவது கண் துடைப்பு நாடகமே.**


இந்த ஒற்றை ஆட்சி நாடாளுமன்றம்தான் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றியது. 1972, 1978 அரசியல் யாப்பை நிறைவேற்றியது. அது மட்டுமல்ல ஏராளமான சட்டங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நிறைவேற்றப் பட்டதும். இதே நாடாளுமன்றத்திலேயே தான். 1977 இல் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கிடைத்தும் எதையாவது சாதித்தார்களா தமிழர் தரப்பினர். ஆட்சியில் பங்குபற்றியிருந்தும் மாவட்ட சபைகள் சட்டத்தைக் கொண்டுவர முடியாமல் போனது. ஐக்கிய தேசியக் கட்சியின் 1965 ஆட்சியிலேதானே.

எனவே தமிழ் மக்களைப் பொறுத்த சட்டவரைவுகள் என்றால் சிங்கள உறுப்பினர்கள் ஒற்றுமையாக நின்று எதிர்த்துத் தோற்கடிப்பார்கள். இதை விடுத்து தமிழ் மக்களது உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடிவிட்டது. எமது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு விட்டார். பிரதமர் ஏற்றுக்கொண்டு விட்டார் என்று கூறுவது கண் துடைப்பு நாடகமே.

இருபதாவது திருத்தம் எவ்வாறு இருந்தாலும் தமிழ் மக்களுக்கு கடுகளவு நன்மையும் ஏற்படப் போவதில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் சில பிரச்சினைகளை அது தீர்த்து வைக்கலாம். அதனால் அது தமிழ்மக்களுக்கானதீர்வாக இருக்கப்போவதில்லை. ஆனால் நல்லாட்சி அரசு எமது கோரிக்கையை ஏற்றுவிட்டது. இந்த அரசுதான் தொடர வேண்டும் என்று தமிழ் அரசியல் களத்தில் குரல் எழும்பும். ஏனென்றால் சேனாதிராசா இந்த அரசில் தாங்கள் ஏமாற்றமடைந்து விட்டதாகவும், அவர்களது நடவடிக்கை கவலையளிப்பதாகவும் கூறியுள்ளார். ஆனால் சம்பந்தனுடன் சேர்ந்து ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்திக்கப்போவதாகவும் அவர் கூறியுள்ளார். எவர்கள் வாக்குறுதிகளை மீறினார்களோ, அவர்களைச் சந்திக்கப் போவதாக அவர் கூறுகின்றார். ஆனால் கடந்த ஞாயிற்றுக் கிழமை (2009.07.21) தனியார் தொலைக்காட்சியில் தோன்றிய சுமந்திரன் ஆட்சியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்ல நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின்பும் இதே ஆளும் கட்சி மைத்திரிபால – ரணில் கூட்டு ஆட்சி நீடிக்கும் என்றும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அவர்கள் ஆட்சிக்கு வருவார்கள் என்றும் ஆரூடம் கூறியுள்ளார். அத்துடன் புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படுமென்றும், அதில் வடக்கு மாகாணசபையும், கிழக்கு மாகாண சபையும் இணைக்கப் படுமென்றும் தனது ஆரூடத்தில் தெரிவித்துள்ளார்.

இவரது எண்ணம் நிறைவேறாது என்பது நாட்டின் இன்றைய நிலைமையை நன்கு அறிந்தவர்களுக்குப் புரியும். அதை விடுத்துப் பார்த்தால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு வடக்கு –கிழக்கு மாகாண சபைகள் இணைந்தால் தீர்வு கிடைத்து விடும் என்று வாய் கூசாமல் கூறுகின்றாரே சுமந்திரன்.

இவர் போன்றவர்களுக்கு வித்தாகிப் போனவர்களின் ஈகம் புரியாது என்பது தெரிந்ததே. ஆனால் தமிழ் மக்கள் தாங்கள் ஏன் இவ்வளவையும் இழந்தோம், ஏன் முள்ளிவாய்க்கால் வரை போனோம் என்பதை மறக்க மாட்டார்கள். ஸ்ரீலங்காவின் சுதந்திர சதுக்கத்துக்கு சம்பந்தனுடன் சென்றவர்களுக்கு தமிழ் மக்களின் உணர்வுகள் தெரியவராது. இவர்களது தலைமையை ஏற்றுக் கொண்டவர்கள் இருபதாவது திருத்தத்தில் சாதனை படைத்து விட்டதாகப் பீற்றிக் கொள்ளட்டும். ஆனால் தமிழினம் தனது ஈகத்துக்கான பதில் இருபதுமல்ல, இணைந்த வடகிழக்குமல்ல என்று விரைவில் கூறும் என்று நம்பலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 1 | 2 | 6 | 5 | 7 | 4 | 8 |
| 2 | 7 | 5 | 4 | 3 | 8 | 9 | 1 | 6 |
| 4 | 8 | 6 | 1 | 7 | 9 | 3 | 5 | 2 |
| 5 | 2 | 9 | 3 | 8 | 1 | 4 | 6 | 7 |
| 3 | 4 | 7 | 9 | 2 | 6 | 1 | 8 | 5 |
| 6 | 1 | 8 | 7 | 5 | 4 | 2 | 3 | 9 |
| 1 | 5 | 4 | 8 | 9 | 7 | 6 | 2 | 3 |
| 7 | 6 | 2 | 5 | 1 | 3 | 8 | 9 | 4 |
| 8 | 9 | 3 | 6 | 4 | 2 | 5 | 7 | 1 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | 5 | 6 |
| | 6 | | 8 | | 4 | 1 | | |
| 7 | | | 6 | | | | | |
| | | | 9 | 4 | | | | 5 |
| | | | 2 | | | 8 | | |
| 8 | | | | 3 | 1 | | | |
| | | | | | 6 | | | 1 |
| | | 2 | 7 | | 9 | | 6 | |
| 3 | 9 | | | | | | | 7 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



★ நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால், பாம்பின் விஷம்கூட சக்தி யற்றதாகி விடும்.

★ மனிதனே மேலானவன். எல்லா மிருகங்களைவிடவும் எல்லாத் தேவர்களைவிடவும் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர் எவருமே இல்லை.

★ என்றைக்கு ஆன்மிகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயுதம் தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்தச் சமுதாயத்துக்கு அழிவும் ஆரம்பித்து விடுகிறது.

★ தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

★ உனக்குத் தேவையான சகல வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

★ உயர்ந்த லட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால், லட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

## நாளை

**ஆனி-13**
**ஞாயிற்றுக்கிழமை**
**28.06.2015**

**திதி: ஏகாதசி**
மு.ப. 09.21 வரை
**நட்சத்திரம்: விசாகம்**
பி.இ.03.15 வரை
**சுபநேரம்:**
08.55-10.25 வரை
**இராகுகாலம்:**
04.25-05.55 வரை

# தாய்ப்பால் கொடுப்பதால் கிடைக்கும் 10 நன்மைகள்

மனித குலத்தில் குழந்தைகளுக்கு வழங்கக் கூடிய உணவுகளிலேயே மிகவும் ஆரோக்கியம் தரக்கூடிய உணவு தாய்ப் பாலேயாகும். குழந்தைகளின் முழுமையான உடல் மற்றும் மன வளர்ச்சிக்குத் தாய்ப்பால் மிகவும் அவசியமானது. தாய்ப்பால் புகட்டுவதால் தாயின் அழகு குறையும் என்று கருதுவதால் பலரும் இப்பொழுதெல்லாம் தாய்ப் பால் புகட்டுவதைத் தவிர்க்கின்றனர். ஆனாலும் சர்வதேச அளவில் ஐந்து வயதுக் குழந்தைகளில் ஒரு கோடி குழந்தைகள் தாய்ப்பால் புகட்டப்படாமல், ஊட்டச்சத்து குறைபாட்டால் இறக்கின்றன. ஆகவே அனைவரும் தாய்ப் பாலின் நலன்களை அறிந்து, அதைப் பற்றிய விழிப்புணர்வு பெறு



தல் அவசியமாகிறது. பச்சிளம் குழந்தைக்கு தாய்ப் பால் புகட்டுவதே சிறந்தது. அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் மட்டும் அதற்குக் காரணம் அல்ல, தாய்ப்பால் புகட்டுவதில் தாய்க்கும் நன்மை உண்டு. ஆறு மாதம் வரையில் குழந்தைக்குத் தேவையான விற்றமின் மற்றும் சத்துகளோடு, குழந்தையின் உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியும் தாய்ப் பாலிலேயே அதிகம் உள்ளன. ஆகவே இப்போது தாய்ப்பால் கொடுப்பதால் தாய்க்கும், சேய்க்கும் எவ்வளவு நல்லது என்று பார்ப்போம்.

**சந்தோஷத்தைக் கொடுக்கும்**

தாய்ப்பால் புகட்டுவது தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட உடல் மாற்றங்களில் இருந்து மீள்வதற்கு உதவுகிறது. அத்தோடு குழந்தை பிறக்கும் போது ஏற்பட்ட வலியை மறந்து, குழந் தையை மகிழ்ச்சியாகக் கொஞ்சவும் வழி செய்கிறது.

**பழைய நிலையை அடைய உதவும்**

கர்ப்பிணிகளுக்கு கர்ப்ப காலத்தில் கருப்பையில் மாற்றம் ஏற்படும். குழந்தைப் பேற்றுக்குப் பின்னர் கருப்பை மீண்டும் அதனது பழைய நிலையை அடையத் தாய்ப்பால் உதவுகிறது.

**இரத்த இழப்பைச் சரிசெய்யும்**

தாய்ப்பால் புகட்டுவது குழந்தைப் பேற்றின் போது ஏற்பட்ட இரத்த இழப்பைச் சரி செய்து, அது தொடர்பான நோய்களில் இருந்தும் பாதுகாக்கிறது.

(தொடரும்)

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 60 | 80 | 60 | 80 | 40 |
| கத்தரி | 50 | 50 | 50 | 50 | 40–60 | 80 | 80 | 25 |
| கரட் | 150 | 180 | 160–250 | 160 | 240–260 | 280 | 220 | 240 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 60 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 140 | 120 | 140 | 120 | 180 | 120 | 140 | 120 |
| பாகல் | 150 | 160 | 160 | 180 | 160 | 160 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120 –160 | 140 | 140 | 180 | 200 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 90 | 100 | 90 | 80 | 80 | 120 | 80 | 60–70 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 50–60 | 40 | 80 | 30–35 |
| கீரை | 10 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 30–35 | 10 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 35 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 120 | 160 | 160 | 180–200 | 200 | 200–220 | 220 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 70 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80–100 | 120 | 80 | 70 |
| வெண்டி | 120 | 100 | 100–140 | 120 | 140 –160 | 120 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 220 | 140 | 180 | 240 | 320 | 240 | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 140 | 160 | 240 | 160 | 140 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 40–50 | 50–60 | 40 | 35–50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 90 | 90 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 140 | 120 | 100 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 130 | 160 | 120–140 | 160 | 200–240 | 200 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | – | 100–120 | 160 | 180 | – |
| முருங்கைக்காய் | 600 | 400 | 600 | 350 | 500–600 | 400 | – | 300 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ். பாசையூர் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 800 | 600 |
| நண்டு | 300 | 450 | 400 | 400 | 300 | 450 |
| கணவாய் | 550 | 600 | 600 | 600 | 600 | 500 |
| பாரை | 550 | 600 | – | 500 | 600 | 370 |
| சுறா | 600 | 600 | – | 650 | 1000 | – |
| சீலா | 300 | 450 | 500 | 400 | 500 | – |
| விளை | 600 | 450 | 400 | 550 | 600 | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 650 | 800 | 400 | 500 | 300 | – |
| ஒரா | 350 | 400 | 300 | 450 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 300 | 200 | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 120 | 200 | 100 |
| ஒட்டி | 250 | 300 | – | 300 | 300 | 250 |
| திருக்கை | 150 | 400 | 100 | 250 | 400 | 140 |
| பாலை | 400 | 300 | 300 | 500 | 400 | – |
| வாளை | 100 | 250 | – | 300 | – | – |
| கொய் | 80 | 250 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 100 | 300 | 280 | 250 | – | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான மச்சப் பலன்கள்



- ✶ ஒரு பெண்ணின் நெற்றியில் குங்குமம் வைத்துக் கொள்கிற இடத்தில் மச்சம் இருந்தால் அவளுக்கு உயர் பதவியிலும் பெரிய அந்தஸ்திலும் உள்ள லட்சாதிபதியான கணவன் அமைவான். அவளுக்கு வாழ்க்கையில் எல்லா வசதி, வாய்ப்புகளும் கிடைக்கும்.
- ✶ நெற்றியின் வலது புறத்தில் சிவந்த மச்சம் இருந்தால், அந்தப் பெண் அதிர்ஷ்டம் நிறைந்தவளாக இருப்பாள். தன்னம்பிக்கை மற்றும் தைரியம்மிக்கவளாக இருப்பாள். எவருக்கும், எதற்கும் அடங்கிப் போகாத குணம் இருக்கும்.
- ✶ நெற்றியின் இடது புறத்தில் சிவந்த மச்சம் இருந்தால் அந்தப் பெண் ஒழுக்கத்தில் சிறந்தவளாக இருப்பாள். அதே மச்சம் கருப்பாக இருந்தால் அந்தப்பெண் அற்பகுணம் உடையவளாக வும், வேண்டாத நபர்களின் சகவாசம் உள்ளவளாகவும் இருப்பாள்.
- ✶ மூக்கின் மீது எங்காவது மச்சம் இருந்தால் அந்தப் பெண் எடுத்த காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் மிகுந்தவளாக இருப்பாள்.
- ✶ மூக்கின் நுனிப்பகுதியில் மச்சம் இருந்தால் அந்தப் பெண்ணுக்கு அமையும் கணவர் மிகப்பெரிய செல்வந்தராக இருப்பார்.
- ✶ மேல் உதடு அல்லது கீழ் உதட்டில் மச்சம் இருந்தால் அவள் அதிர்ஷ்டம் மிகுந்தவளாக, நல்லொழுக்கம் உடையவளாக, வாசனைப் பொருள்களின் மீது பிரியம் உள்ளவளாக, சிறந்த கணவனை அடைந்தவளாக இருப்பாள்.
- ✶ மோவாயில் மச்சம் உள்ளவள் மிக உயர்ந்த எண்ணங்களைப் பெற்றிருப்பாள். பொறுமையும், அமைதியும் அவளுடன் பிறந்ததாக இருக்கும். குணத்திலும், தோற்றத் திலும் அழகான ஆணைக் கணவராக அடைந்திடுவாள்.
- ✶ இடது கன்னத்தில் மச்சம் உள்ளவள் மற்றவர்களை வசீகரிக்கும் ஆற்றல் உள்ளவளாக இருப்பாள். அவள் விரும்பியதைச் செய்து முடிக்கப் பலர் காத்திருப்பார்கள்.
- ✶ வலது கன்னத்தில் மச்சம் உள்ளவள் கஷ்டங்கள் பலவற்றை சந்தித்து முன்னேற்றம் அடையும் திறனைப் பெற்றிருப்பாள். கஷ்டத்தையும் சந்தோஷத்தையும் சமமாக அனுபவிப்பாள்.
- ✶ கழுத்தின் வலப்புறத்தில் மச்சம் உள்ளவள் முதல் பிரசவத்தில் ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாள். பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும் அதிர்ஷ்டத்தைத் தேடித் தருவாள்.
- ✶ தலையில் எங்கு மச்சம் இருந்தாலும் அந்தப் பெண்ணிடம் பேராசையும், பொறாமைக் குணமும் நிறைய இருக்கும். வாழ்க்கையில் சந்தோசமோ, மன நிறைவோ இருக்காது.

**ஆடம்பர வாழ்வு**

- ✶ நெற்றியின் நடுவில் மச்சம் இருந்தால் அவள் அதிகாரப் பதவியில் அமர்வாள். ஆடம்பர வாழ்வு கிடைக்கும். செய்வது எல்லாம் வெற்றியாகும். இரு புருவத்துக்கிடையே மச்சம் இருந்தா லும் மேற்சொன்ன பலனே. நெற்றியில் வலது பக்கம் மச்சம் இருந்தால் வறுமை வாட்டும். ஆனாலும் நேர்மையுடன் வாழ்வாள்.

**கன்னத்தில் மச்சம்**

- ✶ காதுக்கும், கண்ணுக்கும் இடையே உள்ள கன்னப் பகுதியில் இடது பக்கம் மச்சம் இருந்தால் வாழ்க்கை வசதிகரமாக இருக்கும். சந்தோசம் குடிகொண்டிருக்கும். இதுவே வலது பக்கம் என்றால் வறுமை வாட்டும்.
- ✶ இடது தாடையில் மச்சம் இருந்தால் அப்பெண் அழகாக இருப்பாள். ஆண்கள் அவளைத் துரத்தித் துரத்திக் காதலிக்கத் துடிப்பார்கள். நற்குணமுடையவள். வலது தாடையில் மச்சம் என்றால் பிறரால் வெறுக்கப்படுவாள்.
- ✶ கண்களில் மச்சம் இருந்தால் வாழ்க்கை ஏற்றமும், இறக்கமும் நிறைந்ததாக இருக்கும்.
- ✶ மூக்கின் மீது மச்சம் இருந்தால் மிகப் பெரிய அதிர்ஷ்டம். நினைத்ததெல்லாம் நடக்கும். ஆடம்பர வாழ்வு, அந்தஸ்து இருக்கும். சமூக மதிப்புக் கிடைக்கும்.
- ✶ காதுகளில் மச்சம் இருந்தால் கூடிய செலவு செய்வார்கள். என்ன செலவு செய்தாலும் அதற்குத் தக்கபடி பணமும் வரும். சமுதாயத்தில் இவர்களுக்குத் தனி மதிப்பு இருக்கும்.
- ✶ நாக்கில் மச்சம் இருந்தால் அவள் கலைஞானம் கொண்டவளாக இருப்பாள். ரசனை அதிகம் இருக்கும்.
- ✶ கழுத்தில் எங்கு மச்சம் இருந்தாலும் வாழ்க்கையில் 7 முறை அதிர்ஷ்டம் அடிக்கும்.
- ✶ இடதுபக்க தோளில் மச்சம் கொண்டவள் ஏகப்பட்ட சொத்துகளுக்கு அதிபதியாவாள். பரந்த மனப்பான்மையுடன் பிறருக்கு தானதர்மம் செய்யும் குணம் இவளிடம் இருக்கும்.
- ✶ பெண்ணின் இடதுபக்க மார்பகத்தில் வலது பக்கமாக மச்சம் இருந்தால் வாழ்வில் படிப்படியாக முன்னேறுவாள். அதுவே இடதுபுறமாக மச்சம் இருந்தால் உணர்ச்சிகள் அதிகம் இருக்குமாம். வலது பக்க மார்பில் எங்கு மச்சம் இருந்தாலும் வாழ்க்கையில் போராட்டம் இருக்கும்.
- ✶ நெஞ்சின் இடப்பகுதியில் மச்சம் இருந்தால் அவளுக்கு காலாகாலத்தில் திருமணம் நடக்கும். நல்ல கணவன் அமைவான்.
- ✶ தொப்புளுக்கு மேலே, வயிற்றில் மச்சம் காணப்பட்டால் அமைதியும், இன்பமும் கலந்த வாழ்க்கை அமையும். பிறரால் போற்றப்படுபவளாக இருப்பாள்.

**தொப்புளில் மச்சம் இருந்தால் வசதியான வாழ்க்கை**

- ✶ தொப்புளுக்குக் கீழே மச்சம் இருந்தால் வறுமையும், செல்வமும் மாறி மாறி வரும்.

கண்களுக்குத் தெரியாமல் முதுகில் எங்கு மச்சம் இருந்தாலும் துணிச்சலான தன்மை அந்தப் பெண்ணிடத்தில் இருக்கும். வாழ்க்கை வசதிகரமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக அமையும்.

- ✶ உள்ளங்கை, முழங்கை, மணிக்கட்டு ஆகியவற்றில் எங்கு மச்சம் இருந்தாலும் அவளது குடும்பம் இனிமையாக இருக்கும். கலாரசனை உடைய பெண் இவள். சிறந்த நிர்வாகியும்கூட.
- ✶ பிறப்புறுப்பில் மச்சம் இருக்கும் பெண்ணைவிட வேறு ஒரு அதிர்ஷடசாலிப் பெண் இருக்க மாட்டாள். உயர்ந்த பதவிகள் தேடி வரும்.
- ✶ இடதுதொடையில் மச்சம் இருந்தால் படிப்படியாக கஷ்டப்பட்டு வாழ்க்கையில் மிக உன்னத நிலையைஅடைவாள். வலது தொடையில் மச்சம் என்றால் தற்பெருமையும் அடங் காப்பிடாரித்தனமும் இருக்கும்.
- ✶ இடது முழங்காலில் மச்சம் இருக்கும் பெண், புத்திக் கூர்மையானவளாகவும், தன்னம்பிக்கை உடையவளாகவும் இருப்பாள்.

# பெண்கள்

## வாயாடிகளாவது நல்லதே!

பெண்களுக்கு ஒரு விசேட குணம் உண்டு. எவரேனும் சக நண்பியைக் கண்டால் உற்சாகமான உரையாடலைச் சட்டென ஆரம்பித்து விடுகிறார்கள். கடைவீதி, அலுவலகம், ஆலயம் ஏன் சுட்டெரிக்கும் தார் வீதி என்றால் கூட இந்த உரையாடல் தடைப்படுவதில்லை. நலமா எனத் தொடங்கும் உரையாடல் குழந்தைகள், வீடு, வேலை, மாமியார், நண்பர்கள் எனக் கிளை விட்டுப் பரந்து விரிந்து, பொழுது போவதை அறியாமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். பெண்களின் உரையாடல் பெரும்பாலும் வறட்டு உரையாடலாய் இருப்பதில்லை. சிரிப்பும், கேலியும், கிண்டலும், உற்சாகமும் என உலகத்தின் மிக முக்கியமான பணி உரையாடல் என்பது போல அவர்கள் அதில் ஒன்றி விடுவார்கள்.

ஆண்கள் பலருக்கு இந்தக் கலை வாய்ப்பதில்லை. நலமா? என ஆரம்பிக்கும் உரையாடல் நல்லா இருக்கேன் என்ற பதிலைக் கேட்டபின் எப்படித் தொடர்வது எனத் தெரியாமல் நொண்டியடிக்கும். அதனால் எழுகின்ற பொறாமையோ என்னவோ, இந்தப் பெண்களே இப்படித்தான், எவரையாவது பார்த்தால் போதும் மணிக்கணக்காய் பேச ஆரம்பித்து விடுவார்கள் என ஆண்கள் அடிக்கடி அலுத்துக் கொள்கிறார்கள்.



இப்படி மனம் விட்டு உரையாடுவதும், நண்பர்களுடன் பேசி மகிழ்வதும் பெண்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது எனும் புதிய ஆராய்ச்சி முடிவு ஒன்றை ஆய்வாளர்கள் வெளியிட்டு கதை பேசும் பெண்களின் மனதில் இன்னும் கொஞ்சம் இன்பத்துப்பால் வார்த்திருக்கிறார்கள்.

மனித உடலிலுள்ள புரோகெஸ்ட்ரோன் எனும் ஹோர்மோன் மன அழுத்தத்தையும், கவலை, பதட்டம் போன்றவற்றையும் குறைக்கக்கூடிய தன்மை உடையது. மனம் விட்டுப் பேசி சிரித்து உரையாடும் பெண்களின் உடலில் இந்த ஹோர்மோன் அதிக அளவில் இருப்பதாகவும், இதுவே பெண்களின் மன மகிழ்ச்சிக்கு உத்தரவாதம் தருவதாகவும் அவர்கள் மருத்துவ விளக்கமும் அளிக்கின்றனர்.

இத்தகைய உரையாடல்கள் வெறுமனே பொழுது போக்காக மட்டும் அமைந்து விடாமல் பெண்களுடைய நட்பு இறுக்கத்துக்கும், உதவும் மனப்பான்மைக்கும் கூட துணை செய்கிறதாம்.

ஆனால் இப்போதெல்லாம் பெரும்பாலும் தொலைக்காட்சித் தொடர்களில் மாலை நேரம் முழுவதும் செலவிடும் பெண்களுக்கு உரையாடலுக்காய்ச் செலவழிக்கும் நேரம் குறைந்து கொண்டே வருகிறது என்பது கண் கூடு. அத்தகைய சற்றும் பயன் தராத தொலைக்காட்சித் தொடர்களை விலக்கிவிட்டு, ஆரோக்கியமான உரையாடலுக்குப் பெண்கள் திரும்ப இந்த ஆராய்ச்சி முடிவு அழைப்பு விடுக்கிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புறா

புறா முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்ததாகும் உயிரின வகைப்பாட்டில் இது கொலம்பிடே குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தக் குடும்பத்தில் ஏறத்தாழ 300 வகையான இனங்கள் உள்ளன. புறாக்கள் உலகெங்கிலும் உள்ளன என்றாலும், இந்தியா, மலேசியா, இந்தோனேசியா முதலிய தென் கிழக்கு ஆசியப்பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. இது தானிய வகைகளை மட்டும் உணவாக உண்ணும் பயிருண்ணிப் பறவை ஆகும். பறவைகளிலேயே புறா மட்டுமே தண்ணீரைத் தனது அலகால் உறிஞ்சிக் குடிக்கும் பழக்கமுடையது என்றும் சொல்லப்படுவதுண்டு. இது வீட்டிலும் செல்லப் பறவையாக வளர்க்கப்படுகிறது. வீட்டில் வளர்க்கப்படும் புறாக்கள் உருவத்தில் சிறியனவாகவும் சாதுவாகவும் காணப்படும். காட்டுப் புறாக்கள் உருவத்தில் சற்றுப் பெரியவை.

மன்னர்கள் காலத்தில் கடிதப்போக்குவரத்து மற்றும் தூது ஓலை அனுப்புவதற்கு நன்கு பயிற்சி கொடுத்துப் பழக்கப்பட்ட புறாக்களே பயன்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் இப்போதும் புறாக்களுக்கான பந்தயம் நடைபெறுகிறது. பழக்கப்பட்ட புறாக்கள் வெகுதொலைவில் கொண்டு போய் விடப் பட்டு அவை தங்கள் கூட்டுக்குத் திரும்பி வரும் நேரத்தை வைத்து இந்தப் பந்தயங்கள் நடத்தப்படுகின்றன.









# தத்துவஞானியிடம் வேடிக்கை

முல்லாவின் ஊருக்கு ஒரு தத்துவ ஞானி வந்தார். ஒவ்வொரு நாளும் மாலையில் பொதுமக்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் தத்துவஞானி சொற்பொழிவாற்றினார். ஒருநாள் தத்துவஞானி சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த போது கீழ்க்கண்டவாறு ஒரு தத்துவத்தைக் கூறினார். "இறைவன் சிருஷ்டியில் எல்லா உயிர்களுமே சமம் தான். நாம் மற்ற மனிதர்களை மட்டுமன்றி மிருகங்கள் போன்ற உயிரினங்களையும் எமக்குச் சமமாகப் பாவித்து அன்புடன் நடத்த வேண்டும்". அந்தக் கூட்டத்தில் முல்லாவும் இருந்தார். தத்துவ ஞானியிடம் ஒரு வேடிக்கை செய்ய நினைத்தார். உடனே அவர் எழுந்து "தத்துவஞானி அவர்களே, நீங்கள் கூறும் கருத்து அவ்வளவு சரி யல்ல என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். "இதை எந்தக் கண்ணோட்டத்தில் கூறுகிறீர். நீர் உமது வாழ்க்கையில் ஏதாவது சோதனை செய்து பார்த்தீரா?" என்று தத்துவஞானி கேட்டார். சோதனை செய்து பார்த்த அனுபவம் காரணமாகத் தான் இந்தக் கருத்தைக் கூறுகிறேன்' என்றார் முல்லா.

"எத்தகைய சோதனை செய்தீர்? அதை விளக்க மாகக் கூறும்" என்று தத்துவ ஞானி கேட்டார். "நான் என்னுடைய மனைவியையும் எனது வீட்டுக் கழுதையையும் சரி சமமாக நடத்தினேன்" என்றார். "அதன் விளைவு என்ன?" என்று தத்துவ ஞானி கேட்டார். "எனது பரிசோதனையின் விளைவாக ஒரு நல்ல கழுதையும், கெட்ட மனைவியும் கிடைக்கப் பெற்றேன்" என்று சொன்னார். இதைக் கேட்டதும் தத் துவ ஞானி உட்பட அனைவரும் வாய் விட்டுச் சிரித்தனர்.



# விலைமதிப்பில்லாத எமது தன்னம்பிக்கை

ஏழை ஒருவர் ஒரு துறவியைப் பார்த்து, "குருவே! நான் பெரும் ஏழை, என்னிடம் எனது உயிரைத் தவிர வேறு எந்தச் சொத்தும் இல்லை. நான் நல்ல வசதியுடன் வாழ வழி சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்குக் குரு, "நான் 5000 ரூபா தருகிறேன், உனது கைகளை என்னிடம் வெட்டிக் கொடு" என்று சொன்னார். '5000 ரூபாவுக்காக எனது கைகளை இழக்க முடியாது' என்று கூறினான் அந்த ஏழை. "சரி, நான் உனக்கு 15,000 ரூபா தருகிறேன், உனது கால்களைக் கொடு" என்றார்.

அதற்கும் ஏழை ஒப்புக் கொள்ளவில்லை. "வேண்டுமென்றால் 50,000 ரூபா தருகிறேன், உனது கண்களையாவது கொடு" என்று கேட்டார் துறவி. அதற்கும் அவன் முடியாது என்றான். "உனக்கு இருபது இலட்சம் வேண்டுமென்றாலும் தருகிறேன், உனது உயிரைக் கொடு" என்றார் துறவி. அதற்கு அந்த ஏழை, "என்னால் நிச்சயம் நீங்கள் சொல்வதைச் செய்ய முடியாது" என்று கூறினான். அதைக் கேட்ட அந்தக் குரு அவனிடம், "உன்னிடம் உனது உயிரைத் தவிர வேறு எந்தச் சொத்தும் இல்லை, மேலும் எவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்தாலும், கொடுக்க விரும்பாத, விலை மதிப்பற்ற, உயிரைக் கொண்டுள்ள நீ, எவ் வாறு ஏழை ஆக முடியும். தன் னம்பிக்கையுடன் உழைத்து வாழ்க்கையில் முன்னேறு" என்று கூறினார்.



விலைமதிப்பில்லாத எமது தன்னம்பிக்கை ஒன்றே போதும், வாழ்வை வெற்றி கொள்ள.

# பொது அறிவுத்தகவல்கள்

- ☆பாம்பு, நாக்கினால் வாசனையை நுகரும் திறன் கொண்டது.
- ☆கார்கள் அதிகமுள்ள நகரம், நியூயோர்க்.
- ☆நாய்க்கு வியர்ப்பது கிடையாது.
- ☆பறவைத்தீவு என அழைக்கப்படுவது, நியூசிலாந்து.
- ☆நாகலாந்தில் ஒரே ஒரு ரயில் நிலையம் தான் உள்ளது.
- ☆வீட்டுக்கு ஒரு பியானோ உள்ள நாடு, இங்கிலாந்து.
- ☆பழங்களின் அரசன் எனப்படுவது, மாம்பழம்.
- ☆எலும்புக்கூடு இல்லாத உயிரினம், ஜெல்லி மீன்.
- ☆தென்னிந்தியாவின் உயரமான மலைச்சிகரம், தொட்டபெட்டா.
- ☆முன்னங்கால்களில் காதுகளைக் கொண்ட உயிரினம், வெட்டுக்கிளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவை கைது செய்யாது விட்டமை மிகப்பெரிய தவறு

## சொல்கிறார் அஸாத் ஸாலி

கொழும்பு, ஜூன் 27

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைதுசெய்யாமல் விட்டதே நல்லாட்சிக்கான அரசு செய்த பெரிய தவறு என்று மத்திய மாகாண சபை உறுப் பினர் அஸாத் ஸாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதி பதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பொது வேட்பாளராக போட்டியிட்டிருந்தார். இந்தத் தேர்த லில் அவர் தோல்வியடைந்திருந்தால் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே அவரை தனது கைகளால் கொலை செய் திருப்பார். இது ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கும் தெரியும்.

எனினும், இவ்வாறான கொலை முயற்சிகளில் ஈடுபட திட்டமிட்டிருந்த கோத்தபாய ராஜபக்ஷ தற்போது சுதந்திரமான முறையில் நாட்டில் உலா வருகின்றார்.

இவ்வாறு சுற்றிவரும் அவர், தற்போது நாட்டின் இறையாண்மையும், பாது காப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கின்றார். இதன் மூலம் இவர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் நல்லாட்சியைக் குறை கூற விழைகின்றார். கோத்த பாய ராஜபக்ஷவை கைதுசெய்யா மல் விட்டதே நல்லாட்சிக்கான அரசு செய்த பெரிய தவறாகும்–எனத் தெரி வித்தார்.

(த)

# கந்தளாய் சீனி ஆலை இந்திய நிறுவனத்துக்கு

கொழும்பு, ஜூன் 27

கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அதனை இந்திய நிறுவனயொன்றுக்குக் கைய ளிப்பதற்குக் காணி அமைச்சு தீர்மா னித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வ தற்கான பிரேரணையொன்றை காணி அமைச்சர் எம். கே.டி.எஸ். குணவர்த்தன அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளதாக காணி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்தத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முதலீட்டையும் சகல இயந்திர உபகரணங்களையும் இந்திய நிறுவனம் தனது சொந்தச் செலவிலேயே வழங்கவேண்டுமென வும், இலங்கை அரசு இத்தொழிற் சாலைக்கு எவ்வித முதலீடுகளையும் மேற்கொள்ளாது என வரையறுக்கும் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வுள்ளதாகவும் அந்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்படும்போது இந்திய நிறு வனம் பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான வங்கி உத்தரவாத மொன்றை காணி அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட் டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கணிதம் / விஞ்ஞானம் O/L**

6ஆம் வகுப்பில் இருந்து G.C.E O/L வரை தமிழ்/ ஆங்கில மொழிகளில் ஆங்கில மொழி மூல விஞ் ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர்.

R.Balasubramaniyam B.Sc
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
பெற்றோர் மாட்டும்.
தொடர்பு : 077 242 3400, 077 887 1217, 077 517 8727

**வடமாகாண விளையாட்டுக்கழக அணிகளுக் கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி**

கிளிநொச்சி குமுழமுனை சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உயிர்நீத்தவர்களின் 06 ஆம் ஆண்டு நினைவாக எதிர்வரும் யூலை மாதம் (7) 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் வடமாகாண விளையாட்டுக்கழக அணி களுக்கிடையிலான மாபெரும் கரப்பந் தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்த இருக்கின்றோம்.

விளையாட்டுக்கள் :-
*கரப்பந்தாட்டம் :- ஓவர் 5 பேர் கொண்டது.
*கரப்பந்தாட்டம் :- செற்றப் 6 பேர் கொண்டது.
இடம் : கிளிநொச்சி சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானம்
பரிசில்கள் :- முதலாம் பரிசு - 20,000 ரூபா, வெற்றிக்கேடயம்.
2ஆம் பரிசு - 10,000 ரூபா
3ஆம் பரிசு - 5,000 ரூபா
விண்ணப்ப முடிவு திகதி 30.06.2015
தொடர்புகளுக்கு :-
சொலிசன் :- 077 966 6635 , அமலதாஸ் :- 077 847 8446
வின்சன் :- 077 003 3742, ஜெகதாஸ் :- 077 163 6185
செயலாளர் ந.குமின்ரஸ். (c 16224)

**மணமகன் தேவை**

கணவரை இழந்த 32 வயதுடைய அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை.ஒரு ஆண்குழந்தை உண்டு. 2 இல் செவ்வாய் உண்டு ,உயரம் 5'2" வெளி நாடு விரும்பத்தக்கது.
தொடர்பு.077 974 2299

**காணி விற்பனைக்கு**

85/15 ஆனந்தன் வடலி வீதி, வட்டாரம் 8 யாழ்ப்பாணத்தில் உள்ள 5 பரப்பு 4 குளியும் கொண்ட காணி(வீடுகட்ட,தோட்டம் செய்ய உகந்தது). விற்பனைக்கு உண்டு.
தொடர்பு.077 570 7137 ,077 439 1773

**PILLAIYAR INN & JAFFNA RESTAURANT**



இந்திய சமையற்கலை வல்லுநரின் கைவண்ணங்களில் பூரி, சப்பாத்தி, பறோட்டா, மசாலாதோசை மற்றும் மரக்கறி குருமா போன்ற உணவுகள் உயர்தரத்திலும் மலிவான விலையிலும் வழங்கப்படும். அத்துடன் நீரிழிவு நோயாளர்களின் நலன் கருதி அவர்களுக்கேற்ற உணவு வகைகள் விசேடமாக தயாரித்து வழங்கப்படும்.

தொடர்பு: 31, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
021 222 2829.




**HND in Business Management**

MBA
Degree - Final Year
B.A (Hons) in Business Administration
HND in Business Management
OL's / AL's / DiBM

- Fastest Way for Successful Employment
- With CBF can follow MBA Directly
- Flexible Payment Plans (No Hidden Cost)
- Flexible Class Schedule for Workers
- Global Recognition

Duration : 18-20 Months
Total Cost : Rs. 260,000
(Including Edexcel Registration Fee)
Installment Scheme Available

28th June @ 10.00 am
Open and FREE Invitation
- 2 Passes in A/L's grab a SUMSUNG Galaxy TAB 4 or 25% Discount
- A/L's + CBF eligible for 100,000 Discount

ESOFT
Shaping Lives, Creating Futures
ESOFT METRO CAMPUS
Colombo - No. 182, Galle Road, Colombo 4, Sri Lanka. Call : 077-309 9 301
Jaffna - No. 137,K.K.S Road, Jaffna, Sri Lanka. Call : 077-309 9 308
Email : jaffna@esoft.lk
Hotline : 077 309 9 308
www.esoft.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்தச் சட்டம் எமக்குப் பாதிப்பில்லை

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி

யாழ்ப்பாணம், ஜூன் 27
20 ஆவது திருத்தச் சட்டத்தின் தற்போதைய வடிவத்தினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஆனாலும், ஏனைய சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை அடிப்படையில் அதனை எதிர்க்கின்றது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் வைத்து, ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போதுள்ள தேர்தல் முறைமையை விட, அதிகளவானஜனநாயகத்தன்மை கொண்டதான தேர்தல் முறைமையாக இருந்தால் நிச்சயம் அதனை ஆதரிக்கலாம்.
மேலும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்தினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஏனெனில் அறிமுகப்படுத்தப்படும் தேர்தல் முறைமையினால் பிரதான கட்சிகளுக்குப் பாதிப்பில்லை. வடக்கு – கிழக்கில் பிரதான கட்சியாக இருக்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அதன் காரணமாகப் பாதிப்பு எதுவும் இல்லை.
ஆனால் சிறிய மற்றும் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளுக்கு பாதிப்பு உள்ளது. சிறுபான்மையினத்தவர் பரவி வாழும் பிரதேசங்களில் இதனால் ஆபத்து உள்ளது. மேலும், ஒவ்வொரு பிரதேசத்திலும் மூன்றாம், நான்காம் நிலைகளிலுள்ள கட்சிகளுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு கொள்கை ரீதியில் சிறுபான்மை இனத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்ற வகையில், நாம் இந்த திருத்தச் சட்டத்தினை எதிர்த்துள்ளோம்.
மேலும், இலங்கையின் சனத் தொகையில் வாக்காளர்களாக உள்ள 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்களுக்கு, நாடாளுமன்றத்தில் 6 சதவீதம்தான் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இது மாற்றப்பட வேண்டும். பெண்களுக்கு அதிகரித்த பிரதிநிதித்துவம் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (த-5-101-106)

## தொண்டர் ஆசிரியர்கள் ஒன்று கூடல்

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் அவசரக் கலந்துரையாடலுக்காக ஒன்றுகூடுமாறு ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (த)

## மாவை. அரசடி மாரியம்மன் அலங்கார உற்சவம்

மாவிட்டபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவுபெறவுள்ளது.
கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவரும் இவ் உற்சவத்தின் 12 ஆம் நாளான நாளையும் வழமைபோல் மாலை 6 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும், இரவு 7 மணிக்கு விசேட பூசையும் நடைபெறவுள்ளன.

## சோமவன்ஸவின் புதிய கட்சி மாநாடு இன்று

ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற அதன் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் புதிய கட்சியின் மாநாடு இன்று சனிக் கிழமை இடம்பெறவுள்ளது.
கொழும்பு புதிய நகர மண் டபத்தில் காலை 10 மணிக்கு மாநாடு இடம் பெறும் எனத் தெரிய வருகின்றது.
கட்சி அங்குரார்ப்பணம் மற்றும் நிர்வாகக் குழு தெரிவு இதன்போது இடம்பெறவுள்ளது. சமத்துவம் மற்றும் ஜனநாயகத்திற்காக அணி திரள்வோம்' என்ற தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் சிவில் அமைப்புகள் பல பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதன் அரசியல் செயற்பாடுகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மாதாந்த இசையரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27
வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் மாதாந்த கலை நிகழ்வில், இர்[illegible] முறை இசைப்பேரரசு எம்.எ[illegible] தண்டபாணி தேசிகரின் 107ஆவது ஜனன தினச் சிறப்பு நிகழ்வாக அவரது மாணாக்கர்களில் மூத்த கலைஞராக விளங்கும், சங்கீத பூஷணம் எஸ்.கணபதிப்பிள்ளையின் இசையரங்கு, சபையின் மருத னார் மடம் தற்பரானந்தன் அரங்குக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு நடை பெறும்.
வழமையாக நடைபெறும் ஏனைய நிகழ்வுகளோடு, மூத்த இசைக்கலைஞரான திருமதி தர்மபூபதி சிதம்பரநாதனின் சிறப்புரையும் இடம் பெறும். (த)

## ராணுவப் புலனாய்வாளர்கள் 24 மணி நேரமும் செயற்பாடு

இருபத்தி நான்கு மணி நேரமும் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டுக் கொண்டேயிருக்கின்றனர். அவர்கள் திரட்டும் தகவல்கள் விரிவாக ஆராயப்பட்டு பகுப்பாய்வு செய்யபடுகின்றது. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக, வாரத்தில் ஏழு நாள்களும், 24 மணி நேரமும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து கிடைக்கும் தகவல்கள், விரிவாக ஆராயப்பட்டுப் பகுப் பாய்வு செய்யப்படுகின்றது.
ஒவ்வொரு வாரமும், பாதுகாப்புச் சபைக் கூட்டத்தைக் கூட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடுகிறார். இதனைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. நாட்டில் பாதுகாப்பைக் குறைத்துக் கொள்ளும்படியான எந்த உத்தரவையும் நாம் பெறவில்லை. விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்பாக இராணுவம் கவனித்துக் கொண்டிருக்கிறது, என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)


### விற்பனைக்கு

டோமன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
3 தடுப்பூசி போடப்பட்டது.
தொடர்பு: 077 3145354

### தொழிலாளர் தேவை

சங்கென் நிறுவனத்தின் கல் அரியும் ஆலைக்கு தகுந்த தொழிலாளர் தேவை. ( நிரந்தரம்/ தற்காலிகம்) நேர்முகத் தேர்வு 29.06.2015 - 10.00 AM தொடக்கம் 12.00 NOON.
தொடர்பு : 21/1 கண்டி வீதி, நாவற்குழி.
021 320 2868
077 248 7772

### வாழ்த்தி வரவேற்கின்றோம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்)
கிளிநொச்சி மாவட்ட பணியகம்



ராஜன் கட்டடம்,
ஏ-9 வீதி,
கரடிப்போக்குச் சந்தி
(கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)
இன்று (27.06.2015)
பி.ப 3 மணிக்கு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் மாவட்ட பணியகம் திறந்து வைப்பதையிட்டு பெரும் மகிழ்வடைவதோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் எம் மண்ணில் இனிதே நடைபெற வாழ்த்தி வரவேற்கின்றோம்.

கிளிநொச்சி வாழ் மக்கள்


## மனித உரிமை

பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபை யின் அறிக்கை வெளிவரும் என் பது எனது திடமான நம்பிக்கை.
அதற்கு முன்னர் இலங்கையில், பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் சொல்லியிருந்தாலும் கூட இதுவரை நாடாளுமன்றம் கலைக்கப்படாத காரணத்தால் செப்ரெம்பர் மாதத்துக்குள் பொதுத் தேர்தல் நடக்குமா என்பது சந்தேகத்துக்குரிய விடயம் என்றும் அவர் கூறினார். (த-5-101-106)

## புலிகளின்

றத்தில்மிருசுவில் படுகொலைகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பை அறிவிக்க முன்னர், குற்றம் நிரூபிக்கப்பட்ட சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவிடம் ஏதேனும் கூற விரும்புகிறீரா என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.
இதற்கு அவர், நான் சாவுத் தண்டனை விதிக்கும் அளவுக்கு குற்றம் செய்யவில்லை. அத்துடன், நான் இராணுவத்தில் சேவையாற்றினேன். மற்றப் படையினர் முன் செல்லப் பயந்திருந்தபோது விடுதலைப் புலிகளின் முகாம்களுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினேன். நான் சிறப்பாக போரிட்டவன். என் மீதான அனைத்துக் குற்றச்சாட் டுக்களையும் நிராகரிக்கிறேன் என்று கூறியுள்ளார்.
இதனையடுத்து, நீதிபதிகள், சுனில் ரத்நாயக்கவுக்கு சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தனர். (த)

## மிருசுவில்

குடும்ப உறவினர்கள் மகிழ்ச்சி வெளியிட்டிருந்தனர்.
ஆனால், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் தென்பகுதியில் 'ஹீரோவாக' சித்தரிக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி, முகநூல் பக்கம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அந்தப் பக்கம் திறக்கப்பட்டு 24 மணி நேரத்தினுள்ளேயே 11 ஆயிரம் பேர் இணைந்துள்ளனர்.
மேலும் குறித்த இராணுவச் சிப்பாய் தொடர்பில் அந்த முகநூலில், 'எதிரிகளைக் கொலை செய்ததன் மூலம், தேசத்தையும் இனத்தையும் காப்பாற்றியுள்ளான்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இராணுவச் சிப்பாய்க்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை தொடர்பில், சிங்கள அடிப்படைவாதிகளிடமிருந்து தொடர்ந்தும் எதிரான கருத்துக்கள் முகநூலில் பரப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மஹிந்தவைச்

87 பேர் வரை யில் கலந்து கொண்டனர். இந்த விருந்துபசாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பங்கேற்றார்.
இரவு 9 மணியளவில், முன்னாள் ஜனாதிபதி விருந்துபசாரத்திலிருந்து திடீரென வெளியேறிச் சென்று ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் மீண்டும் வந்து கலந்து கொண்டார்.
இதன்போது, சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே சென்று வந்துள்ளீர்கள் என்று, முன்னாள் ஜனாதிபதியிடம் கேட்டனர். சபாநாயகரின் இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து விட்டு வருகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை வலுப்பெறச் செய்வதற்கு உதவி செய்யுங்கள் என்று அப்போது மைத்திரி தன்னிடம் கோரிக்கை விடுத்தார் எனவும், அதற்கு தான் உடன்பட மறுத்து விட்டார் எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
வெகு தாமதித்தே தாங்கள் கோரிக்கை விடுக்கிறீர்கள், என்னை எல்லோரும் அழைக்கின்றனர், களமிறங்கித்தான் ஆக வேண்டும் எனத் தான் மைத்திரியிடம் தெளிவாகத் தெரிவித்து விட்டார் எனவும், சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மஹிந்த தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகங்களில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இது பச்சைப் பொய் என்ற ரீதியில் சுருக்கமான அறிக்கை ஒன்றை ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்தது. அவ்வாறு ஓர் சம்பவம் இடம்பெறவில்லை என்று தெரிவித்துள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி அலுவலகம் வட்டுக்கோட்டையில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வட்டுக்கோட்டை அத்தியடிப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த அலுவலகத்தில் இளைஞர், யுவதிகளுக்கான (கணினி, தையல்) தொழிற்றிறன் விருத்தி இலவசப் பயிற்சி நெறியும் ஆரம்பித்து வைக் கப்படவுள்ளது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-29-422)

## ஆஸி. செல்ல முயன்ற 78 பேர் நேற்றுக் கைது

கொழும்பு, ஜூன் 27

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த 78 பேர் அம்பாந்தோட்டை – கிரிந்த கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 59 பேர் தமிழர்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் இந்திக்க சில்வா தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 59 தமிழர்களும், 17 சிங்களவர்களும், படகைச் செலுத்திய இருவருமாக 78 பேர் உள்ளனர். எனினும், இவர்கள் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

கைதுசெய்யப்பட்ட இவர்களைக் கடற்படையினர் காலியிலுள்ள துறைமுகத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்து இந்த வருடத்தில் கைதுசெய்யப்பட்ட முதலாவது குழுவினர் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வருடத்திலும் இவ்வாறு பலர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

## புகைத்தல் அடிமைகளை மீட்பதற்குத் தொலைபேசி

கொழும்பு, ஜூன் 27

புகைத்தலுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீள்வதற்கான ஆலோசனைகளை வழங்கும் விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 1948 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக ஆலோசனை சேவைகள் வழங்கப் படவுள்ளதாக புகையிலை மற்றும் மதுபானத்தை ஒழிப்பதற்கான தேசிய அதிகாரசபையின் தலை வர் டாக்டர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார்.

வார நாள்களில் அலுவலக நேரங்களில் இந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இந்த தொலைபேசி சேவையை நீண்டநேரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பயிற்சி பெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர்களின்ஊடாக இந்த ஆலோசனைகள் வழங்கப்படுவதாக புகையிலை மற்றும் மதுபா னத்தை ஒழிப்பதற்கான தேசிய அதிகாரசபையின் தலைவர் தெரிவித்திருந்தார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் விநாயகமூர்த்தி

**மலர்வு: 1933.02.19 உதிர்வு: 2015.06.22**

ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விநாயகமூர்த்தி அவர்கள் (22.06.2015) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை)யின் அன்புக் கணவரும், சிதம்பரநாதன், முருகையா, காலஞ்சென்ற கனேசபிள்ளை நடேசன், புவனேஸ்வரி, சிவபாக்கியம், செல்வரத்தினம், குணரத்தினம், பரமானந்தம், ராணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற (திருப்பதிஜிவகாந்தி) சிறியானந்தம், விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27.06.2015 சனிக்கிழமை இன்று அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் காடகடம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மைத்துனர் (சின்னாம்பி) – K.விவேகானந்தன் – 077 9834384**
**பெறாமகன் – G.ஜீவரூபன்**

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் சிவராசா (சின்ராசா)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவராசா (சின்ராசா) 25.06.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரமலரின் (டென்மார்க்) பாசமிகு கணவரும், கார்த்திகா (இலண்டன்), சபிக்கா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரூபனின் (இலண்டன்) பாசமிகு மாமனும், கேனுஷா, சகித் ஆகியோரின் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (29.06.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (டென்மார்க்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர், டென்மார்க்.
T.P: 004522633365

(61328)(10.6.1)

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை



அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை நேற்று (26.06.2015) வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகநாதர்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும்.மகேஸ்வரி, இராசம்மா, இளையபிள்ளை, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரத்தினம், கந்தசுவாமி, சதாசிவம், இராஜேஸ்வரி திருமதி சோதிப்பிள்ளை சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், கிருபானந்தா (சுவிஸ்), சந்திரவதனா (ஜேர்மனி), கிருஸ்ணரஞ்சினி (ஜேர்மனி), கிருஸ்ணவேணி (ஆசிரி யர், இராமநாதன் கல்லூரி-மருதனார் மடம்), கிரிதரன் (ஜேர்மனி), கிருஸ்ணகுமாரி (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயமாலினி, புவேந்திரநாதன், திருநாவுக்கரசு, வள்ளுவதாசன் (காசாளர்-யாழ். பல்கலைக்கழகம்), வினோபா, செந்தில்குமரன் ஆகியோரின் மாமனும், கிரீசன், பிரியங்கன், ஹம்சானந்தி, ஆனந்தபைரவி, சகா னந்தி, கபிலன், திஷாந், வாகீசன், சுபத்திரன், அச்சயன் கீர்திகன், ஆதீ சன், சுரபி, மேகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
கி.கிருபானந்தா (மகன்)
கி.கிரிதரன் (மகன்)
சி.வள்ளுவதாசன் (மருமகன்)

(61340)(10.6.1)

## வீரசிங்கம் குணபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற தபால் தரம்பிரிப்பாளர்-யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வைமன் வீதியை பிறப்பிடமாகவும் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் குணபாலசிங்கம் நேற்று (26.06.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் கமலாதேவி (கிளி) அவர்களின் கணவரும் அகிலா (பிரான்ஸ்), யசோதரா (அலுவலக உத்தியோகத்தர்-மேக்கன்ரைல் பாதுகாப்பு சேவை தனியார் நிறுவனம்), பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகதாசனின் (பிரான்ஸ்) மாமனாரும் அக்ஷயாவின் (பிரான்ஸ்)அருமைத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம், ராஜசிங்கம், விஜயசிங்கம், தனபாலசிங்கம், வினோதினி மற்றும் காராளசிங்கம், நவரட்ணசிங்கம், ஜெயபாலசிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பூங்கோதை, பத்மநாதன் மற்றும் பாலசிங்கம், கனகலிங்கம், இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில்அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

735A, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :-
மனைவி, பிள்ளைகள்.

(61341)

## திருமதி சின்னத்தங்கம் ஆறுமுகம்



யாழ்.நயினாதீவைப்பிறப்பிடமாகவும் சுவிஸ் Ben ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் ஆறுமுகம் 25.06.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர்- கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகாத்தை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் ஆருயிர் மனைவியும் விசுவலிங்கம் (இலங்கை), செல்லத்துரை (ஜேர்மனி), காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் முத்து லெட்சுமி (சுவிஸ்), காலஞ் சென்ற சரஸ்வதி மற்றும் கோபாலன் (சுவிஸ்), சிவசிதம்பரம் (கனடா), சண்முகநாதன் (சுவிஸ்), கமலேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சர்வலோக சிந்தாமணி (இலங்கை), காலஞ்சென்ற தனலெட் சுமி மற்றும் சிதம்பரம் (கனடா), பரமலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் சரசலட்சுமி (சுவிஸ்), வசந்தாதேவி (கனடா), ரஜனி (சுவிஸ்), ரத்தினசிங்கம் (கனடா), மகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் வேலாயுதம் (மலேசியா) காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற வர்களான மருதப்பு, தில்லையம்பலம், வள்ளி யம்மை, பாலசிங்கம், சின்னம்மா, நாகமுத்து ஆகியோ ரின்அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2015 திங்கட்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

237, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
ஆ.விசுவலிங்கம்
மகன்.

(61327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைக்கு

டங்களிலும் இந்த விழிப்பூட்டும் பணிகள் சிறப்பாக முன்னெடுக் கப்பட்டன. சகல வலயங்களாலும் இந்த விழிப்பூட்டல் நிகழ்வு ஒருங்கமைக்கப்பட்டிருந்தது.

வடமராட்சியில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமான எதிர்ப்பு பேரணி வதிரி சந்தியை அடைந்தது. அதனுடன்; நெல்லியடி மத்திய கல்லூரி, தேவரையாளி இந்துக்கல்லூரி மற்றும் கொற்றாவத்தை தமிழ்க்கலவன் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் இணைந்து கொண்டன. அது நெல்லியடி சந்தி சென்று அதனுடன் ஞானசாரியார் கல்லூரி, வதிரி திரு இருதயகல்லூரி மற்றும் கரவெட்டி பிரதேச செயலக விழிப்புணர்வு பேரணியும் இணைந்து கொண்டன. தெரு நாடகங்களும் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பருத்தித்துறை நகரப் பகுதியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி என பல பாடசாலைகள் இணைந்து முன்னெடுத்தன. பிறிதொரு பேரணி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வெட்டி இ.த.க. பாடசாலை, இமையாணன் அ.த.க. பாடசாலை என்பன முன்னெடுத்தன. தெருக் கூத்துகளை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மற்றும் இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் நடத்தின. பேரணிகள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை அடைந்து அங்கு விழிப்புணர்வு கூட்டம் இடம்பெற்றது. வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச சபை, பிரதேச செயலகங்களினாலும் இந்த எதிர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியினர் வல்வெட்டித்துறை சந்தியில் பேரணியை ஆரம்பித்து வல்வெட்டித்துறை மைதானத்தில் நிறைவு செய்தனர். அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியினர் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு தமது பாடசாலையிலிருந்து அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையம் வரை சென்று தமது பேரணிகளை நடத்தினர்.

தென்மராட்சி வலயத்தில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நாவற்குழி, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் இடம்பெற்றன. சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து புறப்பட்ட பேரணியில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலிருந்து புறப்பட்ட மாணவர் பேரணியில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், கொடிகாமம் பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர்களும், நாவற்குழி மகா வித்தியாலயத்திலிருந்து புறப்பட்ட மாணவர் பேரணியில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் ஆவரங்கால் சிவன் கோயிலில் இருந்து ஆரம்பமான சுலோக அட்டைகள் தாங்கிய அமைதி ஊர்வலம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் காட்சிப்படுத்தலுடன் முடிவடைந்தது. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பமான அமைதி ஊர்வலம் நீர்வேலி சந்தியில் காட்சிப் படுத்தலுடன் நிறைவு பெற்றது. உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆரம்பமான அமைதி ஊர்வலம் உரும்பிராய் சந்தியில் காட்சிப்படுத்தலுடன் நிறைவுபெற்றது. கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஆரம்பமான அமைதிப் பேரணியை கோப்பாய் சந்தியில் காட்சிப்படுத்தலுடன் நிறைவு பெற்றது. பாடசாலைச் சீருடையோடு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அமைதிப் பேரணியில் வெளியார் கலந்து கொள்ளவில்லை.

வலிகாமம் கல்வி வலயத்தில் மாணவர்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் ஒன்று கூடி மருதனார்மடம் உரும்பிராய் வீதிவழியாக விழிப்பூட்டும் பேரணி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியைச் சென்றடைந்தது. இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். யாழ்.கல்வி வலய நல்லூர் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களினால் தெருவழி நாடகம் ஒன்று மக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்பூட்டும் வகையில் நடிக்கப்பட்டது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்பு நடைபவனி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி மது, போதை வஸ்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு ஒட்டுசுட்டான் பிரதான சந்திவரை சென்றடைந்தது.

முல்லைத்தீவு மகா வித்தியாலயம் , கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை, முல்லைத்தீவு றோ.க, சிலாவத்தை த.வி, வெட்டுவாய்க்கால் அ.த.க. பாடசாலை மாணவர்கள் இணைந்து முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் பேரணியை நடத்தினர்.

**கிளிநொச்சி**

பளை கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி பளை பேருந்து நிலையம் வரை பேரணி இடம்பெற்றது. போதையை ஒழிப்போம் என்ற கோஷங்கள் எழுப்பபட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர்; தலைமையில் இடம்பெற்ற போதை பொருளுக்கு எதிரான கலந்துரையாடலில் கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள். அதிபர் ஆசிரியர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

**வவுனியா**

வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்தினால் நேற்றுக் காலை மேற்கொள்ளபட்ட இரண்டு மாபெரும் பேரணிகளின் முதலாவது பேரணியானது கண்டிவீதியுடாக வவுனியா தெற்கு வலயக்கல்வி வலயம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில் வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை, வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், பூந்தோட்டம் மகாவித்தியாலயம், இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம், இந்து கல்லூரி, வெளிக்குளம் பாடசாலை, சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் கலந்து கொண்டு பேரணிகளை முன்னெடுத்தனர்.

வவுனியா பரக்கும்ப மகாவித்தியாலய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பேரணி ஈரப்பெரியகுளம் பெற்றோல் நிரப்பு நிலையத்திலிருந்து பரக்கும்ப மகாவித்தியாலயம் வரை இடம்பெற்றது. நெளுக்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் கணேசபுரம் மகாவித்தியாலய மாணவர்கள், கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்கள், விபுலானந்தாக்கல்லூரி மாணவர்கள்,பூவரசங்குளம்பாடசாலைமாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

**மன்னார்**

மன்னார் நகர் மற்றும் பேசாலை ஆகிய இரு இடங்களில் விழிர்ப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது. மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்கு முன் ஒன்று கூடிய 5 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு மன்னார் வைத்தியசாலை வீதியூடாக சென்று மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்து அங்கிருந்து மீண்டும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை நோக்கிப் பேரணி நகர்ந்தது.(த-4,2,1,9,1,1,86,56,109,402,422,500)

## ஆயுதக்

இன்னமும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கையின் மனித உரிமை நிலைமை மோசமானதாகவே உள்ளதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள, நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான 2014 ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டனில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியால் நேற்றுமுன்தினம் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோர் இலங்கை அரசுடன் இணைந்தவர்களால் தாக்கப்படும் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. காணாமற்போகச் செய்யப்படுதல், கண்டபடி கைது செய்யப்படுதல், தடுத்து வைத்தல், சித்திரவதை, தடுப்புக்காவலில் உள்ளோர் துஷ்பிரயோகம் செய்யப்படுதல், வன்புணர்வு ஏனைய வடிவங்களிலான பாலியல் மற்றும் பாலின ரீதியான வன்முறைகள் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போருக்குப் பிந்திய நிலையிலும், ஆள்கள் காணாமற்போகச் செய்யப்படுதலும், நீதிக்குப் புறம்பான படுகொலைகளும் இடம்பெற்றுள்ளன. ஊடக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசை விமர்சிப்போர், அரச ஆதரவாளர்களால் துன்புறுத்தப்படுவது, அச்சுறுத்தப்படுவது, தாக்கப்படுவது போன்ற சம்பவங்களால், பரவலான அச்சம் காரணமாக ஊடகவியலாளர்கள் சுய தணிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை எற்பட்டது.

குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாததால் பொதுவான ஜனநாயகச் செயற்பாடுகள் முடக்கமடைந்தன. இலங்கை அரசு, மக்களின் தனிப்பட்ட உரிமைகளை மீறியுள்ளது. பேச்சு, ஊடக, அமைதியாக ஒன்று கூடும், நடமாடும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது.

பெரும்பாலும் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் மக்கள் சென்று வரக் கூடிய நிலை இருந்தாலும், வடக்கில் இராணுவ, சோதனைச் சாவடிக் கெடுபிடிகள் தொடர்ந்தன. உயர்பாதுகாப்புவலயங்கள்தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தன.

இடம் பெயர்ந்தோர் உரிமைகள் மற்றொரு முக்கியமான பிரச்சினையாகும். இடம்பெயர்ந்தவர்கள் தாம் எங்கு மீளக்குடியமர்வது என்பதை சுதந்திரமாகத் தீர்மானிக்க முடியவில்லை. அரசின் வெளிப்படைத் தன்மையில்லா நிலையும், மோசமான ஊழல்களும் தொடர்ந்தன.

அரச அதிகாரிகள் மற்றும் அரசுடன் இணைந்திருந்தவர்கள் உயர்ந்த பட்ச தண்டனை விலக்குரிமையைப் பெற்றிருந்தனர். மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மிக குறைந்தளவு அரச மற்றும் இராணுவ அதிகாரிகள் மீதே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2009 இல் முடிவுக்கு வந்த போரில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமானச் சட்ட மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்களில் ஈடுபட்ட ஒருவரேனும் இன்னமும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. அரச ஆதரவு துணை ஆயுதக்குழுக்கள் என்று சந்தேகிக்கப்படுவோரால், பொதுமக்கள் மீதான கொலைகள், கடத்தல்கள், தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.துணை ஆயுதக் குழுக்களுக்கும் அரச ஆயுதப்படைகளுக்கும் இடையில் அடிப்படை உறவுகள் இருப்பதாக அறிக்கைகள் தொடர்ந்து கிடைக்கின்றன.

மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களில் பொதுபல சேனா அமைப்பு ஈடுபட்டுள்ளது. பொதுபல சேனாவின் வன்முறைகளால் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டதாக,அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## அதிகாலையில்

நாடாளுமன்றத்தின் அமர்வு செப்ரெம்பர் 2 ஆம் திகதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் எப்போது கலைக்கப்படும் என்பது தொடர்பிலான பரபரப்பு கடந்த சில நாள்களாக நிலவி வந்த நிலையில், இன்று அதிகாலை ஜனாதிபதியினால் 7 ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல், அரச அச்சகத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கடந்த இரண்டு தினங்களாக நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்று வந்த நிலையில், 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படாத நிலையிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையில் ஆட்சி நடைபெற்று வந்தது. ஜனாதிபதித் தேர்தலின்போது, 100 நாள்களில் அதாவது ஏப்ரல் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

இருப்பினும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாக நாடாளுமன்றக் கலைப்பு பிற்போடப்பட்டுக் கொண்டு சென்றது. 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான ஒத்திவைப்பு பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் கடந்த இரண்டு தினங்களாக விவாதம் இடம்பெற்று வந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மைத்திரிபால நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது, பிரதமர் ரணில், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, நாடாளுமன்றம் திடீரென இன்று அதிகாலை கலைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை, ஜனாதிபதி மைத்திரி நேற்று மதியம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன் பின்னர், தேர்தல்கள் திணைக்களத்தை நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகுமாறு தேர்தல்கள் ஆணையாளர் பணித்துள்ளார். அத்துடன் இன்று காலை விசேட ஊடகவியலாளர் சந்திப்புக்கும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று இரவு, ஜனாதிபதி மைத்திரிபால நாடாளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானிப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அது அரச அச்சுக் கூட்டுத்தபானத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதேவேளை, அரச அச்சுக் கூட்டுத்தாபனத்துக்கு நேற்று இரவு முதல் அதிகரிக்கப்பட்ட விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற 7 ஆவது நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முடிவடையவிருந்த நிலையில், அதற்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி, எட்டாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல்கள் ஜுலை 6 ஆம் திகதி முதல் ஜுலை 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (த-5)

## போர்க்

என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர்கள் அலுவலகத்தில் வைத்து ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ – மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை அரசு அண்மையில் நிறைவேற்றிய அரசமைப்புத் திருத் தம் தொடர்பிலும் பர்ஹான் ஹக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத் திருத்தம் சரியாக செயற்படுத்தப்பட்டால் ஜனநாயகம் மற்றும் சட்ட ஆட்சி தொடர்பான புதிய நம்பிக்கை ஏற்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போருடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யும் போது முழுமையான தேசிய ஒத்துழைப்பு மற்றும் இந்த நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் அரசு கலந்தாலோசிக்க வேண்டும் என்று பர்ஹான் ஹக் குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நம்பகமான வழிமுறைகளை முன்னெடுப்பதில் வெளிப்படையானதும் அனைத்தையும் உள்ளடக்கியது மான செயன்முறையின் அவசியம் குறித்து ஊக்குவிக்கும் கலந்துரையாடல்களை ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் இலங்கை அரசுடன் நடத்திவருவதாகவும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்றும், அதிகளவானோர் காயமடைந்தனர் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது,

அத்துடன், ஆயிரக்கணக் கான தமிழ் இளைஞர், யுவதிகள் கைதுசெய்யப்பட்டு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும், சரணடைந்த ஆயிரத்திற்கும் அதிகமான முன்னாள் போராளிகளின் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதம் வழங்கவேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-சி)

## அங்கீகாரமற்ற

என்று பல்வேறு கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் பிரதி, மதுவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்துள்ள ஆணையாளர், விதிகளுக்கு முரணாக அனுமதி வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்படும். அங்கீகாரமற்ற மதுபான விற்பனை நிலையங்களைத் தேடுதல் நடவடிக்கைகள் மூலம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாணத்திலுள்ள மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசின் கொள்கைப்படி, மதுபான விற்பனை நிலையங்கள் புதிதாக திறக்க அனுமதி வழங்கப்படாது என்று மதுவரி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீரியபெத்த மக்களுக்கு ஒக்ரோபர் 15 இல் வீடு

கொழும்பு, ஜூன் 27

மீரியபெத்த மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியால் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், மீரியபெத்தை மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29ஆம் திகதி பதுளை, கொஸ்லந்த, மீரியாபெத்தையில் இடம்பெற்ற மண்சரிவின்போது 34 பேர் உயிரிழந்திருந்ததுடன், 57 குடும்பங்களைச் சேர்ந்த 330 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட மக்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் அமைச்சரவையில் தெரிவித்திருந்தார். (த)

# எதிர்ப்பையும் மீறி 20 நிறைவேறும்

## அதன் பின்னரே சபை கலைப்பு என்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 27

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தாலும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20 ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றுவோம் என தெரிவித்த சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன, 20 ஐ நிறைவேற்றியதன் பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், 20 ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் சிறிய மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சி களின் நிலைப்பாடு என்ன என்பது புரியவில்லை எனத் தெரிவித்த அவர், இரட்டை வாக்குச் சீட்டு முறைமையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:–

20 ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டதன் பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும். புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படும் என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நாம் நிறைவேற்ற வேண்டும். 19 ஆவது திருத்தச் சட்டவரைவு கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்திலும் இதுபோன்ற எதிர்ப்புகள் காணப்பட்டன. இறுதி மணித்தியாலம்வரை நிறைவேற்றுவதற்கு இடமளிக்கப்படவில்லை. இவ்வா றாக பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே அனைவரிடமும் இணக் கப்பாட்டை ஏற்படுத்தி நிறைவேற்றினோம்.

19 ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்தவர்கள், 20 ஐ எதிர்க்கின்றனர். 19 இல் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அதனால், அனைவரும் முந்திக்கொண்டு ஆதரவளித்தனர். ஆனால், 20 அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய விடயம் என்பதால், அவை தமது நலன்குறித்து சிந்தித்து எதிர்ப்பு வெளியிடுகின்றன.

20 ஐ நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். அதாவது 151 வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தாலும், நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவோம்.



இதேவேளை, இந்த விடயத்தில் சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்று எனக்கு விளங்கவில்லை. அவை இரட்டை வாக்குச்சீட்டு முறைமையைக் கோருகின்றன. இதில் முதலாவது வாக்குச் சீட்டில் அரசியல் கட்சியையும், இரண்டாவது வாக்குச் சீட்டில் வேட்பாளரையும் தெரிவு செய்ய வேண்டும். அப்படியாயின், வேட்பாளர் தெரிவு என்று வருகின்ற சந்தர்ப்பத்தில் அது மீண்டும் விருப்பு வாக்கு முறைமைக்கே கொண்டுசெல்லும். அது பழைய நிலைமையையே உருவாக்கும். இதற்கு எம்மால் இணங்க முடியாது –என்றார். (த)

# பொதுத் தேர்தலை நடத்தி நல்லாட்சியை உணருங்கள்

## அரசிடம் கேட்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 27

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்வதன் [illegible]ம் நல்லாட்சியின் பிரதிபலிப்புகளை அரசு உணர்ந்துகொள்ளும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை தியத்தலாவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

நல்லாட்சி அரசின் செயற்பாடுகளின் விளைவுகளை மக்கள் தற்போது உணர்ந்து கொண்டிருக்கின்றனர். நல்லாட்சி என்ற போர்வையில் மக்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இதற்கு முடிவுகட்டும் காலம் வெகு விரைவில் வரும். ஆகவே, நாடாளுமன்றத்தைக் [illegible]லைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்லுமாறு இந்த அரசிடம் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். தேர்தலில் நல்லாட்சியின் பிரதிபலிப்புகளை அரசு உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

அமெரிக்காவின் தலையீட்டால் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனை நாங்கள் ஆரம்பத்திலே குறிப்பிடும்போது இனவாதம் பேசுவதாகக் குறிப்பிட்டனர். எனினும், தற்போது அந்நிலை உருவாகி வருகின்றதை அனைவரும் உணர்கின்றனர்.

30 வருடகால கொடிய போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டுக்குச் சேவையொன்றை ஆற்றியுள்ளமையினாலேயே தற்போதும் மக்கள் என்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். ஜனாதிபதியாக அல்லாது ஒரு தனி மனிதனாக வைபவங்களில் கலந்துகொள்ளும்போதும் மக்கள் வெள்ளம் திரண்டு வருகின்றமை அதற்கு அங்கீகாரமாகும்.

போரை நிறைவுக்குக் கொண்டுவந்த ஒரே காரணத்துக்காக எனக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்திச் சிறையில் அடைக்க ஜெனிவாவில் பேச்சு நடத்திவருகின்றனர். அது மாத்திரமல்லாது, அமெரிக்காவின் அழுத்தங்களினால் உள்நாட்டு விசாரணை முன்னெடுக்கவும் தற்போதுள்ள அரசியல் தலைமைகள் இணக்கப்பாட்டில் உள்ளன.

அமைச்சுப் பொறுப்புகளைப் பெற்றுக்கொண்டு இந்த அரசுக்கு வக்காலத்து வாங்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், மக்களை எந்நாளும் ஏமாற்றமுடியும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் –எனத் தெரிவித்தார். (த)

# பஸில் மீது மற்றுமொரு மோசடிக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 27

மஹிந்த அரசின் ஆட்சியில் இலங்கை சுற்றுலா அதிகாரசபை மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் ஆகிய நிறுவனங்களின் 570 லட்சம் ரூபா தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாப் பயணத்துறையை ஊக்குவிப்பதற்கெனக் கூறி, இந்தப் பணத்தை தேர்தல் பிரசாரச் செலவுகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். பிக்குமாரை கூட்டங்களுக்கு அழைத்துவரவும் அவர்களை மீண்டும் அழைத்துச்



சென்று விடுவதற்கும் 50 இலட்சம் ரூபாவைச் செலவிட் டுள்ளனர்.

இந்தப் பணத்தில் தலா ஒரு லட்சம் ரூபா என சகல விகாரைகளுக்கும் வழங்கியிருந்தால், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்திருக்கலாம்.

இந்த நிதிக் குற்றச்சாட்டு தொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களம் இது தொடர்பில் விசாரணைகளை நடத்தும் –என்றார். (த)

# உள்ளக விசாரணை சிறப்பாக நடக்கிறது

## மிருசுவில் எண்மர் கொலைத் தீர்ப்பு இதற்கு எடுத்துக்காட்டு என்கிறார் ராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 27

மிருசுவிலில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற எண்மர் கொலைகளுடன் தொடர்புடைய இராணுவ சிப்பாய்க்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமையானது இராணுவம் தொடர்பான இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறை செயற்படுகின்றமையை எடுத்துக்காட்டுகின்றது எனத் தெரிவித்த இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர, இந்த விசாரணை நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. 24 மணி நேரமும் இராணுவம் விழிப்புடன் செயற்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**கேள்வி:** நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு தற்போது அச்சுறுத்தல் உள்ளதா?

**பதில்:** தேசிய பாதுகாப்பு குறித்து அச்சமடையத் தேவையில்லை. 24 மணிநேரமும் இராணுவம் விழிப்புடன் இருக்கின்றது. இராணுவம் மிகவும் ஸ்திரமாகச் செயற்படுகின்றது. ஒவ்வொரு வாரமும் ஜனாதிபதி தலைமையில் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் நடைபெறுகின்றது. தேசிய பாதுகாப்பைக் குறைப்பதற்கு எமக்கு கட்டளை வழங்கப்படவில்லை.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு இராணுவம், பொலிஸ், கடற்படை, விமானப்படை, அரசு ஆகியவற்றிடம் மட்டுமல்ல. உங்களிடமும் (ஊடகங்கள்) உள்ளது.



தேசிய பாதுகாப்பில் நீங்களும் பங்காளர்கள்தான்–என்றார்.

**கேள்வி:** மிருசுவில் கொலை தொடர்பில் இராணுவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராணுவம் தொடர்பான விசாரணை குறித்து சர்வதேச ரீதியில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுவரும் நிலையில், இந்த விசாரணை நடவடிக்கைகள் தொடருமா?

**பதில்:** மிருசுவிலில் 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி இந்தக் கொலைகள் இடம்பெற்றன. இது போர் மிகவும் தீவிரமாக இடம்பெற்ற காலமாகும். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான 5 இராணுவச் சிப்பாய்கள், யாழ்ப்பாண நீதிமன்றம், அநுராதபுரம் நீதிமன்றம் ஆகியவற்றில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு, தற்போது கொழும்பு மேல்நீதிமன்றத்தால் ஒருவருக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய நால்வரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். எமது இந்த விசாரணைப் பொறிமுறை சிறப்பாகச் செயற்படுகின்றது. இதை முன்னோக்கி கொண்டுசெல்வோம் – என்றார். (த)

### இராணுவத்துக்கு சர்வதேச நெருக்கடி குழு பதிலடி

கொழும்பு, ஜூன் 27

மிருசுவிலில் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற எண்மர் கொலைகளுடன் தொடர்புடைய இராணுவத்தினர் ஒருவருக்கு சாவுத் தண்டனை வழங்கி கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் அடிப்படையில் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறை எங்ஙனம் சிறப்பாக இயங்குகின்றதென்பதற்கு இது சான்று பகர்கின்றதென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு இதேவிதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இராணுவப் பேச்சாளரின் கருத்து தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச நெருக்கடிக் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் அலன் கீனன்,

இலங்கையில் நீதி செயற்படுத்தப்படுகின்றது என்பதை காண்பிப்பதற்கு கீழ்மட்டத்திலுள்ள படையினருக்கு எதிராக 15 வருடகாலத்துக்கும் நீண்டகால வழக்கு விசாரணைகள் தேவையாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

### வீடு திரும்பினார் பஸில் ராஜபக்ஷ

கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் இருந்து வெளியேறிய பஸில் ராஜபக்ஷ முதலில் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின்போது எதிர்கால அரசியல் நகர்வு பற்றி கலந்துரையாடப்பட்டதாகப் பஸில் ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.லீக் - கண்டி லீக் இறுதியாட்டம் இன்று


யாழ்லீக்


கண்டி லீக்

யாழ்ப்பாணம் ஜூன் 27
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் தென் கொரியா, இலங்கை நட்புறவு வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திய 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கண்டி உதைபந்தாட்ட லீக் அணி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளது.
இன்றைய நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அநுர டி சில்வாவும், இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோவும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் பாலேந்திராவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)

# ஸ்ரீஅம்பாள், ஐக்கியம் அபாரம்

கரணவாய் ஜூன் 27
அமரர் குஞ்சன் ஞாபகார்த்தமாக கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில் நவிண்டில் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழகம் மற்றும் உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்பன வெற்றிபெற்றுள்ளன.

**இளைஞர் எதிர் ஸ்ரீஅம்பாள்**

கொலின்ஸ் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நவிண்டில் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் நவிண்டில் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழகம் 3:1 என்றகோல் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

**கொலின்ஸ் எதிர் உடற்கல்வி ஐக்கியம்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில்



உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழகவீரர் இந்துகான் தட்டிக் கொடுத்த பந்தொன்றை அவ்வணியின் மற்றொருவீரர் சந்திரகுமார் மிகநேர்தியாக தலையால் இடித்து கோலாக மாற்றினார். தொடர்ந்து இரு அணிகளாலும் மேலதிகமாக கோலெதுவும் பதியப்படாத நிலையில் 1:0 என்ற ஐக்கியத்தின் ஆதிக்கத்துடன் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.
இரண்டாம் பாதியின் எட்டாவது நிமிடத்தில் கொலின்ஸ் அணிக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அந்த வாய்ப்பு கோட்டைவிடப்பட தொடர்ந்து மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் 1:0 என்ற கோல் அடிப்படையில் உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (ம-108)

# இறுதிக்கு பறந்தது வைகறை

கடும் போராட்டத்தின் பின்னர் தாவடி காளி அம்பாள் அணியை வீழ்த்தி புதுமடம் வைகறை அணி இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது.
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மின்ஒளியில் நடந்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணி மோதிக் கொண்டது.
இதில் புதுமடம் வைகறை அணி 5:2என்ற பழங்கள்வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (23)

# இன்றைய மோதல்கள்

**வளர்மதி வி.க.தொடர்**

யாழ்ப்பாணம், ஜூன் 27
மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங் களுக்கு இடையில் நடத்தும் மென் பந்து தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் ஆரம்ப மாகவுள்ளது.
இந்தத்தொடரில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
முதலாவது ஆட்டத்தில்சிவன் அணியை எதிர்த்து பிக்வுட் அணியும், இரண்டாவது ஆட்டத்தில் வின்டோஸ் அணியை எதிர்த்து சீமா அணியும் மூன்றாவது ஆட்டத்தில் நியூபவர் அணியை எதிர்த்து கைதடி ஸ்ரீ விநாயகர் அணியும் நான்காவது ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து நாவற்குழி சான்றோர் அணியும் ஐந்தாவது ஆட்டத்தில் அம்பாள் அணியை எதிர்த்து சங்கத்தானை ஸ்ரீமுருகன் அணியும் ஆறாவது ஆட்டத்தில் கண்ணகை அணியை எதிர்த்து சங்கத்தானை ஞானதீபம் அணியும் மோதவுள்ளது. (ம-23)

**கொலின்ஸ் வி.க.தொடர்**

கரணவாய் கொலின்ஸ் வளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந் தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.
இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

**ஞானபாஸ்கரரோதய வி.க.தொடர்**

கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதய சங்க விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்டத்தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் (21-6-2015) குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. (ம)

## உதைபந்தாட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று

வலி.வடக்கு ஜூன் 27
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட அனைத்து உதைபந்தாட்டக் கழகங்களின் பிரதிநிதிகள் இருவரை இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்துக்கு வருகை தரும்படி வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் என்.யுவராஜ் தெரிவித்துள்ளார்.
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அநுர டி சில்வா மற்றும் செயலாளர் பாலேந்திரா இருவரும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட அனைத்து உதைபந்தாட்டக் கழகங்களின் பிரதிநிதிகளிடம் உதைபந்தாட்ட அபிவிருத்தி சம்பந்தமாக நேர டியாகக் கலந்துரையாடவுள்ளமையாலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-86)

## பல்கலைகளின் கரம் தொடர் இன்று

யாழ்ப்பாணம்,ஜூன் 27
யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இடையிலான கரம் தொடர் இன்றும், நாளையும் மகரகமவில் அமைத்துள்ள இலங்கை கரம் சம்மேளனத்தில் இடம்பெறவுள்ளது. இந்த தொடரில் 14 பல்கலைக்கழக அணிகள் பங்கு பற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# நடுவர்களின் அறிக்கைப்படி மத்திய கல்லூரியே சம்பியன்

யாழ்ப்பாணம் ஜூன் 27
வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் யாழ். இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டது. ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் ஏற்பட்ட குழப்பநிலைமை காரணமாக யாழ். இந்து மீள்பரிசீலனைக்காக முறையிட்ட நிலையில் ஆட்டம் உடனடியாக வெற்றிதோல்வி தெரியாமல் நிறைவடைந்தது. இந்த நிலையில் நடுவர்களின் அறிக்கைகளை ஆராய்ந்த வடமாகாண உடற்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் யாழ்.மத்தி சம்பியனானதாக அறிவித்துள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற குறித்த ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி 45:43 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலை வகித்த வேளையில் ஆட்டத்தின் நேரம் முடிந்துவிட்டதாக நடுவர் அறிவித் தார். ஆனால் உண்மையில் ஆட்டம் நிறைவடைய 2 செக்கன்கள் மேல திகமாக இருந்ததாக யாழ்.இந்து வின் பயிற்றுநர் தமது பக்கமிருந்த நியாயங்களை எடுத்துக்கூறியதுடன் ஆட்டம் முடிவடைய 2 செக் கன்கள் இருந்த வேளையில் மத்திய கல்லூரி வீரர் ஒருவர் முறை தவறி ஆடியதாகவும் அதை நடுவர் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் யாழ். இந்துக்கல்லூரி சார்பாக மேல்முறையீடும் செய்யப்பட்டது. இதனையடுத்து ஆட்டத்தின் முடிவு



உடனடியாக அறிவிக்கப்படாமல் ஆட்டம் முடிவுக்கு வந்ததுடன் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இறுதியாட்டத்துக்கு நடுவராக கடமையாற்றியவர்களிடம் வடமாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் உத்தரவிட்டிருந்தார். இந்த நிலை யில் நடுவர்களின் அறிக்கைகளை ஆராய்ந்த அவர் யாழ். மத்தி மாகா ணச் சம்பியனானதாக அறிவித்தார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.சி.சி.யின் தலைவராக பாகிஸ்தானின் அப்பாஸ்

பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராகவும் சிறந்த தலைவராகவும் திகழ்ந்த ஜாகீர் அப்பாஸ் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பொதுக்கூட்டத்தில் ஒருவருட காலத்துக்கு அப்பாஸ் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைப்பதவி தொடர்பாக அப்பாஸ் தெரிவித்ததாவது:–

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக நான் நியமனம் செய்யப்பட்டது கிரிக்கெட்டில் பக்கச் சார்பு இல்லை என்ற கருத்தை தீவிரமாக தெரிவிக்கிறது. கிரிக்கெட்டின் பரவலை தீவிரமாக்க வும் ஐ.சி.சி.யின் அங்கத்துவ நாடுக ளிடையே பரஸ்பரத்தை ஏற்ப டுத்தவும் ஐ.சி.சி. ஓயாது உழைக்க வேண்டும் – என்றார். (ம)

# இன்னிங்ஸ் தோல்வியடையும் இக்கட்டில் பாகிஸ்தான்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவான நேற்று பாகிஸ்தான் இலங்கை அணி ஒன்பது இலக்குகள் இழப்புக்கு 304 ஓட்டங்களைக் குவித்து 166 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஷ்பா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸிங்ஸிற்காக 138 ஓட்டங்களில் சுருண்டது.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல் ஐந்து இலக்குகளையும் பிரசாத் மூன்று இலக்குகளையும் சமீர ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

139 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் இலங்கையின் ஆரம்பவீரர்களாக களமிறங்கிய கருணாரத்ன மற்றும் சில்வா இணைப்பாட்டமாக முழுமையாக ஐம்பது ஓட்டங்களைப் பூர்த்தி செய்யவில்லை யாயினும் முதல் இன்னிங்ஸை முன்னிலை வகிக்கக்கூடிய இணைப்பாட்டத்தினை வழங்கினர். அணியின் ஓட்டம் 47 ஆக இருந்த வேளையில் கருணாரத்ன 28 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். சில்வா 21 ஓட்டங்களுடனும் சங்கா 18 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். அணியின் ஓட்டம் 98ஆக இருந்தபொழுது சங்காவின் ஆட்டம் அரைச்சதத்தை தவறவிட்டு நிறைவுக்கு வந்தது. வந்த வேகத்தில் விடைபெற்றார் திரிமன்னே. தற்பொழுது இலங்கை 119–3. சில்வாவுடன் இணைந்தார் மத்தியூஸ். இணைப்பாட்டம் வலுப்பெற்றதுடன் இலங்கை மேலதிக இலக்கு இழப்பில்லாமல் பாகிஸ்தானின் ஓட்டத்தை சமன்



செய்தது. அணியின் ஓட்டம் 191ஆக இருந்தபொழுது அரைச்சதம் கடந்து வெளியேறினார் சில்வா. சந்திமல் ஓர் ஓட்டத்துடனும் விதானகே மூன்று ஓட்டத்துடனும் பவிலியன் திரும்ப இலங்கை திடீரென சரிவு கண்டது. ஆனபோதிலும் விடவில்லை மத்தியூஸ். பிரசாத்துடன் இணைந்து பலம்பெற்றிருந்த இலங்கையை மேலும் பலம்பெறச் செய்தார். அரைச்சதத்தை தவற விட்டு பிரசாத் ஆட்டமிழந்த சில பந்துப் பரிமாற்றங்களில் சதத்தை தவற விட்டார் மத்தியூஸ். நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் இலங்கை 304–9.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சாஜ் 5 இலக்குகளையும் யுனைட் கான், பாபர், ஹபீஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். நேற்றைய நிலைவரப்படி இலங்கை 166 ஓட்டங்கள் முன்னிலையிலுள்ளது.

(ம)

## இந்தியாவையே வீழ்த்திய எம்மால் எவரையும் வீழ்த்த முடியும் – மோர்ரசா

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான தொடரை 2:1 என்ற கோல் அடிப்படையில் கைப்பற்றி அசத்தியது பங்களாதேஷ். எதிரணிகளை கிலிகொள்ள வைக்கும் இந்தியாவையே சாதாரணமாக வீழ்த்தி விட்டதால் எந்த அணியையும் வீழ்த்தக்கூடிய திறமை தற்பொழுத பங்களாதேஷ் வீரர்களிடம் இருப்பதாக அந்த அணியின் தலைவர் மோர்ரசா தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷின் எழுச்சி தொடர்பாக மோர்ரசா தெரிவித்ததாவது:–

நடப்புவருட உலகக்கிண்ணத் தொடரில் நாங்கள் முதல் முறையாக காலிறுதிவரை முன்னேறி சாதனை படைத்தோம். அதை தவிர்த்து பார்த்தால், இந்தியாவுக்கு எதிரான தொடரை வென்றதே எங்களது மிகச் சிறந்த செயற்பாடாகும். ஐ.சி.சி. தரவரிசையில் முதல் 4 இடங்களுக்குள் உள்ள அணிக ளுக்கு எதிரான தொடரை இதற்கு முன்பு நாங்கள் வென்றதில்லை. அந்த வகையில் இந்தியாவுக்கு (தரவரிசையில் 2ஆவது இடம் வகிக்கும் அணி) எதிரான தொடரில் கிடைத்த இந்த வெற்றியே மிகச் சிறந்தது. கிரிக்கெட்டில் பலம்மிக்க இந்தியாவை வீழ்த்திவிட்டதால் இனிமேல் எந்த அணியையும் வீழ்த்தும் திறமை பங்களாதேஷுக்கு உள்ளது – என்றார். (ம)



## சண்முகராஜா ஞாபகார்த்த கிண்ணம் தர்மபுரம் மத்திய கல்லூரியிடம்



யாழ்ப்பாணம், ஜூன் 27

சண்முகராஜா ஞாபகார்த்த கிண்ணத்தினை சொந்தமாக்கியது தர்மபுரம் மத்திய கல்லூரி.

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சண்முகராஜாவின் ஞாபகார்த்தமாக குறித்த பாடசாலை கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் 19வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டத் தொடரொன்றை நடத்தி வந்தது. குறித்த தொடரின் இறுதியாட்டத்தில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வீரன் டிலோசனும் தொடராட்ட நாயகனக கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியின் வீரன் ஜெ.விதுசனும் தெரிவான அதேநேரம் சிறந்த கோல் காப்பாளராக முழங்காவில் மகா வித்தியாலய அணியின் கோல் காப்பாளர் பிரணவன் தெரிவானார்.

(ம–23)

## சங்கா இன்னும் முடிவில்லை



டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து சங்க காரா இன்னும் முடிவு செய்ய வில்லை என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்டக்காரர் சங்ககாரா, ஒருநாள் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட நிலையில், சொந்த மண்ணில் நடக்கவிருக்கும் இந்தியாவுக்கு எதிரான தொடரோடு டெஸ்ட் ஆட்டங்களில் இருந்தும் ஓய்வு பெற முடிவு செய்திருந்தார்.

பின்னர் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ், சக வீரர்கள், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை இவர்களின் வேண்டுதலின் பெயரில் தனது முடிவை மறுபரிசீலனை செய்து வருகிறார்.

இந்த நிலையில் சங்காவின் முடிவு தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது:–

சங்கக்காரா டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவது தொடர்பாக தெரிவாளர்களுடன் தொடர்ந்து ஆலோசித்து வருகிறார். அவர் இலங்கை அணிக்காக அதிக பங்களிப்பு செய்துள்ளார். அவர் ஓய்வு பெறுவது உறுதியானால் அந்த முடிவு எங்களுக்கு மிகப் பெரிய இழப்பு. ஜெயவர்த்தனே, சங்ககாராவின் இடங்களை இளம் வீரர்களை கொண்டு நிரப்பு வது மிகவும் கடினமான விடயமா கும். சங்கக்காரா இன்னமும் சில காலம் எம்முடன் இணைந்திருப்பதையே விரும்புகிறோம் – என்றார். (ம)

## யாழ். இந்துவிடம் வீழ்ந்தது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம் ஜூன் 27

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 17வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றில்; யாழ். இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டதிடலில் இடம்பெற்ற குறித்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்துக்கல்லூரி 44:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ம–23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தொடரில் ஏற்பட்ட தோல்வி மொத்த வரலாற்றையும் மாற்றிவிடாது

பங்களாதேஷுக்கு எதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் ஆட்ட நாயகன் விருது பெற்ற சுரேஷ் ரெய்னா, ஒரு தொடரை இழந்தவுடன் இந்திய அணி மோசமான அணி ஆகிவிடாது. கிரிக்கெட்டின் பிரதான அணிகளுள் இந்தியாவும் ஒன்று. பிரதான தலைவர்களில் டோனியும் ஒருவர் என்று தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷிடம் தொடரை இழந்தது தொடர்பாகவும் டோனியின் தலைமைத்துவம் தொடர்பாகவும் ரெய்னா தெரிவித்தவை வருமாறு: 'பங்களாதேஷுக்கு எதிராக தொடரை இழந்த இதே இந்திய அணிதான் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதை மறந்து விட வேண்டாம். ஒரு தொடரை வைத்து ஒரு அணி மோசமாக போய்விட்டது என்றோ அல்லது பிரமாதமானது என்றோ நாம் கூறுவதற்கில்லை. டோனி சாதித்ததை நாம் மதிப்புக் குறைவாக பேசக்கூடாது. அவர் இந்தியக் கிரிக்கெட்டுக்காக நிறைய கிண்ணங்களை பெற்றுத் தந்துள்ளார். அவர் ஒரு நல்ல மனிதர், நேர்மையாளர். ஒரு தொடர் அவரை மோசமாகச் சித்தரித்து விடாது. அவர் ஒரு நல்ல வழிகாட்டி, தலைவர், ஓய்வறையில் அவரை நாங்கள் மிகவும் நேசிக்கிறோம். இன்னும் அவரிடம் நிறைய கிரிக்கெட் திறன்கள் இருக்கின்றன, எனவே பொறுத்திருந்து பாருங்கள்.' – என்றார். (ம)




## தவறிவிட்டது

கந்தையா செல்வரத்தினம் என்பவரது 470462809V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், ரைக்ஸ் என்பன கரும் நீல நிறமுடைய மணிப்பேசுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு இலக்கம்: 0772 479144

(61338) (10.6.1)

## SEMINAR (கருத்தரங்கு)

B.A பேராதனை பல்கலைக்கழகம்(வெளிவாரி)

PHILOSOPHY (மெய்யியல்) (ஞாயிறு) 28.06.2015 காலை 8 மணி

GEOGRAPHY (புவியியல்) 11.07-12.07 காலை 8 மணி (சனி, ஞாயிறு)

* பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடத்தப்படும் விஷேட கருத்தரங்கு

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 021 222 8148

(C16221)


# கிண்ணம் வெல்லும் முனைப்பில் ஆனந்த்

நோர்வே செஸ் தொடரின் 8ஆவது சுற்றில் நோர்வே வீரர் லுத்விக் ஹாமர் என்பவரை இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் வீழ்த்தி 5.5 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்துக்கான மோதலில் டோபலோவை சந்திக்கவிருக்கிறார்.




டோபலோவ், தனது 8ஆவது சுற்றில் ஆனிஷ் கிரி என்பவரிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்ததால் 6 புள்ளிகளில் இருக்கிறார். ஆனந்த் 8ஆவது சுற்றில் ஹாமரை வீழ்த்தியதால் 5.5 புள்ளிகளுடன் இருக்கிறார். எனவே அடுத்ததாக நடைபெறும் டோபலோவ் – ஆனந்த் போட்டி சாம்பியன் பட்டத்துகான மோதலாக அமைகிறது.

இந்த ஆட்டத்தில் டோபலோவ் சமநிலைக்காக ஆடினாலே போதும், ஆனால் ஆனந்த் வெற்றிக்காக ஆடினால்தான் கிண்ணம் வெல்ல முடியும். ஆனந்த் – டோபலோவ் ஆட்டம் இன்று நடைபெறுகிறது. (ம)

# ஓய்வின் பின்பும் சங்கா ஓயாத ஆதிக்கம்



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான தரவரிசையில் சங்கா இரண்டாவது இடத்தையும் டில்சான் ஐந்தாவது இடத்தையும் பிடித்து அசத்தியுள்ளார்.

குறித்த தரவரிசையில் தென்னாபிரிக்க அணித்தலைவர் வில்லியர்ஸ் வழக்கம் போல் 902 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார். இரண்டாவது இடத்தில் சங்காவும் – மூன்றாவது இடத்தில் அம்லாவும் – நான்காவது இடத்தில் கோஹ்லியும்–ஐந்தாவது இடத்தில் இலங்கையின் சகலதுறை வீரர் டில்சானும் உள்ளனர். ஏழாவது, எட்டாவது இடங்களில் முறையே தவான் மற்றும் டோனி உள்ளனர்.

ஒருநாள் ஆட்டங்களில் இருந்து சங்கா ஓய்வை அறிவித்திருந்தாலும் தரப்படுத்தில் தொடர்ந்தும் வலுவான ஆதிக்கம் செலுத்தி வருகின்றமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (ம)

# அரையிறுதியில் வோஸ்னியாக்கி



ஏகான் சர்வதேச ரென்னிஸ் தொடரில் வோஸ்னியாக்கி பெட்கோவிக்கை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்தின் ஈஸ்ட்போர்ன் நகரில் நடந்து வரும் ஏகான் சர்வதேச ரென்னிஸ் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் டென்மார்க்கின் வோஸ்னியாக்கியும் ஜேர்மனியின் பெட்கோவிக்கும் பலப்பரீட்சை நடத்தினர். இந்த ஆட்டத்தில் வோஸ்னியாக்கி 7–5, 6–1 என்ற செற்களில் பெட்கோவிக்கை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார். போலந்தின் ரத்வன்ஸ்கா, சுவிஸ்ஸின் பென்சிக் ஆகியோரும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர். (ம)





## Knowledge Universe

British College of International Studies

IELTS -Life Skills
IELTS-AC/G
i-Spoken (International)

16 Yrs in Teaching

உங்களுக்கு வசதியான நேரத்தில் சர்வதேச பரீட்சைகளுக்கான மற்றும் தொடர்பாடலுக்கான ஆங்கிலத்தை 16 வருட அனுபவமுள்ள முதுமாணி MBA(London)ஆசிரியரிடம் கற்கலாம்.

Web: http://edu.kugroup.info

KU Education - 0777302882
626F/1,K.K.S.Rd,Jaffna


## கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடுகிறார் மரடோனா

ஊழல் முறைகேடு தொடர்பாக சர்வதேச கால்பந்து சம்மேளன நிர்வாகிகள் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக செப் பிளாட்டர் அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து பலரும் குறித்த வெற்றிடத்துக்கு போட்டியிட வரிந்து கட்டிக்கொண்டு வரிசையில் நின்றனர்.

இந்த நிலையில் ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் முன்னாள் சகாப்தமான மரடோனா சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடப் போவதாக தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.